சிங்கை அரசர்களின்

# அறுவை மருத்துவம்




இராஜசேகரம்


வெளியீடு

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்
(திருமூலர் சித்த மருத்துவ ஆராய்ச்சிப் நிறுவனம்)
23.12.2010

சிங்கை அரசர்களின்

# அறுவை மருத்துவம்

## இராஜசேகரம்




வெளியீடு

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | சிங்கை அரசர்களின் அறுவை மருத்துவம் |
| ஆசிரியர் | : | இராஜசேகரம் |
| மொழி | : | தமிழ் |
| முதற் பதிப்பு | : | 2010 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| அச்சுக் கோவையும் வடிவமைப்பும் | : | சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம். |
| வெளியிடுவோர் | : | சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம். இல-03 றிட்ஜ்வே ஒழுங்கை, கொழும்பு- 04, இலங்கை. (+94) - 112 - 554759 |
| அச்சக உதவி | : | ப. புகழேந்திரன் தொ. பே: +94 778 164420, +94 723 55 0091 |
| ISBN | : | 978 - 955 - 0547 - 00 - 5 |

| | | |
|---|---|---|
| Title | : | SINGAI ARASARKALIN ARUVAI MARUTHUVAM |
| Author | : | Rajasekaram |
| Language | : | Tamil |
| First Edition | : | 2010 |
| Copy right to | : | Author |
| Type setting & Designing | : | Youth League for Sanathana Dharmic Perception |
| Published By | : | Youth League for Sanathana Dharmic Perception No- 03, Ridgeway Place, Colombo - 04, Sri Lanka. (+94) - 112 - 554759 |
| Printing Assistance | : | P. Pugalendran Tel:+94 778 164420, +94 723 55 0091 |
| ISBN | : | 978 - 955 - 0547 - 00 - 5 |

# சிறப்பு பாயிரம்

**"மன்னுயிர் காப்பவர் மாந்தருள் தெய்வம்"**

மரபுரிமைகளும் விழுமியங்களும் பேணப்படுவதற்கு அவற்றிற்கான சான்றுகளும், ஆதாரங்களும் அவசியமானதொன்றாகிறது. இந்த ரீதியில் இன்று விஞ்ஞான வளர்ச்சியின் உச்சக் கட்டத்தில் நாகரிகமடைந்த மனித இனத்தின் ஆரோக்கியச் சவால்களுக்கிடையே, நவீன மருத்துவ வளர்ச்சிக்கு முன், சுதேச மருத்துவர்கள் நவீன உபகரணங்களைப் பாவிப்பதும், கேள்விக் குறியாகி விடக்கூடிய கால கட்டத்தில், சிங்கை அரசர்களின் அறுவை மருத்துவம் என்னும் இந்நூல் தமிழ் மருத்துவத்தின் தொன்மைக்கும், தமிழர் மருத்துவத்தில் அறுவைச் சிகிச்சையின் பங்களிப்புக்கும் பல சான்றுகளை வெளிப்படுத்துகிறது மட்டுமன்றி, மருத்துவ உபகரண பரிணாம வளர்ச்சியையும் சுட்டி நிற்கின்றது. தமிழர் அறிவுக் கருவூலமான தமிழ்மருத்துவம், அறுவைச் சிகிச்சை முறை வழக்கிலிருந்து அருகிவருவது தெரிகிறது.

மிகப்பழைய காலத்திலிருந்தே வன்மவிதிகளும் அறுவை விதிகளும் மிகவும் இரகசியமாகப் பேணப்பட்டு வருகின்றன. இவற்றிற்குரிய நூல்கள் அரிதாகிப் போகின்ற நிலையும், கிடைக்கின்ற மருத்துவ நூல்களை விளங்கிக் கொள்வது மிகவும் கடினமான நிலையாகவும் காணப்படுகின்றது. அதற்கு தமிழ்யாப்பு, தமிழ்ச்சோதிடம், தமிழ் மருத்துவம், தமிழ் மாந்திரிகம் தெரிந்திருத்தல் அவசியம் என்கிறார் நூலாசிரியர் தமிழ் மருத்துவம் தனது பரிமாணங்களில் குறுகி ஓர் குறிப்பிட்ட எல்லைக்குள் முடங்கிக் கொண்டிருக்கும் போது, இலங்கையில் இயற்றப்பட்ட தமிழ் மருத்துவ நூல்களாகிய சிங்கை அரசர் நயனவிதி, செகராச சேகரம், பரராசசேகரம் என்னும் நூல்களைத் தந்த சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகளான குலசேகரன், செகராசசேகரன், பரராசசேகரன் இவர்கள் அறுவை மருத்துவத்தில் சிறந்து விளங்கி தமது மருத்துவ நூல்களில் அறுவை மருத்துவம் பற்றியும் கூறியுள்ளதை, அவ்வரசமரபில் வந்த ஆசிரியர் உயர் இராசமதிப்பிற்குரிய இளவரசர் இராசசேகரம் இந்நூல் மூலம் வெளிக் கொணர்ந்துள்ளார்.

தமிழ் மன்னர்களான சிங்கை அரசர்காலத்தில் தமிழ் மருத்துவர்கள் அறுவைச் சிகிச்சையில் தேர்ச்சி பெற்றிருந்ததையும் தேர்ச்சி பெற்றவர்களுக்கு செப்புபட்டயங்கள், வெள்ளிச் செப்பு என்பவை வழங்கும் முறை 20ம் நூற்றாண்டுவரை தொடர்ந்திருந்தமையும், நிகழ்கால சான்றுகளுடன் குறிப்பிட்டுள்ளமை தமிழ் மருத்துவ சீர்மைக்கும் மேன்மைக்கும் சான்றாகிறது.

தமிழ் மருத்துவ பிரிவுகளான மானிட, தேவ, இராக்கத சிகிச்சை முறைகளை குறிப்பிட்டு, இராக்கத மருத்துவத்தின் அறுவைச் சிகிச்சையை செய்பவர் ஆசுரி என்றும், வன்ம விதியை கையாள்பவர் வர்மானி என்றும் அழைக்கப்பட்ட விபரங்களும், 14 வகையான சிகிச்சைப் பிரிவுகளும் கூறப்பட்டுள்ளது. இராக்கத மருத்துவம் என்னும் தலைப் பின் கீழ் வெளி மருந்துகள் 32ம் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அடுத்து வன்மவிதி, வர்ம மருத்துவம் பற்றிய குறிப்புகள் தமிழ் மருத்துவ துறையின் கவனத்திற்கும் ஆய்வுகளை மேற்கொள்ளவும் ஏனைய மருத்துவ துறைகளுடன் ஒப்பு நோக்கவும் வழிகோலுகிறது.

அறுவை மருத்துவம் தமிழ் மருத்துவத்தில் சிறப்புற்றிருந்ததை விளக்கும் பல வரலாற்றுச் சான்றுகள் கிரேதாயுகத்திலிருந்து அண்மைக் காலம் வரை குறிப்பிட்டு அறுவைச் சிகிச்சைக் கருவிகள், அவற்றின் உருவங்கள், பயன்பாடுகள், உருவப்படங்களுடன் விளக்கப்பட்டு, சத்தகவிதி, சுட்டிகை விதி, சிரைவிதி, அட்டை விதி என்னும் தலைப்புகளில் என்னென்ன நோய் நிலைகளில் எவ்வாறு கத்தி கருவிகள் கையாளப் பட வேண்டும். அவை எவ்வாறு அமைதல் வேண்டும் என்பவை பற்றி விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறுவை மருத்துவனின் தகைமைகள், தன்மைகள், மட்டுமன்றி, நாள்நிலை, கோள்நிலை தெரிந்து சோதிட அறிவு உள்ளவனாக இருக்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தி உள்ளமை, தற்கால மருத்துவ சமூகத்தின் அறிவியல் வியாபிக்கப்பட வேண்டிய துறையை அறியத் தருகின்றது. மேலும் தமிழ் மருத்துவத்தில் அறுவைச் சிகிச்சைப் பிரிவு உண்டா? பல்கலைக் கழக பட்டப்படிப்பில் அறுவைச்சிகிச்சை மானிப்பட்டம் ஏன் வழங்கப்படவேண்டும் என்பது போன்ற பல வினாக்களுக்குரிய பதில் இந்நூலில் காணப்படுகிறது. சத்தகவிதிக்கு முன் வன்ம விதி பற்றிக் குறிப்பிட்டு, சத்திர சிகிச்சையில் வன்மவிதியின் பயன்பாடு பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது, வன்மம், வர்மம், என்பவற்றுக்கான விளக்கங்களும் இந்நூலின் சிறப்பான விடயங்களாகும்.

வர்மக்கலை கி.பி 7 ம் நூற்றாண்டில் யாழ்ப்பாண மருத்துவர்களால் இந்தியாவின் கன்னியாகுமாரிக்குப் பரவியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு சான்றாக Dr. MGR மருத்துவப் பல்கலைக்கழக – பாளையங் கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியின் உதவி பேராசிரியரான நாகர் கோவிலைச் சேர்ந்த அமரர் ஜோசப் தாஸ், தம்மிடம் வர்மக்கலை பற்றிய ஓலைச்சுவடிகள் இருப்பதாகவும் அதில் யாழ்ப்பாணத்துக்குத்து, பச்சை வெட்டு சூரணம் என்பவை குறிப்பிடப்பட்டு இலங்கையை பற்றி குறிப்பிட்டிருந்ததையும் நேரடியாக, நான் அங்கு பட்ட

மேற்படிப்பை மேற்கொண்டிருந்த போது குறிப்பிட்டு வர்மக்கலையை பற்றிய ஆய்வுகள் இலங்கையிலேயே மேற்கொள்ள வேண்டும் எனக் கூறினார்.

சிங்கை அரசர்களின் வழித்தோன்றலான இந்நூலாசிரியர், இராசசேகரம், குலசேகரம், தமிழர் சுகாதாரம், முத்தூர் அகத்தியர், இராவணசுவரன் இந்திர உலா, பல்லவராசசியம் என்னும் நூல்களை எழுதியவர். மருந்து, மருத்துவ மலர் இதழ்களின் ஆசிரியராக பணியாற்றியவர். 1987 முதல் 1997 வரை இலங்கை தமிழ் மருத்துவ ஆராய்ச்சி மன்றத்தின் ஊடக இலவச சித்தா சுகாதார சேவையை வடமாகாணத்தில் பல பகுதிகளிலும் நடாத்தி, இடம் பெயர்ந்து அவதிப்பட்ட மக்களின் நோய் வேதனைகளைப் போக்கியவர். மருத்துவத்தில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்தவர். கூட்டுறவுச் சங்க அமைப்புகளுக்கு கௌரவ சிறப்பு மருத்துவ ஆலோசகராகப் பணியாற்றியவர். சுகாதார அமைச்சில் சுதேச மருத்துவ பணிப்பாளராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

இந்நூல் மருத்துவ பட்டதாரி மாணவர்களுக்கும், மருத்துவர்களுக்கும் எல்லோருக்கும் பயன் தரக்கூடியதாகையால் எல்லோரும் அவசியம் படிக்க வேண்டும். தன் உள்ளுணர்வினால் உந்தப்பட்டு தமிழ் மருத்துவத்திற்கும், தமிழ்த் துறைகளுக்கும் உரிய தேடலில் ஈடுபட்டு அரிய புதிய கருத்துக்களை துணிவுடன் தருபவர். இவரின் அறிவியல் கருத்துக்கள் அறிவியல் உலகில் பேசப் படவேண்டியவையாகும்.

**வாழ்க தமிழ்! வளர்க தமிழர் தம் அறிவியல்!**

**வைத்திய கலாநிதி (திருமதி) வி. செல்வநாதன்**
**B.S.M.S. (Cey), M.D (Sid. Medicine) India.**
**Consultant Physician,**
ஆராய்ச்சியாளர்,
திருமூலர் சித்த மருத்துவ நிறுவனம்,
முகாமைத்துவ சபை உறுப்பினர்,
சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்

உயர்திரு **டி. எம். சுவாமிநாதன்** அவர்களின்

# பதிப்புரை

எங்களுடைய சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம், மனித மேம்பாட்டுடையவர்களாகவும், மனித நேயமுள்ளவகளாகவும் மக்களை ஆக்குவதற்காக, 1994 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இக்கழகம் இந்நோக்கங்களை செயற்படுத்துவதற்காக யோகாசன பயிற்சிகள், தியான வகுப்புகள், அறநெறிப்பாடசாலைகள், சைவசித்தாந்த வகுப்புகள், திருமூலர் சித்த மருத்துவ ஆராய்ச்சி பிரிவு ஆகியவற்றை நடாத்தி வருகின்றது. சிங்கை அரசர்களின் அறுவை மருத்துவம் என்ற நூலினை பதிப்பித்து வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். சிங்கை அரச குடும்பத்தில் தோன்றிய இளவரசர் இராசசேகரம், இராக்கத மருத்துவம், வன்மவிதி, அறுவை மருத்துவம், சத்தக விதி என்று பல தலைப்புகளில் சிறப்பாக இந்நூலை எழுதியுள்ளார். இவர் திருமூலர் சித்த மருத்துவ ஆராய்ச்சி பிரிவின் ஒரு ஆராய்ச்சியாளர் ஆவர். இன்றைய கால கட்டத்தின் கட்டாய தேவையாக இந்நூல் உள்ளது. தமிழ் மருத்துவப் பட்டப்படிப்புக்கும், மருத்துவ மாணவர்களினதும், மருத்துவர்களினதும் தேவைகளை இந்நூல் நிறைவு செய்யும். மிக நீண்ட காலமாக தமிழ் மருத்துவர்களால் செய்யப்பட்டு வந்த அறுவை மருத்துவம் இன்று வழக்கொழிந்து வருவது வருத்தத்திற்குரியது. மீண்டும் தமிழரின் அறுவை மருத்துவம் எழுச்சி பெற்று விளங்க இந்நூல் பேருதவி புரியும் தமிழ் மருத்துவ அறுவை மருத்துவம் பற்றிய ஐயங்களை நிச்சயமாக போக்கும்.

இந்நூல் வெளிவருவதற்கு ஊக்கமய் இருந்து உதவி ஆற்றிய

கழகத்தின் உபதலைவர் திரு. சுந்தரலிங்கம் சுதிர்தரன் அவர்களுக்கும், நூலை சிறப்பாக வெளியிடுவதற்கு காரணமாக இருந்த கழகத்தின் பொதச் செயலாளர் திரு. சிறீஸ்கந்தராஜா தினேஸ்குமார் அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

இந்நூல் தமிழ்மருத்துவத்திலும் வாழ்விலும் முன்னேற்றங்களை ஏற்படுத்த எனது நல்லாசிகளை தெரிவித்துக்கொள்கிறேன். நூலாசிரியர் மேலும் பல நூல்களை எழுத என் நல்லாசிகள் உரித்தாகுக.

**உயர் திரு. டீ. எம். சுவாமிநாதன்,**

பாராளமன்ற உறுப்பினர்,

அக்கிராசனர்,

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்.

# நூல் முகம்

சிங்கை அரசர்களின் வெற்றிக்கும், புகழுக்கும், கீர்த்திக்கும், அவர்கள் அறுவை மருத்துவத்தில் பெற்றிருந்த திறமை, ஆற்றல் பேருதவியாக இருந்துள்ளது. சிங்கையில் குலசேகரன், சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி என முதலில் போற்றப்பட்டவன். செயவீரன், செகராச சேகரன் என்று புகழ் பெற்றவன். செகராச சேகரம் 2000, செகராசசேகரமாலை, தட்சிண கைலாசபுராணம் என்ற நூல்களை இயற்றியவன். செகராசசேகரம் பெரும்பாலும் அறுவை மருத்துவம் பற்றிய நூலாகும். செகராசசேகரன் அறுவை மருத்துவத்தில் மிகத்திறமை வாய்ந்தவன். பரராசசேகரன், பரராசசேகரம் 12000 பாடல்களைக் கொண்ட மருத்துவ நூலை இயற்றியவன். இன்று செகராசசேகரம் 200 பாடல்களும், பரரராசசேகரம் 7000 பாடல்களும் மட்டுமே கிடைத்துள்ளன. இவற்றை வாசித்து அறிந்து விளங்கிக் கொள்வது இலகுவானது அல்ல. தமிழ் மருத்துவத்தின் அறுவைச் சிகிச்சைப் பிரிவு மறைக்கப்பட்டும், மறுக்கப்பட்டும் வருகின்ற நிலை நன்மை தராது. அறிவு, திறமை, வசதி, கடமை உள்ளவர்கள் இதனைக் காப்பற்ற முன்வர வேண்டும். சிங்கை (சங்கை, சங்கானை) அரசர்களாகவும்,ஆரியச்சக்கரவர்த்திகளாகவும் இருந்த எனது முன்னோரால் பயன்படுத்தப்பட்டு வந்த கத்தி கருவிகளையும், பயன்படுத்தும் முறைகளையும் ஒழுங்கு முறையாகத் தொகுத்து, தமிழ் மருத்துவ உலகமும், தமிழர்களும் பயன்பெற வேண்டும் என்பதற்காக, சிறு நூலாக எமது பரிச்சயத்தைக் கொண்டு எழுதி உள்ளேன்.

சிங்கை நகர் தமிழரசர்கள் மருத்துவத் துறைக்கு செய்த பணிகள் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பொற்காலமாகும். பல மருத்துவசாலைகளை நிறுவி மானியம் வழங்கி வந்தார்கள். மருத்தர் குழுவை அமைத்து மருத்துவத் துறையை பராமரித்தார்கள். சிங்கை அரசர்களினால் உருவாக்கப்பட்ட செப்பு வழங்கும் முறை, அதன் பட்டயம், அதன் அரச ஆணை வியக்க வைக்கிறது. இருபதாம் நூற்றாண்டிலும் இந்த ஒழுங்குகள் சிங்கை நாட்டில் வழக்கத்தில் இருந்து வந்தது. வைத்திய ஈசன் வைரமுத்து (யாழ்ப்பாணம் இலங்கா ஆயுர்வேத கல்லூரி விரிவுரையாளர்) கோமகன் தம்பிப்பிள்ளையிடம் செப்புப் பெற்றவர். கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டில் சிங்கை நாட்டு அறுவை மருத்துவர்கள் உடற்கூற்றியலை, சிங்கை நாடன் செகராசசேகரன் வாள் போர்க்களத்தில் வெட்டிவீழ்த்திய வடக்கர்களின் உடலைக் கீறி உறுப்புக்களை அளந்து, ஆய்ந்து ஐயம் சிறிதுமின்றி கற்றார்கள் என்று செகராசசேகர நூல் தெரிவிக்கின்றது. இவை எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன.

விஞ்ஞான வளர்ச்சியில் அவர்கள் அடைந்திருந்த உயர்ந்த நிலையைக் காட்டுகிறது. மேல்நாட்டில் கி.பி. 1543 இல் தான் முதன்முதலாக உடலை வெட்டிப் படித்தார்கள் என டாக்டர் சிற்சபை தெரிவித்துள்ளார். கி.பி 1843 ல் ஈதர் விறைப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. கி.பி 1881 ல் தான் குளோரபோம் மயக்க மருந்து பாவனைக்கு வந்தது. அதற்கு முன், பலர் நோயாளியை அமர்த்திப் பிடிக்க மருத்துவர் அறுவை சிகிச்சை செய்வார். கி.பி 13 ஆம் நூற்றாண்டில் சிங்கை அரசர்கள் அங்குசத்தினால் வன்மத்தில் குத்தி விறைக்கப் பண்ணி நோயாளிக்கு வலியின்றி அறுவைச் சிகிச்சை செய்து வந்தனர் என்பதை நூல்களால் அறிய முடிகிறது.

கி.பி 19ம் நூற்றாண்டில் இராசா குலசேகரம் உடலில் ஊசிகளைக்குத்தி ஆயுதம் பாவித்து குறுக்கே இருந்த பிள்ளையைப் பெறுவித்ததாக பேராசிரியர் வே. இராமகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார். சிங்கை அரசர்கள் தலைமுறை வழியாக தங்கள் வரலாறு, இரகசியங்களை அரச குடும்பத்தில் பேணி வருகிறார்கள். எமது தந்தை இராசா குலசேகரம் எமக்கு ஐயராக இருந்து வன்மவிதி, அறுவை விதி, சத்தகங்கள் பற்றி தெரிவித்தவற்றை, காண்பித்தவற்றை நான் எழுதியுள்ளேன். மேலும் கி.பி 1918ல் இராசா இராசசிம்மன் அறுவைச் சிகிச்சை செய்து குணமாக்கிய யாழ்ப்பாணம் மரக்காலை வேலுப்பிள்ளையிடம் நான் நேரில் கேட்டறிந்தவையையும் குறிப்பிட்டுள்ளேன். கி.பி 19ம் நூற்றாண்டில் அமெரிக்க மிசனரி டாக்கடர்கள் இலங்கைத் தமிழ் மருத்துவர்களை அறிவிலிகள் (Quacks) என்றும், தமிழ் மருத்துவம் விஞ்ஞான அடிப்படை இல்லாதது, வெறும் தூள், குளிகை, எண்ணெய் மருந்துகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. எண்ணெய் பூசுவதால் உடலில் எவ்வித குணத்தையும் ஏற்படுத்தாது, அறுவைச் சிகிச்சை என்பது தமிழ் மருத்துவத்தில் அறவே கிடையாது, மூடக்கருத்துக்கள் நிறைந்தவை என்றும் கேலி பண்ணினர். அமெரிக்க மிசனரியை பின்பற்றிய தமிழ் அறிவிலிகளும் அதை ஏற்றுக் கொண்டனர். இதனால் வெகுண்டெழுந்த இராசா குலசேகரம், அமெரிக்க மிசனரி மருத்துவர்களுக்கு, தமிழ் மருத்துவம் விஞ்ஞான அடிப்படையில் அமைந்தது. உயர்ந்த அறுவைச் சிகிச்சை முறைகள் தமிழ் மருத்துவத்தில் உண்டு என்று பாடம் புகட்ட தகுந்த சந்தர்ப்பங்களுக்காக காத்திருந்தார். அமெரிக்க மிசனரி தலைமை டாக்டரும், மானிப்பாய் ஆங்கில மருத்துவக் கல்லூரி அதிபரும், ஆங்கில வைத்தியசாலைகளின் தலைமை டாக்டருமான கிறீன் கி.பி 1865ல், பிள்ளை குறுக்கே இருந்த கர்ப்பிணிக்கு பெறுவிக்க எடுத்த முயற்சிகள் பலன் தரவில்லை. அறுவை சிகிச்சையின்றி பிள்ளையைப் பெறுவிக்க முடியாது என்று தெரிவித்து விட்டார். அறுவை சிகிச்சையை விரும்பாத கணவன் இராசா குலசேகரனிடம் (ஆறுமுகம்) மருத்துவம் பார்க்க விரும்புவதாக தெரிவித்தார். என்னால் முடியாததை அவரால் முடியுமா? என்று கேலியாக கூறிவிட்டு டாக்டர் கிறீன் நோயாளியின்

இல்லத்திலிருந்து சென்றார். இராசா குலசேகரம் கர்ப்பிணியின் உடலில் சில இடங்களில் ஊசிகளைக் குத்தி ஆயுதம் பாவித்து குழந்தையை வெற்றிகரமாக பெறுவித்தார். கேலி பண்ணியவர்களுக்கு அதிர்ச்சியாகவும், வியப்பாகவும் இருந்தது. அமெரிக்க மிசனரி டாக்டர்களுக்கு தமிழ் மருத்துவத்தின் விஞ்ஞானம் உறைத்தது, இருந்தாலும் நம்பமுடியாத அதிசயமாக இருந்தது.

கி.பி 1872ல் அடுத்த நிகழ்வு இடம் பெற்றது. டாக்டர் கிறீன் பிரசவம் பார்த்த பெண்ணின் கருப்பப்பை பிறழ்ந்து விட்டது. டாக்டர் கிறீன் கையினால் சரி செய்வதும் அது திரும்ப பிரண்டு விடுவதும் ஒரு கிழமை தொடர்ந்தது. கணவன், இராசா குலசேகரத்திடம் மருத்துவம் பார்க்க விரும்புவதாக டாக்டர் கிறினிடம் தெரிவித்தார். டாக்டர் கிறீன் தானும் இருந்து அவரின் சிகிச்சையை பார்க்க அனுமதி கேட்டார். நான் எதுவும் சொல்ல முடியாது இராசா குலசேகரத்திடம் கேளுங்கள், அவர் அனுமதித்தால் இருந்து பார்க்கலாம் அல்லது முடியாது என்றார். இராசா குலசேகரம் குதிரை இரதத்தில் வந்த இறங்கவும், டாக்டர் கிறீன் எழுந்து சென்று வரவேற்றார். இராசா குலசேகரம், நீங்கள் இருக்கும் போது நான் எதற்கு? நீங்களே மருத்துவம் பார்க்கலாம் தானே என்றார். அதற்கு டாக்டர் கிறீன், தமது இயலாமையையும், தமது சிகிச்சையில் குணம் ஏற்படவில்லை என்பதையும் தெரிவித்து விட்டு, தானும் இருந்து தமிழ்ச் சிகிச்சையை பார்க்க விரும்புவதாகவும் அதற்கு அனுமதிக்குமாறும் பரிவுடன் கேட்டுக்கொண்டார். இருந்து பார்க்குமாறு கூறிவிட்டு நோயாளியை பரிசோதித்து பின் ஒரு சிறிய சீசாவை நோயாளியின் மூக்கில் வைத்து நன்றாக மூச்சை உள் இழுக்கச் சொன்னார். கணப்பொழுதில் கருப்பப்பை தானாகவே தன்னிலைக்குச் சென்றது. தம்மால் ஒரு கிழமையாக செய்ய முடியாததை ஒரு கணப்பொழுதில் குணப்படுத்தியதைக் கண்டு ஆச்சரியமடைந்தார்.

டாக்டர் கிறீன், இராசா குலசேகரத்தை "The Grate Physician of Ceylon" என்று புகழ்ந்து பாராட்டினார். நூற்றுக்கணக்கான தமிழ் மாணவர்களுக்கு தமிழ்மொழி மூலம் அலோபதி மருத்துவம் கற்பித்த டாக்டர் கிறீன், இராசா குலசேகரனிடம் தமிழ் மருத்துவம் கற்க விரும்பி கேட்டார். டாக்டர் கிறீன், சுழிபுரம் இராவா குலசேகரள் மாளிகைக்கு ஒருவருடகாலம் சென்று பாராட்டியதையே தமிழில் பெரியபரிகாரியார் என மக்களும் மருத்துவர்களும் போற்றினர். பண்டிதரத்தினம் C.S நவரத்தினம் இச்சம்பவத்தையே "இலங்கைக்குப் புகழ் சேர்த்தவின் தமிழ் மருத்துவர் ஸ்ரீ ஆறுமுகம் சுழிபுரம் பெரியபரிகாரியார் " என்று 26.01.1969 வீரகேசரியில் தலையங்கமாக குறிப்பிட்டுள்ளார். தமிழ்ப் பற்றோ, தாய்நாட்டுப் பற்றோ இலலாதவர்கள் சிங்கை நாட்டில்

எழுதப்பட்டுள்ள வரலாறுகளைக் கூட பேணத் தவறிவிட்டனர்.

1929ல் யாழ் இந்துக் கல்லூரியில் நியாயவாதி எஸ். இராசரத்தினம் தலைமையில் நடந்த கூட்டத்தில் சேர். பொன். இராமநாதன் உரையாற்றுகையில், இராசா சுப்பிரமணியத்தின் வீரத்தையும், அவர் ஆட்சியின் வெற்றியையும், 1912ல் தாம் அவரைக் காப்பாற்றியதையும், வழக்கிலும் தான் ஏற்பட்டு வெற்றி பெற்றதையும், அவரின் மருத்துவப் புலமையையும் பாராட்டிப் பேசினார். மேலும் இராசா குலசேகரத்திடம் தாம் கண்பார்வைக் குறைவுக்கு சிகிச்சை பெற்றதையும், பறாளை விநாயகருக்கு பீடம், கோமுகைக்கல் அன்பளிப்புச் செய்தமைபற்றியும் அவரின் மருத்துவச் சிறப்புக்கள் பற்றியும் புகழ்ந்து பேசினார். சுழிபுரத்தில் 1982ல் பேராசிரியர் வே. இராமகிருஷ்ணன் தலைமையில் நடந்த இராசா குலசேகரம் விழாவில் முதன்மை விருந்தினரான யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் இ. கனகசுந்தரம் பேசுகையில், தமிழ் மருத்துவர்களுக்கு ஆங்கில கருத்துவமும் போதிக்கப்பட்டு நன்றாக அறிந்துள்ளனர். "ஆங்கில மருத்துவர்களுக்கு தமிழ் மருத்துவம் பற்றி எதுவும் தெரியாது. தமிழ் மருத்துவம் பற்றி போதிப்பதற்காக, தமிழ் மருத்துவ நூல்களை வைத்திய கலாநிதி பாலசுப்பிரமணியம் எளிய தமிழில் எழுதி உதவ வேண்டும்". என என்னடம் பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்தார். அன்றிலிருந்து அவர் வேண்டுகோளை ஏற்று எழுதி வருகிறேன். மேலும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழ்த் தலைவரும், எதிர்க்கட்சி முதல்வருமான அ.அமிர்தலிங்கம், சிங்கை அரசர்களினதும், அரச குடும்ப மருத்துவர்களினதும் சிறப்புபற்றி உரையாற்றினார். பல பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட சபை உறுப்பினர்கள், மேயர் விசுவநாதன், மேலதிக அரசாங்க அதிபர் சோ. அருணாசலம், கல்லூரி அதிபர் க.அருணாசலம் மருத்துவ அறிஞர்கள் என பல கனவான்கள் உரையாற்றினர்.

சிங்கை அரசு மீண்டும் எழுச்சி பெற்று சோழர்களை வெற்றி கொள்ள வைத்தவர் பாம்பாட்டி சித்தர். சிங்க நகருக்கு மிக அண்மையில் சித்தன்கேணியில் வசித்தவர். அவர் பெயராலேயே அவ்வூர் சித்தன்கேணி என அழைக்கப்படுகிறது. இரசவாதம், மருத்துவம், மாந்திரிகத்தில் சிறந்து விளங்கியவர். அவருடைய மருத்துவ முறைகள் பாம்பாட்டிச் சித்தர் பரம்பரை மாணவரான சண்முக குருக்களினால் "செந்தூர வைப்பு" என்ற பெயரில் பொத்தகமாக 1929ஆம் ஆண்டளவில் வெளியிடப்பட்டது.

அந்நியர் ஆக்கிரமிப்பு எமது மருத்துவ முறையை பெரிதும் பாதித்தாலும் இராஜா குலசேகரம், இராஜா சுப்பிரமணியம் அமெரிக்க மிசனரி டாக்டர்களினால் செய்ய மறுத்து, முடியாதென்று

கூறப்பட்ட அறுவைச் சிகிச்சைகளை வெற்றிகரமாக அவர்களுக்கு நிறைவேற்றிக் காட்டினார்கள் என்பதை இவ்வரலாறுகள் தெரிவிக்கின்றன. தமிழர்கள் தமது துறைகளை பேணாததால்தான் தமிழ்த் துறைகள் நலிவடைந்தன. பற்றும் நேசமும் கொண்டவர்களால் மீண்டும் மருத்துவம் எழுச்சி பெறுகிறது. உயிருக்கு நிகர் எங்கள் நாடல்லவோ அதன் உரிமைக்கு உரியவர்கள் நாமல்லவோ என்று புலவர் பாடியது போல உயிருக்கும் மேலான கலைகளை நாம் காப்பாற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

எல்லோரும் பயன்பெற்று சுக வாழ்வு வாழ வேண்டும். எழுத உதவிய ஊக்கப்படுத்திய வைத்தியகலாநிதி திருமதி. வி.செல்வநாதனுக்கும், பதிப்பித்து வெளியிடும் சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகத்தினருக்கும், எம்மை என்றும் ஆதரிக்கும் தாய் நாட்டுப்பற்றும், தமிழ்ப்பற்றும் மிக்க வாசக நெஞ்சங்களுக்கும் சிங்கை அரச குடும்பத்தின் சார்பாக எமது மனங்கனிந்த நன்றிகள் உரித்தாகும்.

**"யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக."**

**உயர் இராச மதிப்பிற்குரிய இராஜசேகரா**
சிங்கை இளவரசர்

சிறப்புப் பாயிரம்

பதிப்புரை

நூல்முகம்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| **01.** மருத்துவம் | 01ஆம் பக்கம் |
| **02.** இராக்கத மருத்துவம் | 07ஆம் பக்கம் |
| **03.** வன்ம விதி | 13ஆம் பக்கம் |
| **04.** அறுவை மருத்துவம் | 30ஆம் பக்கம் |
| **05.** சத்தக விதி | 42ஆம் பக்கம் |
| **06.** சுட்டிகை விதி | 63ஆம் பக்கம் |
| **07.** சிரை விதி | 67ஆம் பக்கம் |
| **08.** அட்டை விதி | 69ஆம் பக்கம் |
| **09.** காயகற்பம் | 70ஆம் பக்கம் |

# 1. மருத்துவம்

## தோற்றம்

தமிழ் மருத்துவம் மனித இனம் தோன்றிய காலத்திலேயே தோன்றியிருக்க வேண்டும். நாய்க்கு தன் உடற்கோளாறுகளுக்கு அறுகம்புல்லைத் தின்னவும், பூனைக்கு குப்பை மேனியை வணங்கவும், கீரிக்கு தன்னை விடம் பாதிக்காது இருப்பதற்கு கீரிப்பூண்டில் உருளவும் சொல்லிக் கொடுத்த இறைவனாகிய சிவபெருமானே மனிதருக்கு மருத்துவ அறிவைக் கொடுத்தார். காலஞ் செல்லச் செல்ல ஏற்பட்ட பரிணாம மாற்றங்களினால் மனிதன் விலங்குகளிலிருந்து விலத்தி தனது மனித பண்புகளுக்கு ஏற்ப வாழத் தொடங்கினான். மனிதப் பண்புகளையும், மனித விழுமியங்களையும் உயர்வாகப் பேணுவதே மனித நாகரீகம் என பெரிதாகப் பேசப்பட்டது, உயர்வாகப் போற்றப்பட்டது. இதை அறிந்திராத சில மதியிலிகள் மனித வாழ்க்கை தான் நாகரீகம் என கூறியதில் வியப்பில்லை. அக்காலத்தில் பழக்கவழக்கங்கள், மரபுகள் ஒழுங்குகள், கல்வி, தொழில்கள், வழிபாடு இவை பற்றி மக்கள் பொதியிலில் (பொதுவான இடங்களில்) கூடி விவாதித்தார்கள், ஆராய்ந்தார்கள், சரியெனக் கண்டதை ஏற்றுக் கொண்டார்கள். பிழை என உணர்ந்தவற்றை நிராகரித்தார்கள்.

இவ்வகையான செயற்பாடுகள் மனித இனத்தின் மாண்புகளை மதிக்க வைத்தன. பின்னர் அவ்வாறு கூடுவதற்கு ஒரு நாள் ஒதுக்கினர். அவ்வாறு கூடி அலசி ஆராய்வோரை ஒரு அவையாக கணித்தார்கள். கூடுமிடத்தை பொதியில், மன்று, அம்பலம் என்றும் அழைத்தார்கள். கூடுபவர்களை அவையினர் என்றும் அழைத்தார்கள். பொதுவாக நிலா நாளை கூடுவதற்கு தெரிந்து எடுத்தார்கள். அறிவாலும், கல்வியாலும் மேம்பட்டவர்களை அவைக்கு தலைமை தாங்க வைத்தார்கள். அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட அவை தமிழ் அவை என அழைக்கப்பட்டது. மருத்துவ விஞ்ஞானம் முதல் எல்லா துறைகளும் ஆராயப்பட்டன. இவ்வாறு மனித மேம்பாட்டுக்கும், மக்களின் நலத்திற்கும் ஏற்றவை என முடிவான ஒழுங்குகளைத் தொகுத்தார்கள். வாய் மொழியாக தொகுக்கப்பட்டவற்றை பனை ஓலைகளில் மிருகத்தின் கொம்புகளை கூராக்கி எழுதி நூல் கொண்டு தொகுத்துக் கட்டினார்கள். அது நூல் எனப்பட்டது. இவற்றினை நாட்டில் நடைமுறைப்படுத்த இந்நல்லறிஞர்கள் விரும்பினார்கள். எதிரியின் வீடாகவிருந்தாலும் அவ்வீடு தீப்பற்றி எரியும் போது அதை அணைக்காது விட்டால் அவ்வூரே தீயில் எரிந்து சாம்பலாகும். மனித இன நலத்தின் எதிரிகளையும் ஏற்க வைப்பதற்கு அதிகாரம் தேவைப்பட்டது. அப்போது மன்னனையும் அவையில் இணைத்தனர். நாட்டு நலனனில் அக்கறை கொண்ட அறிஞர், சான்றோர், அரசனும் இணைந்த அவைகள் பேரவை எனப்பட்டது. அதற்கு தேவையான வசதிகள், மண்டபங்கள் எல்லாம் மன்னர்களால் வழங்கப்பட்டு வந்தன.

சிவபெருமான் மக்களோடு மக்களாக ஒன்றாக இருந்து தமிழ் ஆய்ந்தார், நூல்களை இயற்றினார், அவ்வாறு நடந்த பல வரலாறுகள் தமிழ் நூல்களில் உள்ளன. மகேந்திர மலையில் தான் முதன் முதலாக (முதலாவது) தமிழ்ப் பேரவை சிவபெருமான் தலைமையில் நடந்தது. மகேந்திர மலை தான் இன்று மிகுந்தலை என்று அழைக்கப்படும் இடமாகும். அங்கு சிவனின் குகைகள் காணப்படுகிறது. சிவன் மனிதவுருவில் தோன்றியதை வடித்த சிலை தான் ஈசுரமுனி என அழைக்கப்படுகிறது. சிவனுக்கு மட்டுமே ஈசுவரன், ஈசன் என்று பெயர்கள் தமிழ் நூல்களில் காணப்படுகிறது. இதன் காரணமாகவே இலங்கை சிவபூமி, அதாவது சிவனுடைய பூமி என்று பன்நெடுங்காலமாக போற்றப்பட்டு வருகிறது. அங்கு இறைவனால் இயற்றப்பட்ட முதனூல் சிவசாலம் எனப்படுகிறது. இறைவன் மனிதவுருவில் புலவராக இருந்து தமிழ் ஆய்ந்ததாலேயே இறையனார் என்ற பெயரால் புலவர்களால் அழைக்கப்பட்டார். மருத்துவக் கலையை அங்கு இவர் அருளிச்செய்த காரணத்தினால் வைத்தீய ஈசன், வைத்தீசுவரன், வைத்தியநாதன் என்ற பெயர்கள் சிவபெருமானுக்கு ஏற்பட்டன. சிவசாலம் ஒரு மருத்துவ நூல் என பண்டிதர் முத்துக்கருப்பப்பிள்ளை கூறியிருந்தாலும், சிவசாலம் தமிழின் எல்லாத் துறை பற்றியும் அருளப்பட்ட நூல் என்பதே பொருத்தமானது. உடற்பிணி, உளப்பிணி, ஆன்மப் பிணி என எல்லாப் பிணிகளையும் அவிழ்க்கக் கூடிய ஒரே மருத்துவன் சிவன் ஆவார். இந்த முதலாவது தமிழ்ப் பேரவைக்காலம் கி.மு 29000 ஆண்டுகள் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இன்னும் சிலர் கி.மு 35000 ஆண்டுகள் என்றனர். தமிழ் நூல்கள் கிரேதாயுகத்திலேயே முதலாவது தமிழ்ப் பேரவை இடம்பெற்றதாக தெரிவித்துள்ளன. கிரேதாயுக காலம் என்பது தமிழ்ச் சோதிட ஆண்டுக்கணக்குகளின் படி கி.மு 33000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. எனவே தமிழ் நூல்கள் உண்மைகளை சரியாகவே அன்று பதிவு செய்துள்ளது.

வேள், குறுநில அரசன், சிற்றரசன், அரசன், பேரரசன், இந்திரன், மகேந்திரன் என்பது இறைமையின் வரிசையாகும். உலகில் பேரரசர்கள் பலர் இருக்கலாம். இந்திரன் ஒருவனே இருக்க முடியும். அந்த இந்திரனையே ஏவல் கொண்ட ஆண்டவன் மகேந்திரன் ஆவர். இந்த முதலாவது தமிழ்ப் பேரவையிலே இறைவனோடு அமர்ந்து தமிழ் ஆய்ந்தவர் முத்தூரின் அகத்தியர். மருத்துவ விஞ்ஞானம் பற்றி மிக அதிகமான நூல்களை இயற்றி உள்ளார். அகத்தியரின் மருத்துவசாலை அகத்தியதாபனத்திலே அமைந்திருந்தது. அங்கு அவர் பயன்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டு வரும் பல அம்மிகள், குழவிகள், உரல், எண்ணெய்த் தொட்டிகள் பலவற்றை என்னால் பார்க்க முடிந்தது. அகத்தியம் வெண்பாக்களாலான, அகத்தியர் இயற்றிய நூலாகும். சித்தர்களின் கூற்றுக்கள் வெறும் அனுமானங்கள் அல்ல. மறுக்க முடியாத பரிச்சயமான உண்மைகள். நாளுக்கு நாள் மாறுபடுபவை அல்ல.

அகத்தியர் தான் புலத்திய நகரிலிருந்த புலத்தியரின் தங்கையை லோபா முத்திரையை மணமுடித்தார். தமது முதல் மாணாக்கராக புலத்தியரை ஏற்றுக்கொண்டவர். அகத்தியருடைய தலைமையில் புலத்தியர், மாதோட்டத்தின் காலாங்கிநாதன், போகர், திருகோணமலையின் மச்சமுனி, சித்தாண்டியின் சிகண்டி, முன்னேசுவரத்தின் சட்டை முனி முதலியோர் தமிழ் வளர்த்தனர் என்றால் தமிழ்த்துறை அறுபத்தினான்கையும் வளர்த்தனர். அதில் தமிழருக்குரிய மருத்துவ முறையும் ஒன்று, அதுவே தமிழ் மருத்துவமாகும் மருத்துவம் என்றால் என்ன என்பதற்கு திருமூலர் கூறிய விளக்கம்.

**"மறுப்பது உடல் நோய் மருந்தெனலாகும்**
**மறுப்பது உள நோய் மருந்தெனல்சாலும்**
**மறுப்பது இனி நோய் வாராதிருக்க**
**மறுப்பது சாவை மருந்தெனலாமே."**

என்றார்.

நோயை மறுப்பது மருந்து, மருந்தைக் கொடுத்து நோயைக் குணப்படுத்துவது மருத்துவம். நோயை மறுப்பது மருத்துவம். நோயை மறுக்கும் செயல் தான் மருத்துவமாகும். மருத்துவம் நான்கு கால்களைக் கொண்டது.

**'உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச்செல்வான்**
**அப்பால் நாற் கூற்றே மருந்து.'**

மருத்துவன், பிணியாளி, மருந்து, உதவியாளன் என்று நான்கும் சரியாக இருந்தால் தான் மருத்துவம் சரியாகச் செய்ய முடியும். மருத்துவன் மருத்துவ முறை எல்லாவற்றையும் நன்கு கற்றுத் தேறியிருந்தாலும் அனுபவங்கள் பெற்றிருந்தாலும் மருத்துவனுக்கு மதி நுட்பம் அவசியம். அதனையே 'மருந்து கால் மதி முக்கால்' என்று கூறினார்.

## பிரிவுகள்

மருத்துவத்தை பல நோக்கங்களுக்காகவும், பல காரணங்களுக் காகவும் பல பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். மணி, மந்திர, அவிழ்தம் என முப்பிரிவுகள் உள்ளன. வைத்திய ஈசனான சிவனின் அருள் நோயைப் போக்குவதற்கு அவசியமாக இருக்கிறது. சம்பந்தர், அப்பர் தமது திருவருட் பாக்களினால் இறைவனை வேண்டிப்பாடி பல பிணிகளை நீக்கிய வரலாறுகள் அநேகமுண்டு. மந்திரம் என்பது மருத்துவன் தனது மனத்திறத்தினால் பிணியைப் போக்கும் முறையாகும். அவிழ்தம் என்பது உடலை உள்ளத்தைப் பிணித்துள்ள துன்பங்களை அவிழ்க்கும் மருந்துகளாகும்.

மருத்துவம் செய்யப்படுகின்ற நோக்கத்தினைக் கொண்டு காப்பு, நீக்கம், நிறைப்பு என மூன்று பிரிவுகள் மருத்துவத்தில் உள்ளன. நோய் வருவதற்கு முன்பே சுகநிலையில் நோய் ஏற்படாதிருக்க மருந்து உண்டால் அம்மருந்துகள் காப்பு மருந்துகள் என்று அழைக்கப்டும். நோய் வந்த பின் அதனை நீக்குவதற்காக கொடுக்கப்படும் மருந்துகளும், சிகிச்சையும் நீக்கம் எனப்படும். அது போலவே பிணியினால் உண்டாகும் இழப்புக்களை தேய்மானங்களை ஈடு செய்வதற்கு கொடுக்கப்படும் மருந்து முறை நிறைப்பு எனப்படும். போசாக்கின்மையைப் போக்குதல், பிள்ளைப்பேற்றில் இழந்த இரத்தம், பலம், சக்தியை மீட்டல் என்பன நிறைப்பு சிகிச்சையாகும்.

மருந்துகளால் உடலில் ஏற்படும் மாற்றங்கள், செய்கைகளின் அடிப்படையாகக் கொண்டு ஒப்புறை, எதிருறை, கலப்புறை என மருந்துகள் மூவகையாகும். நோயை ஏற்படுத்துகின்ற அதே குணங்குறிகளை உடலில் ஏற்படுத்தும் மருந்துகள் ஒப்புறையாகும். பிணியின் குணங்குறிகளுக்கு எதிரான குணங்குறிகளை உடலில் ஏற்படுத்தும் மருந்துகள் எதிருறை எனப்படும். இவ்விரு தன்மைகளையும் கொண்ட மருந்துகள் கலப்புறை என்று அழைத்தனர். மூலிகையைப் பயன்படுத்தி மருத்துவம் செய்ய ஆரம்பித்தவர்கள் லோக தாதுக்களை தீயிலிட்டு நீற்றி நீறு, களங்கு, கட்டு, செந்தூரம், சுன்னம் என்பன போன்ற மருந்துகளை தயாரித்து தேவ மருத்துவம் செய்தார்கள்.

அவ்வாறு சிகிச்சையளித்து குணப்படுத்த முடியாத நோய்களை இராக்கத சிகிச்சை மூலம் குணப்படுத்தி வந்தார்கள். மருந்துகள் சாதாரணமாக தூள், குளிகை என்ற நிலையிலிருந்து இளகம், பாணி, நெய், பாகு, மெழுகு, எண்ணெய், காடி என உள்மருந்துகள் முப்பத்திரண்டாக தயாரித்தனர். இது போல வெளியே செய்யப்படுகின்ற மருந்துகள் முப்பத்திரண்டாகும். தொக்கணம், ஒத்தணம், பொட்டளி, கொம்பு விடல், ஊசிகுத்தல், சுட்டிகை, கீறல், அறுவை என்பன அவற்றுட் சிலவாகும்.

மருந்துகளை நன்கு சுத்தி பண்ணி பாவித்தனர். மருந்துகளுக்கு பத்தியம் என்ற ஒழுக்கக்கட்டுபாடுகள் விதித்தனர். மருந்துகளை தயாரிக்கும் காலத்தை தீர்மானித்தனர். மருந்துகளை உட்கொள்ளவும் கால நேரத்தை கணித்தனர். உணவு முறைகளினால் நோய்களை நீக்கினார்கள். இலகுவாக கிடைக்கும் எளிய மூலிகைகளை அவித்து குடித்தே அந்நோய்களை போக்குவதற்கு மக்கள் அறிந்திருந்தனர். மிக மிக உயர்வான நிலைக்கு தமிழர்கள் தம் மருத்துவ துறையை வளர்த்து எடுத்தனர் என்பதற்கு வரலாற்றில் பல ஆதாரங்கள் உள்ளன.

பணமில்லாத காரணத்தால் ஏழை நோயாளி இறந்து போக விடுதல் கூடாது என்று மருத்துவர்களுக்கு ஒழுக்கம் போதித்தனர். மனித உயிரின் மாண்பை பேணுவது மருத்துவர்களின் கடமை. மனித உயிர்களின் மாண்பை மதித்த மருத்துவர்களை மக்கள் மதித்துப் போற்றினர்.

நோயினைக் கொண்டு சிகிச்சையின் பிரிவுகள் பதினான்கு வகையாகும். அவை

**01. பொது மருத்துவம்**
**02. மாதர், மகப்பேற்று மருத்துவம்**
**03. குழந்தை மருத்துவம்**
**04. காது, மூக்கு, தொண்டை மற்றும் தலைநோய்**
**05. கண் மருத்துவம்**
**06. தோல் கிரந்தி நோய்கள்**
**07. மனநோய், நரம்புநோய்**
**08. நஞ்சு நோய் மருத்துவம்**
**09. வன்ம விதி, வர்ம மருத்துவம்**

**10. அறுவை மருத்துவம்**
**11. முறிவு நோவு மருத்துவம்**
**12. வசீகர மருத்துவம்**
**13. காயகல்ப மருத்துவம்**
**14. அகால மரண மருத்துவம்**

இவை சிங்கநகர் மன்னர்களால் ஏற்படுத்தப்பட்ட பிரிவுகளாக உள்ளது. பச்சையாக கொடுக்கும் மருந்துகள் பச்சைக்கட்டு மருந்துகள் எனப்பட்டது. மருந்து அரைத்து பச்சையாக பாவிக்காது தீயிலிட்டு நீறாக்கி கொடுக்கும் மருந்துகளை நீற்று மருந்துகள் எனப் பெயர் பெறும். உள்பாவனைக்குரிய மருந்துகள் முப்பத்திரண்டு ஆகும். இவை உள் மருந்துகள் எனப்படும். வெளிப் பாவனைக்குரிய மருந்துகள் முப்பத்திரண்டும் வெளிமருந்துகள் எனப்படும்.

# 2. இராக்கத மருத்துவம்

மானிட மருத்துவம் எனப்படும் மூலிகைகளினால் செய்யப்படும் சிகிச்சை குடிப்பதற்கு கசப்பாகவும், அளவில் அதிகமாகவும் இருக்கலாம். தேவ சிகிச்சை எனப்படும் நீறு, சிந்தூரம் முதலிய மருந்துகள் அருந்த எளிதானது, மணமோ சுவையோ தெரியாதது. இரக்கமின்றி பிணியாளனுக்கு நோவுடன் கூடிய சிகிச்சைகளை அழுத்தல், தட்டுதல், முறித்தல், சுட்டிகை, கீறிக்கட்டல், அறுவை முதலியவை இராக்த மருத்துவம் எனப்படும். இரக்க + அதம் - இராக்கதம் எனப்படும். வெளிமருந்துகளே இராக்கத சிகிச்சையின் போது பயன்படுத்தப்படுகின்றன. மேலும் சத்தகம், கத்தி, கருவி, ஊசி முதலிய ஆயுதங்கள் சிகிச்சையின் போது பயன்படுத்தப்படுகின்றன. அரசர்களின் போரின் போது வீரர்கள் அதிகமானோர் காயமடைவர், உறுப்புக்களை இழப்பர், வன்மத்தானங்களில் தாக்கப் பெறுவர் அவர்களை உயிருடன் காப்பற்றவும், காயங்களை ஆற்றவும், உடலில் புகுந்த ஆயுதங்களை வெளியேற்றவும், சிதைவடைந்த உறுப்புக்களை அகற்றவும், அந்த இடத்தில் பொய் உறுப்பை பொருத்தவும் இராக்கத மருத்துவம் இன்றியமையாதது. இராவணன் முதலான இலங்கை அரசர்கள் மருத்துவ துறையில் மிக தேர்ச்சி பெற்றவர்களாக இருந்துள்ளதை வரலாறு தெரிவிக்கின்றது. அதுபோல அரண்மனை மருத்துவர்களும் மருத்தர் குழுவும் மருத்துவ துறையில் புலமை பெற்றிருந்தனர்.

இலங்காபுரியில் இலங்கேசன் பாணங்களினால் இராமனும், இலட்சுமணனும் காயமடைந்து மயக்கமடைந்து அசைவின்றி இருந்த பொழுது, விபீடணன் இலங்கேசனின் அரண்மனை மருத்துவன் உதவியை நாடினான். இலங்கேசனும் தன் அரண்மனை மருத்துவன் சுசேணனை இராமனுக்கு சிகிச்சை அளிக்க அனுமதி வழங்கினான். சஞ்சீவி மூலிகையைப் பயன்படுத்தி இராம இலக்குவர்களை உயிர் பெறச் செய்தான் சுசேணன். அக்காலத்தில் அயோத்தியில் சஞ்சீவி மூலிகைபற்றியோ அதன் சிகிச்சை முறைகள் பற்றி அறியப்படவில்லை. இலங்கேசன் காலம் கி.மு 18000 ஆண்டுகள். விசபலா என்ற அரசனின் மனைவிக்கு போரில் கால் வெட்டப்பட்டு சிதை வடைந்து போகிறது. அகத்தியர் காலின் சிதைவடைந்த பகுதியை வெட்டி நீக்கி விட்டு இரும்பினால் பொய்க்கால் செய்து பொருத்தினார். துவாபரயுகத்தின் பிற்பகுதியில் இடம்பெற்றதாக உள்ளது. (கி.மு 5000). இவ்வரலாறு வடமொழி இருக்கு வேதத்தில் உள்ளது.

கி.மு 3000 ஆண்டளவில் கபாலத்துள் புகுந்த தேரையை வெளியே எடுக்க அகத்தியர் கபால எலும்பினை வெட்டித்திறந்த போது, தேரை கால்களினால் மூளையைப் பற்றியிருந்தது. அதனை பிடித்து இழுக்காமல் எவ்வாறு வெளியே எடுப்பது என யோசனையில் ஆழ்ந்த பொழுது அவரின் மாணாக்கர் தேரர், ஒரு கருத்தைக் கூறினார். தேரையின் முன்னால் குவளையில் நீரை வைத்து பிடித்துக் கொண்டு, சூடான கட்டையை தேரையின் அருகில் பிடித்தால் தேரை நீரில் பாயும் என்றார்.

அவ்வாறே தேரை அகற்றப்பட்டு சிகிச்சை நிறைவேறியது. அன்று முதல் அவர் தேரர் என்று அழைக்கப்பட்டார். தேரர் என்றால் தேர்ந்தவர், அறுவை மருத்துவத்தில் கைதேர்ந்தவர் என்பதாகும். சிலர் அவரை தேரையர் என்றும் அழைப்பர். கபால தேரை என்ற நோய்க்கு சிகிச்சை அளிக்கப்பட்ட விபரமாக இருத்தல் கூடுமோ?

கிறிஸ்த ஆண்டளவில் பாண்டிய மன்னன் தண்டனைக்காக கை வெட்டப்பட்டது. அப்பொழுது அவனுக்கு பொற்கை பொருத்தப்பட்டது. அதனால் அவன் பொற்கை மாறன் என அழைக்கப்பட்டான். அரச தண்டனைகளின் போது கை, கால், மூக்கு வெட்டப்பட்டவர்களுக்கு சிகிச்சை செய்யவும் அறுவை மருத்துவம் பயன்படுத்தப்பட்டது.

மலைபடு கடாம் என்ற நூலில் போரில் விழுப்புண் அடைந்த வீரர்களுக்கு சிகிச்சையின் போது எவ்வாறு வேதனையைக் குறைத்தார்கள் என்று ஒரு பாடல் தெரிவிக்கின்றது.

**"கொடு வரி பாய்தன கொழுநர் மார்பின்**
**னெடு வசி விழுப்புண் தணிமார் காப்பென**
**வறல் வாழ் கூந்தல் கொழச்சியர் பாட"**

பாடல் கூறுவது, போரில் புண்பட்டுத் திரும்புகின்ற வீரனுக்கு அவனது புண்ணின் வேதனையை மறக்கச் செய்யும் வகையில் பாடல்களை பாடுவதை அவனைச் சார்ந்த மகளிர் தம் கடமையாகக் கொண்டிருந்தனர். இவ்வழக்கத்தினை 'மறப்புண் காத்தல்' என இலக்கியம் குறிக்கிடுகின்றது. 'வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் மேல் மாளாக் காதல் நோயாளி போல' என்கிறது சிவ வாக்கியர் பாடல். வாளால் அறுப்பதும், சுட்டிகையால் சுடுவதும் அறுவை மருத்துவத்தில் பன்னெடுங்காலமாக நடைமுறையில் இருந்து வருகிறது. மருத்துவன் நோயாளியின் நோயைப் போக்க வாளால் அறுத்தும், சுட்டிகையினாற் சுட்டும் வலியை ஏற்படுத்திய போதும் தனது நன்மைக்காகவே என்று நோயாளி மருத்துவன் மேல் மாறாத காதல் கொண்டவனாக இருக்கிறான்.

## வெளி மருந்துகள்

உடலில் வெளியில் பயன்படுத்தி சிகிச்சை அளிக்கப்படும் மருந்துகள் எல்லாம் வெளிமருந்துகள் எனப்பட்டன. வெளிமருந்துகள் முப்பத்திரண்டு என்பர். அவை...

01. கட்டுதல்
02. பற்று
03. ஒற்றடம்
04. பூச்சு
05. வேது
06. பொட்டணம்
07. தொக்கணம்
08. புகை
09. மை
10. பொடிதிமிர்த்தல்
11. கலிக்கம்
12. நசியம்
13. ஊதல்
14. மூக்குத்தூள்
15. களிம்பு
16. சீலை
17. நீர்
18. வர்த்தி
19. சுட்டிகை
20. சலாகை
21. பசை
22. களி
23. குடோரி
24. முறிச்சல்
25. கீறிக்கட்டல்
26. காரம்
27. அட்டைவிடல்
28. அறுவை
29. கொம்புகட்டல்
30. உறிஞ்சல்
31. குருதிவாங்கள்
32. பீச்சு

**01. கட்டுதல்** - சுத்தமான தோய்க்கப்பட்ட வெள்ளைத்துணிகளால் கட்டுப்போதல், விரணங்களுக்கு கட்டுதல், குருதி ஓட்டத்தை தடுக்க கட்டுதல், பாதுகாப்புக்காக கையை, காலை கட்டிக் தொங்க விடுதல் முதலியவை.

**02. பற்று** – நோவு, வீக்கம், எலும்புடைவுக்கு சில மருந்துகளை பசையாக அரைத்து சேலைத்துண்டில் பூசி அந்த இடத்தில் பற்றாக இடுதல் ஆகும்.

**03. ஒற்றடம்** - கம்பளியை வெந்நீரில் நனைத்துப் பிழிந்து ஒற்றுதல். தவிட்டினை வறுத்து ஒற்றுதல், பசுக்கன்றின் பிழுக்கையை சுட்டு ஒற்றுதல்.

**04. பூச்சு** – சில மருந்துகளை மூலிகைச்சாறு, கியாழம் விட்டரைத்து நோயுள்ள இடத்தில் பூசுதல் ஆகும்.

**05. வேது** - மூலிகைகளை அவித்து ஆவியை நோயாளியில் பிடித்தல் ஆகும். முழு உடம்பிலும் பிடித்தல் நீராவிக் குளியல் எனப்படும்.

**பொட்டணம்** - மருந்து, மூலிகை, எண்ணெய், கஞ்சி, பால், முதலியவற்றை பொட்டளியாக கட்டி உடலில் தேய்த்தல், ஒற்றுதல் முதலியனவாகும்.

**07. தொக்கணம்** - உடலைப்பிடித்தல், தட்டுதல், தடவுதல், நீவுதல், தேய்த்தல், மர்த்தனம் செய்தலாகும்.

**08. புகை** – நெருப்புத்தணலில் மருந்துப் பொடிகளை தூவி வரும் புகையை நோயுற்ற இடத்தில் பிடித்தல் ஆகும்.

**09. மை** – பலவித மைகளை தயாரித்து கண்ணுக்கு இடுதல்.

**10. பொடிதிமிர்த்தல்** - வேர்க்கொம்பு முதலான மருந்துப் பொடிகளை உடலில் தேய்த்தல், சூடுகாட்டியும் தேய்க்கலாம்.

**11. கலிக்கம்** - மருந்துகளை முலைப்பாலில் கரைத்து கண்ணில் சில துளிகள் விடுதல். சில சாறுகளையும் பயன்படுத்துவர்.

**12. நசியம்** - சிலமருந்து துளிகளை, எண்ணெய்த்துளிகளை, சாறுகளில் சில துளிகளை மூக்கில் விடுவதாகும்.

**13. ஊதல்** - சில மருந்து பொருட்களை வாயிலிட்டு மென்று ஊதல் ஆகும். மருந்துப் பொருட்கள் பறத்தல் கூடாது.

**14. மூக்குத்தூள்** - சில மருந்துப் பொருட்களைப் பொடியாக்கி மண்டையில் நீரேற்றம் போன்ற நிலமைகளில் நாசிக்குள் இழுப்பர்.

**15. களிம்பு** – எண்ணெயுடன் சில மருந்துப் பொருட்களை கலந்து பின் நீருடன் சில மருந்துகளைக் கலந்து இரண்டையும் ஒன்றாக கலக்கும் போது களிம்பு உண்டாகும். எரிவுள்ள காயங்களில், விரணங்களில் களிம்புகள் பயன்படுத்தப்படும்.

**16. சீலை** – சில காரமான மருந்துகளை அரைத்து கரைத்து சேலைத்துண்டுகளில் ஊட்டி காயவைத்து பயன்படுத்தும் போது சீலை எனப்படும்.

**17. நீர்** - நீரைப்பயன்படுத்தி செய்யப்படும் நீர்ச் சிகிச்சை முதலியவை.

**18. வர்த்தி** – மருந்துகளை அரைத்துச் சேலையில் பூசிக் காயவைத்து திரியாக உருட்டி பயன்படுத்தல்.

**19. சுட்டிகை** – உலோகங்களால் செய்யப்பட்ட ஊசிகளை, முத்திரைகளை சூடுகாட்டி உடலில் அழுத்தல்.

**20. சலாகை** – உருண்டையான உலோக சலாகை, துளையுள்ள சலாகை உள் இருக்கும் பொருட்களை நீரை, வெளியேற்றவும், தடை, அடைப்புக்களை நீக்கவும் பயன்படுத்துவர்.

**21. பசை** – மருந்துகளை சாறு, எண்ணெய், வெண்ணெய் முதலியவற்றைச் சேர்த்து அரைத்துச் சேர்வையாகச்
செய்தல் பசை எனப்படும்.

**22. களி** – சாறுகளை, கியாழங்களை, சில மருந்துச்சரக்கு மாக்களுடன் சேர்த்து வேகவைத்து களியாகக் கிண்டுதல்.

**23. குடோரி** – கோடரியால் தோலைக்கீறி எள்ளளவு நுண் பொடி மருந்தினை இரத்தத்துடன் சேரும் படியாக வைத்துக் கட்டுதல் குடோரி எனப்படும்.

**24. முறிச்சல்** - கைகாலை மடக்கி, நீட்டி, வளைத்து, திருப்பி இயக்கத்தை சீராக்குதல்.

**25. கீறிகட்டுதல்** - கத்திவைத்தல், கத்தியால் கீறி வெளிப்பொருட்கள், அழுக்குகளை நீக்குதல். பின் ஊசியால் தைத்துக் கட்டுதல்.

**26. காரம்** - காரமானதும், தோலை, தசையை அரித்து காயத்தினை உண்டாக்கக் கூடிய மருந்துகளை, அழுக்குகளை வெளியேற்ற அவ்விடத்தில் வைத்து கட்டுதல்.

**27. அட்டைவிடல்** - உடம்பில் இரத்தம் அழுக்கடைந்த பாகங்களில் காரிரத்த குழாய்களில் அட்டையைக் கடிக்க விட்டு உறிஞ்சி இழுக்கச் செய்தல்.

**28. அறுவை** – சத்தகம், கத்தி முதலான கூரான ஆயுதங்களினால் வெட்டுதல், அறுத்தல், பிளத்தல் முதலியன செய்வது ஆகும்.

**29. கொம்பு கட்டல்** - உடைந்து போன எலும்புகளையும், நழுவிப் போன சந்துகளையும் சரி செய்து, மட்டை வைத்துக் கட்டுதல்.

**30. உறிஞ்சல்** - குழாய், கொம்பு, பை முதலியவற்றை பயன்படுத்தியோ, வாயினாலோ உறிஞ்சுதல்.

**31. குருதிவாங்கல்** - குருதியை வெளியேற்றுதல், இரத்தக் குழாயைக் கீறி கொம்பு, தாரை முதலியவற்றை பயன்படுத்தி அல்லது ஊசியினால் குத்தி இரத்தத்தை வெளியேற்றுதல் ஆகும்.

**32. பீச்சு** – பை, குழாய் போன்ற அமைப்புகளைக் கொண்டுள்ள கருவிகளைப் பயன்படுத்தி கியாழம் முதலிய மருந்துகளை மலக்குடலிலும், கருப்பையிலும், விரணங்களிலும் பீச்சி அடித்தல் ஆகும்.

# 3. வன்மவிதி

வன்மம் என்பது விடாப்பிடியாக பிடித்தல், பின்பு விலக்கினால் தான் விடுதல், தானாக பிடியை விலக்காது தளர்த்தாது இருக்கும் உடலிலுள்ள சில இடங்களைக் குறிக்கும். அதனால் தான் வன்மம் தாக்கப்பட்டால் வர்ம இளக்கல், அடங்கல் என்னும் சிகிச்சை செய்ய வேண்டியுள்ளது. வர்ம இளக்கல் சிகிச்சை வர்மகாலத்திற்குள் செய்யாது போனால் உயிராபத்து நிகழலாம். வன்மங்கள் உடலில் ஆயிரத்திற்கும் மேல் உண்டு. நூற்றெட்டு வன்மங்களே அதிகமாக பாதிப்பு அடைவதும், சிகிச்சை செய்யப்படுவதுமாகும். அவை பற்றி நாம் நன்றாக அறிந்திருக்க வேண்டும். வன்மங்கள் பல நோக்களுக்காக பயன்படுத்தப்பட்டு வந்தன. தமிழ் அரசர்கள் வன்மங்களை போரில் தாக்கி எதிரிகளை வெற்றி கொள்ளப் பயன்படுத்தி வந்துள்ளனர் என வரலாறு தெரிவிக்கிறது. வர்மக்கலை என்ற பெயரில் தற்காப்புக்கலையாகவும், தாக்குதல் கலையாகவும் வன்மங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இன்று சிலரால் இக்கலை வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றதை நாம் காணக்கூடியதாக உள்ளது. வர்மக்கலை ஞாயம், நீதியின் படி அறவழியில் பயன்படுத்த வேண்டிய ஒன்று. ஆனால் மனித நேயம் மரித்துப் போன சில துட்டர்களினால் ஞாயத்திற்கு எதிராக பயன்படுத்தப்பட்டதால் வர்மக்கலை இரகசியங்களை மறைத்துப் பேண வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப சிலரால் பயன்படுத்தப்படுவதை தவிர்க்க முடியாததாயிற்று. இதனால் வர்மக்கலை மர்மக்கலையாக மறைக்கப்பட்டு விட்டது.

மனித உயிர்களை மரணத்திலிருந்தும், நோய்களிலிருந்தும் மீட்டுக் கொணரும் முயற்சியாகவே வன்மத் தானங்களை அறிந்து மருத்துவம் செய்து வரலாயினர். எதிரிகளின் ஒற்றர்களை உயிருடன் பிடித்து, அவர்களின் படைநிலைவரங்களையும், போர் வியூகங்களையும் அறிவதற்கு பயன்படுத்தினர்.

வன்மம் என்றால் என்ன என்பதனை முறிவுசாலி என்ற நூலின் இப்பாடல் விடையளிக்கிறது, பாடல்

**"கேளப்பா தடியடிகள் படுதலாலும்**
**கெடியான எறிவிசைகள் கொள்ளலாலும்**
**வாளப்பா கட்டை குற்றி தட்டலாலும்**
**மாற்றானின் கைப்பிடிகள் படுதலாலும்**
**மேலப்பா ஆகாச மதிலே நின்று**
**மெய்மறந்து கைமறந்து விடுதலாலும்**
**தானப்பா பற்பலவாம் விதத்திலே**
**சங்கையில்லாக் காலமது சாருந்தானே"**

காலம் என்பது தான் வன்மம், நரம்புகளில் தட்டுவதால் உணர்விழப்பது, சில நரம்புகளில் குறிப்பிட்ட இடங்களில்,குறிப்பிட்ட அளவில், குறிப்பிட்ட நேரத்தில் தட்டப்படுவதால் தான் ஒருவன் உணர்விழப்பான். அவருக்கு வர்மம் கொண்டிருக்கிறது. இன்னும் வன்மத்திற்கு இரகசியம், மர்மம், ஒடிவு, முறிவு, கருவி என்றும் பெயர்கள் உண்டு.

வன்ம வித்தயை அறிந்தவர்கள் இதை மிகவும் இரகசியமாகவே போற்றி வருகிறார்கள் என்பதை விளக்கும் பாடல் -

**"முடுகுவது சண்டாள கோபத்தாலே**
**முன்பாரான் பின்பாரான் முறைகளை பாரான்**
**கடுகுவது ஆங்காரம் மனதில் கொண்டு**
**கற்ற வித்தை மனத்தினால் காலம் எண்ணி**
**நடுகுவது நல்லோரை பெரியோர் தம்மை**
**நானிலத்தில் ஏழைகளை நடுங்கச் செய்து**
**கொடுகவே ஈடு செய்து கொல்வானப்பா**
**கொடும்பாவம் அவனை வந்து குறுகுந்தானே"**

இங்கே ஈடு என்பது வர்மத்தை ஆகும்.

அகத்தியர், போகர், தேரர் போன்ற சித்தர்களினால் வன்ம நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இவர்கள் அறுவைச் சிகிச்சை செய்யும் போது உடலை விறைக்கச் செய்து நோவை உணராமல் இருப்பதற்கும், இரத்தம் அதிகம் இழக்கப்படுவதை தடுப்பதற்கும் வன்மங்களைப் பயன்படுத்தினார்கள். அவ்வாறு அறுவை சிகிச்சையின் போது வன்மங்களைக் கையாளும் ஒழுங்குகளைத் தொகுத்து வன்மவிதி எனப் பெயரிட்டனர். எனவே அறுவை சிகிச்சை செய்வதற்கு முன்பாக வன்மவிதி இடம் பெற வேண்டும். இதனையே பரராசசேகரம் பன்னீராயிரம் என்ற கி.பி 15 நூற்றாண்டின் ஆரம்பத்தில் சிங்கை நகரில் எழுந்த நூலில் சத்திரவிதிக்கு முன்பாக வன்மவிதி கூறப்பட்டுள்ளது. வன்ம விதி பெரிதும் அழிந்து விட்டாலும் எனது முன்னோரால் இருபதாம் நூற்றாண்டிலும் பயன்படுத்தப்பட்டு வந்த வன்மவிதி முறையை இங்கு தருகிறேன்.

நூற்றி எட்டு வன்மங்களிலும் உடலை விறைக்கச் செய்யப் பயன்பட்டவை மிகச் சில வன்மங்களேயாம். அறுவை சிகிச்சையின் போது கவனிக்கப்பட வேண்டிய அவசியமான விதிகள் நரம்புகள், இரத்தக்குழாய்கள், எலும்புகள் இவற்றின் பொருத்துகள் வெட்டப்பட, அறுபட கூடாது. உடற்கூற்றியலில் இவ்விடங்களை சரியாக தெரிந்து கொள்ள வேண்டியது மருத்துவனுக்கு இன்றியமையாதது.

அறுவை சிகிச்சையின் போது இவற்றில் பாதிப்பு ஏற்படுமானால் மரணம் நேரிடலாம். எனவே இவை பாதிக்கப்படாமல் அறுவை செய்ய வேண்டியது அத்தியவசியமானது. வன்மங்களை விரல் நுனியால் அழுத்தி விறைக்கச் செய்தார்கள், அதன் மூலம் வலி தெரியாத நிலையை ஏற்படுத்தினார்கள். வலி தெரியாத நிலை ஏற்படுத்திய பின்னரே அறுவை செய்தார்கள். அந்த இடங்களிலுள்ள வன்மத்தை அழுத்தி அல்லது அங்குசத்தைப் பாவித்து எந்த இடங்களை விறைக்கச் செய்ய முடியும் என்பதை பயிற்சியினால் தேர்ந்து இருந்தார்கள். விறைக்கச் செய்ய அங்குசம் என்ற ஊசியைப் பாவித்தனர். எவ்வளவு காலத்திற்கு விறைக்கச் செய்ய வேண்டுமோ அதற்கேற்ற முறையை கையாண்டனர். அறுவை சிகிச்சையை நிறைவு செய்த பின்னரும், வலி, வேதனை நீங்குவதற்காக அவற்றிற்குரிய வன்மங்களில் வன்மவிதிகளை கையாண்டு வந்தனர்.

உடல் முழுவதும் வலி உணராது மயக்கத்தினை ஏற்படுத்த வெட்டுக்கால வன்மத்தைப் பயன்படுத்தி வந்தனர். உடலினை வெட்டும் காலங்களில் பயன்படுத்தப்பட்டு வந்த வன்மம் வெட்டுக்கால வன்மம் ஆகும். சைவ அடியார்கள் முருகப் பெருமானை நினைத்து துதித்து நேர்த்தி வைத்து நோய் நீங்க பிரார்த்தனை செய்து செடில் குத்தி முள்குத்தி கயிற்றில் கட்டி காவடி எடுப்பர். அவ்வாறு செய்வபவர்களுக்கு நோய் நீங்குவது எல்லோரும் அறிந்த உண்மையாகும். முள்ளுகளை கயிற்றில் கட்டி இழுத்து தூண்டுதல் கொடுத்துக் கொண்டே இருப்பர், வன்ம ஓட்டத்தில், அமுத ஓட்டத்தில் ஏற்பட்ட தடைகள் நீங்கப்பெற்று குணமாகின்றன.

சிவ ஓட்டம், சர ஓட்டம், அமுதஓட்டம் ஒளுங்காக நடைபெறும் போது கூடலுக்கு பிணியில்லை, நோவு இல்லை, ஆபத்தில்லை. இவை சித்தர்கள் நுட்பமாக தெரிவித்த கருத்துக்கள். அலகு பாய்ச்சி ஊசி குத்துவர், நாவில் வேல் குத்துவர், பெரிய தூண்டில் முள்ளுகளை குத்தி

கயிற்றில் கட்டி பறவைக்காவடி, துலாக்காவடி எடுப்பர். செடில்களை நெஞ்சு, முதுகு, கை, கால் பகுதிகலில் குத்துவர். செடில், தூண்டில் முள்ளுகளை குத்தும் கலை ஒரு சிலருக்கே தெரியும். வன்மங்களில் தாக்கம் ஏற்படாது வன்மங்களை இயக்கும் வித்தையை கற்றுக்கெண்டவர்கள். வன்மங்களில் ஊறு ஏற்படுத்தும் விதத்தில் ஊசிகளைக் குத்தினால் உயிருக்கே ஆபத்தாக ஏற்படும். பரராசசேகரம் வன்மவிதி முழுமையாகக் கிடைக்கவில்லை என்பது கவலைக்குரியது. அதில் காணப்படும் வன்மங்கள்,

| | |
|---|---|
| **01. கைகளில் தனித்தனியாக 11 வீதம்** | **22** |
| **02. கால்களில் தனித்தனியாக 11 வீதம்** | **22** |
| **03. வயிற்றில்** | **03** |
| **04. மார்பில்** | **09** |
| **05. முதுகில்** | **14** |
| **06. கழுத்தின் மேல்** | **37** |
| | **107** |

மொத்தம் நூற்றியேழு குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் முக்கியமானவை 108 ஆகும். பரராசசேகரம் வன்மவிதியில் வன்மங்களின் பெயர்கள் வேறாகவே காணப்படுகின்றன. கழுத்தின் மேலுள்ள வன்மங்களின் 37 பெயர்களில் 15 பெயர்கள் மட்டுமே உள்ளன. மிகுதி 22 வன்மங்களின் பெயர்களைக் காணவில்லை. அழிந்து போய்விட்டன.

**கால் வன்மங்கள்**

**01. அடிக்குழி வன்மம்**

**02. சிப்பிரம் வன்மம்**

**03. கூர்ச்சம் வன்மம்**

**04. கூர்ச்சிரம் வன்மம்**

**05. குற்பம் வன்மம் (கணுக்கால்)**

**06. இந்திரவத்தி வன்மம்**

07. சானு வன்மம்

08. ஆணி வன்மம்

09. ஊரி வன்மம்

10. உலோகிதை வன்மம்

11. விடசந்தி வன்மம்

**கை வன்மங்கள்**

01. அடிக்குழி வன்மம்
02. சிப்பிரம் வன்மம்
03. கூர்ச்சம் வன்மம்
04. கூர்ச்சிரம் வன்மம்
05. மணிக்கட்டு வன்மம்
06. இந்திரவதி வன்மம்
07. கூர்ப்பரம் வன்மம் - (முழங்கை)
08. ஆணி வன்மம்
09. ஊரி வன்மம்
10. உலோகிதை வன்மம்
11. கஷியாதரம் வன்மம்

**வயிற்றில் வன்மம்**

01. குதம்
02. மூத்திராசயம்
03. நாபி

**மார்பில் வன்மம்**

| | | |
|---|---|---|
| 01. இருதயம் | 01 | |
| 02. தன ரோசி | 02 | (தனத்தின் மேல் 2) |
| 03. தன மூலம் | 02 | (தனத்தின் கீழ் 2) |
| 04. அபதம்பம் | 02 | (தனத்தின் புறத்தல்) |
| 05. அபலாபங்கள் | <u>02</u> | (முதுகு நெஞ்சு இடையில், |
| | 09 | கமுக்க கீழ்) |

முதுகில் வன்மம் 14

| | | |
|---|---|---|
| 01. அடிக்கிராணி | 02 | |
| 02. சுகுந்தரம் | 02 | |
| 03. நிதம்பம் | 02 | |
| 04. பாகசந்தி | 08 | (பாரிசம் 2, பதிமூட்டு சந்து, |
| | 14 | விலா கூடுமிடம் மேல் 2, கீழ் 2) |

கழுத்தின் மேலுள்ள வன்மம் - 37

01. கபீரம்
02. நிலை
03. மன்னை
04. மாகிரிகை
05. கூதாடிகை
06. விதூரை
07. பணம்
08. அபாங்கம்
09. ஆவர்த்தம்
10. சங்கம்
11. உற்சேபம்
12. தபனி
13. சிருங்காடம்
14. சீமந்தம்
15. பிரமானந்தம்

பரராசசேகரத்தில் தற்போது உள்ளவை இந்தப் 15 மட்டுமாகும்.

கழுத்தின் மேல் வன்மம் - 37

01. திலத வன்மம்
02. கண்ணாடிக்கால வன்மம்
03. மூர்த்திக் கால வன்மம்
04. அந்தம் வன்மம்
05. தும்மிக்கால வன்மம்
06. பின்சுவாதி வன்மம்

07.கும்பிடு கால வன்மம்
08.நட்சத்திர கால வன்மம்
09.பால வன்மம்
10.மேல் காடி வர்மம்
11.முன் சுவாதி வர்மம்
12.நெம வர்மம்
13.மந்திரக் கால வன்மம்
14. பின்வட்டிக் கால வன்மம்
15. காம்பூதிகால வன்மம்
16. உள்நாக்கு கால வன்மம்
17. ஒட்டு வன்மம்
18. சென்னி வன்மம்
19. பொய்கைக் கால வன்மம்
20. அலவாடி வன்மம்
21. மூக்கடைக்கி கால வன்மம்
22. கும்பேரிக் கால வன்மம்
23. நாசிக் கால வன்மம்
24. வெட்டுக் கால வன்மம்
25. அண்ணாங் கால வன்மம்
26. உறக்கக் கால வன்மம்
27. கொக்கி வன்மம்
28. சங்குதிரி கால வன்மம்
29. செவிகுத்திக் கால வன்மம்
30. கொம்பு வன்மம்
31. சுமைக்கால வன்மம்
32. தலைப்பாகை வன்மம்
33. பூட்டெல வன்மம்
34. பிடரிக் கால வன்மம்
35. பொச்சை கால வன்மம்
36. சுரிதி வன்மம்
37. மூர்த்தி அடக்க வன்மம்

வேறு வகை வன்மங்கள்

### 01. தசை வன்மம் - 10

| | |
|---|---|
| இந்திரவத்தி | 04 |
| பாத அடிக்குழி | 02 |
| தன ரூலம் | 02 |
| தன ரோசி | 02 |

### 02. எலும்பில் வன்மம் - 08

| | |
|---|---|
| சங்கம் | 02 |
| கடிக தருணம் | 02 |
| நிதம்பம் | 02 |
| மிசம் | 02 |

### 03. நாடி வன்மம் - 21

| | |
|---|---|
| ஆணி | 04 |
| கூர்ச்சரம் | 04 |
| கூர்ச்சசரசிரசு | 04 |
| அபாங்கியம் | 02 |
| சிப்பிரம் | 04 |
| உற்சேபம் | 02 |
| வத்தி | 01 |

### 04. பெருநரம்பில் வன்மம் - 09

| | |
|---|---|
| குதம் | 01 |
| அபதம்பம் | 02 |
| விதுரை | 02 |
| சிறுங்காடம் | 04 |

### 05. நரம்பில் வன்மம் - 36

| | |
|---|---|
| பிருகதி | 08 |
| நிலை | 02 |
| மண்ணை | 02 |
| கட்டியந்தரம் | 02 |
| மாகிரிகை | 02 |

| | |
|---|---|
| பணம் | 02 |
| விடபம் | 02 |
| இதயம் | 01 |
| நாபி | 01 |
| பாரிசசந்தி | 02 |
| அபலாபம் | 02 |
| தனமூலம் | 02 |
| உலோகிதை | 04 |
| ஊரு | 04 |

06. சந்து வன்மம் - 20

| | |
|---|---|
| ஆவர்த்தம் | 02 |
| மணிக்கூடு | 02 |
| சுகுந்தரம் | 02 |
| சீமந்தம் | 05 |
| கூர்ப்பரம் | 02 |
| குற்பம் | 02 |
| கூதாடிகை | 02 |
| முழந்தாள் | 02 |
| உச்சி | 01 |

## வேறுவித வன்மப்பிரிவுகள்

| | |
|---|---|
| படுவர்மம் | 12 |
| தொடுவர்மம் | 96 |
| தட்டுவர்மம் | 08 |
| கலைவர்மம் | 05 |
| உள்வர்மம் | 06 |
| சலோற்பனவர்மம் | 06 |
| தடவுவர்மம் | 04 |
| நக்கு வர்மம் | 01 |
| நோக்கு வர்மம் | 01 |

எந்த வன்ம நூலிலும் எல்லா வன்மங்களுக்கும் பாடல்கள் இல்லை. சில பாடல்கள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளன. போரின் போது வீரர்கள் வன்ம வித்தையை கையாண்டு எதிரியை கொல்லாமல் காயப்படுத்தாமல் சிறைபிடித்தனர். பின்னரும் அவர்களிடமிருந்து இரகசியங்களை அறிவதற்கும் வன்ம வித்தையையும், வர்மபரிகாரமும் தெரிந்திருந்தனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் மக்கள் இன்னும் வன்மக்கலையை நன்கு பேணி திறமைசாலிகளாக உள்ளனர். வர்மக்கலை கி.பி 7ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்து மருத்துவர்களினால் தான் கன்னியா குமரிப்பகுதியில் பரவியதாக இவர்கள் தெரிவிக்கிறார்கள்.

## வேறு வன்மங்கள்

| | |
|---|---|
| **01 தலைப்பகுதியில்** | **37** |
| **02 மார்புபகுதியில்** | **13** |
| **03 உடலின் முன்பகுதியில்** | **15** |
| **04 உடலின்முதுகு பகுதியில்** | **10** |
| **05 கைகளின் முன் பகுதியில் 9+9** | **18** |
| **06 கைகளின் பின்பகுதியில் 8+8** | **16** |
| **07 கால்களின் முன் பகுதியில் 19+19** | **38** |
| **08 கால்களின் முன் பகுதியில் 13+13** | **26** |
| **09 பின்முதுகு பகுதியில்** | **08** |
| | **181** |

நூல்களில் இவ்விதமாகவும் வன்மங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## வேறு நூல்களில் கை வன்மங்கள்

முன்பக்கம்

**01. துதிக்கை வன்மம்**
**02. தடசண கால வன்மம்**
**03. சுளுக்கு வன்மம்**
**04. மூட்டு வன்மம்**
**05. மொழியின் வன்மம்**
**06. கைக்குசத்திட வன்மம்**
**07. உள்ளங்கை வன்மம்**

பின்பக்கம்

01. தொங்குசதை வன்மம்
02. மணிபந்த வன்மம்
03. சுண்டோதி வன்மம்
04. நடுக்கவளி வன்மம்
05. சுறுவிரல்கவளி வன்மம்
06. மேல் மணிக்கட்டு வன்மம்
07. விசமணபந்த வன்மம்
08. கவளிக்கால வன்மம்

## கால் வன்மங்கள்

முன் பக்கம்

01. மூத்திரக் கால வன்மம்
02. பதக்களை வன்மம்
03. ஆமைக்கால வன்மம்
04. பக்க வன்மம்
05. சூழ்ச்சி வன்மம்
06. முடிச்சு வன்மம்
07. சிறுவிரல் வன்மம்
08. சிரட்டை வன்மம்
09. கால் மூட்டு வன்மம்
10. கால் கண்ணு வன்மம்
11. நாய்த்தலை வன்மம்
12. குதிரைமுக வன்மம்
13. கும்பேறி வன்மம்
14. கண்ணு வன்மம்
15. கோணச்சன்னி வன்மம்
16. அடக்கால வன்மம்
17. திட வன்மம்
18. கண்புகழ் வன்மம்
19. பூமிக்கால வன்மம்

பின் பக்கம்

01. இடுப்பு வன்மம்
02. கிழிமேக வன்மம்

**03. இழிப்பிறை வன்மம்**
**04. அணி வன்மம்**
**05. கோச்சு வன்மம்**
**06. முடக்கு வன்மம்**
**07. குளிர்ச்சை வன்மம்**
**08. குசத்திட வன்மம்**
**09. உட்புகத்தி வன்மம்**
**10. பாதசக்கர வன்மம்**
**11. கீழ்சுழி வன்மம்**
**12. பதக்கல் வன்மம்**
**13. முண்டக வன்மம்**

முழு உடலையும் வலியிழக்கச் செய்து மயக்க நிலை ஏற்படுத்த வெட்டுக்கால வன்மத்தை, சத்தகத்தினால் வெட்டும் சிகிச்சையின் போது பயன்படுத்தி வந்தனர். கை, கால், உடலின் ஏனைய பகுதிகளிலும் தனித்தனியாக சில வன்மங்கள் அப்பகுதியை விறைக்கச் செய்வதற்கு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அங்குசம் என்ற ஊசியைப் பயன்படுத்தியே வன்மங்களைத் தூண்டி விறைக்கச் செய்து வந்தனர். அங்குசம் என்ற ஊசி நரம்புகளை வலியிழக்கச் செய்யவும், அப்பகுதியை விறைக்கச் செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டு வந்தது, வர்மானி ஒருவர் அங்குசத்தை நேராக வன்மத்தில் குத்திப் பிடிப்பார்.

அங்குசம் குத்தும் வன்மங்களின் பெயர்கள், இடங்கள், குசத்திட வன்மம், கைக்குசத்திட வன்மம் ஆகும். அங்குசம் என்றாலும் குசம் என்றாலும் ஒன்றுதான். கவளி என்றும் சிப்பிரம் என்றும் அழைக்கப்படுகின்ற வன்மம் ஒன்று கையில் உள்ளது. கவளி என்பது உடலைக் கட்டுகின்ற வன்மம் என்று பொருளாகும். சிப்பிரம் என்றால் இலேசாக கையாளக் கூடிய வன்மம் என்பது கருத்தாகும். சுண்டோதரி வன்மம் வயிற்றினை கட்டிப்போட்டு வலியிழக்கச் செய்யும் வன்மமாகும். இந்த வன்மங்கள் மட்டுமல்ல இன்னும் பல வன்மங்கள் அறுவை காலத்தில் அவ்வுறுப்புக்களைக் கட்டுப்படுத்தி செயற்பாடுகளை நிறுத்தப்பண்ணி, வலியிழக்கச் செய்யப்பட்டு வந்துள்ளன. அவை ஏடுகள் அழிந்து போனமையால் கண்டு பிடிக்க முடியவில்லை.

திறமையும், அறிவுமுள்ள மருத்துவர்கள் இதில் மேற்கொண்டு ஆய்வுகள் செய்ய வேண்டும். முழுவிபரங்களையும் வெளிக் கொணர வேண்டும். கிடைக்கப்பெற்ற நூல்கள் ஆய்வு செய்யப்பட வேண்டும். வெட்டுக்கால வன்மம், கவளி வன்மம் சிங்கை அரசர்களால் அதிகம் பயன்படுத்தப்பட்டு வந்தவை ஆகும். இராசா குலசேகரம், இராசா இராசசிம்மன் பயன்படுத்தி வந்தனர்.

உடலில் காணப்படும் சிக்கலான வலிமையுள்ள இடங்கள் வன்மம் எனப்படும். அவற்றில் குறிப்பிட்டளவில் ஏற்படும் தாக்குதல்களால் நிகழும் உடல் பாதிப்புக்கு "வர்மம்" என்று பெயர். வாயு நிலை தடைபடுதல் வர்மமாகும் என்பது சித்தர் கூற்றாகும். வர்மங்களுக்கு சிகிச்சை பரிகாரம் செய்து குணப்படுத்தப்படுகிறது. வர்மக்கலை தெரிந்தவர்கள் அளவோடு, நோக்கத்தோடு தாக்குவார்கள்.

## வன்மவிதி செய்யும் வன்மங்களின் இருப்பிடம்.

**வ**ன்மங்களின் பெயர்களும், இடங்களும் நூலுக்கு நூல் மாறுபடுகின்றன. வர்மானிகள் தாங்கள் தாங்கள் கையாண்ட 108 வர்மங்களின் பெயர்களைத் தெரிவித்துள்ளார்கள். பல நூல்களில் 181 வன்மங்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. நாம் உடம்பை விறைக்கச் செய்ய பயன்படுத்திய வன்மங்களின் இருப்பிடங்கள். அவை –

**01. வெட்டுக்கால வன்மம்**

தலைப்பகுதியில் முகத்தில் கீழ் உதட்டுக்கும் நாடிக்கும் நடுவில் அமைந்துள்ளது. முழு உடல் மயக்கம் செய்விக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது. உடம்பை வெட்டும் காலத்தில் பயன்படுத்துவதால் வெட்டுக்கால வன்மம் எனப்படுகிறது.

**02. கவளி வன்மம் அல்லது சிப்பிர வன்மம்**

கைப்பெருவிரலுக்கும் ஆட்காட்டிவிரலுக்கும் நடுவில் இறைக்கு மேலே கவளிக்கால வன்மம் அமைந்துள்ளது. மயங்கியவரை உயிர்ப்பிக்கவும், மயக்கத்தை உண்டு பண்ணவும், வலிப்பு நோயை குணப்படுத்தவும் இவ்வன்மம் பயன் படுத்தப்படுகிறது.


**03. குசத்திட வன்மம்**

கால்களில் முழங்காலுக்கும் கணுக்காலுக்கும் நடுவில் காலின் உட்புறத்திற்கும் பின்பக்கத்திற்கும் மத்தியில் குசத்திட வன்மம் அமைந்துள்ளது. அங்குசம் பயன்படுத்தும் வன்மம் ஆகும். அங்குசத்தை குத்தியே உடம்பை வா்மானிகள் விறைக்கச் செய்வா்.


**04. கைக்குசத்திட வன்மம்**

கைமணிக்கட்டுக்கும் முழங்கைக்கும் மத்தியில் கைநடுவில் முன் பக்கத்தில் அமைந்துள்ளது. உடம்பை விறைக்கச் செய்ய கையில் அங்குசம் குத்தும் வன்மம் ஆகும்.

வெட்டுக்கால வன்மம்



கைக்குசத்திட வன்மம்





சுண்டோதரி வன்மம்

கவளி வன்மம்



குசத்திட வன்மம்

சுண்டோதரி வன்மம்

**05. சுண்டோதரி வன்மம்**

கை மணிக்கட்டு வரையிலிருந்து இரு விரற்கடை மேலதாக கை எலும்புகளுக்கு மத்தியில் புறங்கையில் இவ்வன்மம் அமைந்துள்ளது. வயிற்றுப் பகுதியை விறைக்கச் செய்ய பயன்படுத்தப்படுகிறது.

**06. சுண்டோதரி வன்மம் கால்**

காலில் பெருவிரலுக்கும் அடுத்த விரலுக்கும் இடையில் இறைக்கு இருவிரற்கடை மேலதாக உள்ளது.

## வன்மவிதி நிறைவு

அறுவைச் சிகிச்சை நிறைவேறிய பின் அங்குசத்தை வன்மத்திலிருந்து எடுத்தால் படிப்படியாக வன்மம் பழைய நிலைக்கு வரும். மயக்கம் உடல்விறைப்பு நீங்கும். தாமதித்தால் சுக்கை மென்று காதில் மூக்கில் ஊதல் சிகிச்சை செய்ய வேண்டும். கை கால், அங்குசம் குத்திய வன்மத்தை தடவி விட வேண்டும். வர்மம் நீங்கி விடும். தேவை ஏற்பட்டால் சுக்கு கியாழம், வல்லாரைச்சாறு கொடுத்தால் முற்றாக வர்மம் நீங்கிவிடும். வர்மம் நீங்க வில்லை என்றால் வர்மானிக்குளிகை சுக்கு கியாழத்தில் கொடுக்கலாம். வல்லாரைச்சாறு அல்லது வேலிப்பருத்திச்சாறு வர்மத்தில் பூசி விடலாம். பாதிப்பு முற்றாக நீங்கி விடும்.

“**வர்மக்கலையை சான்றோர்கள் எனப்படும் பண்டைய சமூகத்தினர் வழிவழியாக தங்கள் குடும்பத்தார்க்கு மட்டுமே சொல்லிக் கொடுத்துள்ளனர். ‘சான்றோர் குல இரகசியம்’ என்ற ஓலைச்சுவடி சான்றோர்க்கல்லால் “மற்றவர்க்கு ஈயாதே” என்று தெரிவிக்கிறது. பதிற்றுப்பத்து நூல் சான்றோர் மெய்ம்மறை என வர்மக்கலையை எடுத்தியம்புகிறது.**” என்று பேராசிரியர் ம. இ மரியஜோசப் (பாளையங்கோட்டை) தெரிவித்துள்ளார். பல்லவநாடு சான்றோருடைத்து என்று ஔவை குறிப்பிட்டார் என்பதால் யாழ்ப்பணத்தவர்கள் தான் இக்கலையை தென்னந்தியாவில் பரப்பினார்கள் என்பதை இது உறுதி செய்கிறது.

## வன்ம ஏடுகள்

வன்மங்களையும், வன்மக்கலைப் பற்றியும், வன்மவிதி பற்றியும் நூற்றுக்கு மேற்பட்ட ஏட்டுச் சுவடிகளும் நூல்களும் உள்ளன. ஆனால் அவற்றினை விளங்கிக் கொள்ள வர்மானியிடம் கற்றவர்களால் மட்டுமே முடியும். தமிழ் மருத்துவ நூல்களை விளங்கிக் கொள்வது மிகவும் கடினமான ஒன்று. அதற்கு தமிழ் யாப்பு, தமிழ் சோதிடம், தமிழ் மருத்துவம், தமிழ் மாந்திரிகம் தெரிந்திருத்தல் அவசியமாகும். தமிழ் மொழியை வாசிக்க மட்டும் தெரிந்தவர்களுக்கு எதுவும் விளங்கப் போவதில்லை. தற்போது அச்சேற்றப்பட்ட நூல்கள் சில –

01. வர்ம ஆணி
02. வர்ம புலிப்பாணி
03. வர்ம கண்ணாடி
04. வர்ம திறவுகோல்
05. வர்ம நாலுகைமாத்திரை
06. வர்ம சரநூல்
07. வர்ம பஞ்சவித பதிவடங்கல்
08. வர்ம குடோரிநூல்
09. வர்ம பஞ்சசூத்திரம்
10. வர்ம பீரங்கி
11. வர்ம குருநாடி
12. வர்ம பொன்னூசி திறவுகோல்
13. வர்ம குண்டூசி திறவுகோல்
14. வர்ம வில்லும் விசையும்
15. வர்ம ஒடிவுமுறிவுசாரி நிகண்டகராதி
16. வர்ம லாடசூத்திரம்
17. வர்ம சரசூத்திரம்
18. வர்ம தேரையர் நரம்புச்சூத்திரம்
19. வர்ம சாரி
20. வர்ம சிலோற்பத்தி காண்டம்
21. நரமாமிச நூல்
22. வர்ம ஊசிமுகம் - 1800

23. போகர் வர்மசூத்திரம்
24. வர்ம பரிகாரம்
25. வன்ம விதி
26. வர்மானி
27. வர்ம காவியம்
28. தேரையர் நரம்புசூத்திரம்
29. வர்ம கண்டி
30. வர்ம சூடாமணி
31. வர்ம நிகண்டகராதி – 1200
32. ஒடிவு முறிவு சரசூத்திரம் - 1500
33. ஒடிவு முறிவு சாரி – 1200
34. நரம்பறை சூத்திரம் - 1200

# 4. அறுவை மருத்துவம்

இலங்கை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தமிழர்களின் காலம், சிங்கை நகர் அரசர்களின் ஆட்சிக் காலமாகும். பல்லவ அரசர்களின் புகழ், வீரம், கொடை, தமிழ் புலமை உலகில் பரவியிருந்த காலம் சிங்கை ஆட்சிக் காலமாகும். அக்காலத்தில் சிங்கை அரசர்கள் பலரும் மருத்துவத்துறையில் தேர்ச்சியும், திறமையும் கொண்டு விளங்கினார்கள். அவற்றுக்குச் சாட்சியாக பல மருத்துவ நூல்களை எழுதினார்கள். செகராசசேகரம் 2000, பரராசசேகரம் 12000, பரராசசேகரம் நயனவிதி, பரராசசேகரம் அங்காதிபாதம் முதலிய நூல்கள் சிங்கை நகரின் மருத்துவ வளர்ச்சியையும், மருத்துவ கல்விபற்றியும், மருத்துவ சேவைகளையும் தெரிவிக்கின்றன. பேரரசன் செகராசசேகரன் சிங்கை ஆரியசக்கரவர்த்தி சிறந்த தேர்ச்சி பெற்ற அறுவை மருத்துவன். பெரும்பாலும் அறுவை மருத்துவம், அதன் சிறப்புக்கள் பற்றித் தெரிவிக்கும் செராசசேகரம் என்ற மருத்துவநூல் 2000 பாடல்களைக் கொண்டதாகும். கி.பி 14ம் நூற்றாண்டில் சிங்க நகரில் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இந்நூலில் இன்று 200 பாடல்கள் மட்டும் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதில்தான் உடற்கூற்றியல் பற்றிய பகுதியில் உடலங்களை வெட்டி கூறுபண்ணி எடுத்து அளந்து, நிறுத்துப் பரிசோதனை பண்ணி அறிந்து கொண்டார்கள், என்று பாடல் காணப்படுகிறது. கி.பி 15ம்நூற்றாண்டில் இயற்றப்பட்ட பரராசசேகரத்தில் அறுவை சத்தக கருவிகள் 26 என்றும் பெயர்களும் காணப்படுகின்றன.

அறுவை மருத்துவம் ஏட்டைப்பார்த்து செய்வது அல்ல. நேரடியாக அறுவைமருத்துவரின் கண்காணிப்பில், பயிற்சி பெற்று செய்வது ஆகும். இலங்கையிலே இரதங்களை, வண்டிகளை, ஆயுதங்களை, அறுவைக் கருவிகளை உற்பத்தி செய்வதில் சிங்கை நகரைச் சேர்ந்த மூளாய், வட்டுக்கோட்டை கொல்லர், தச்சர் கைவண்ணம் மிகச் சிறந்தது, அதி நுட்பமானது, வியக்க வைப்பது. சிங்கை அரசர்களின் வெற்றிக்கு பின்னால், அறுவை மருத்துவ சித்திக்கு பின்னால் இக்கம்மியர்கள் தான் இருந்து வந்துள்ளார்கள். கி.பி 13ம் நூற்றாண்டிலே பல்லவத்தின் அரசன் என்றும் ஈழத்தின் திரிபுவனச் சக்கரவர்த்தி என்றும் போற்றப்பட்ட இலங்கை முழுவதையும் நாற்பத்தினான்கு வருடங்கள் தன் குடையின் கீழ் ஆட்சி செய்த விசயகாலிங்கன், கி.பி 1256 இல் புலத்திய நகரில் நடந்த போரில் கை வெட்டப்பட்டது. அப்போழுது சிங்கை நகரில் அவன் மகன் சிங்கை ஆரியசக்கரவர்த்தி, திரிபகைத் குலசேகரன் தந்தையின் வெட்டப்பட்ட கைக்கு சிகிச்சையளிதது்க் காயத்தை மாற்றி உயிரைக காப்பாற்றியவன். குலசேகர பேரரசன் மருத்துவ சிகிச்சையிலும், அறுவை

மருத்துவத்திலும் சிறந்து விளங்கியவன். இம்மன்னனால் எழுதப்பட்ட "சிங்கை அரசர்களின் நயனவிதி" என்ற நூலில் கண் அறுவைச் சிகிச்சை பற்றி தெரிவிக்கிறது.

கி.பி 14ம் நூற்றாண்டின் சிங்கையாரியச் சக்கரவர்த்தி செயவீரன் இலங்கை முழுவதும் இருபது ஆண்டுகள் சிங்கக் கொடியை பறக்க விட்டவன் என்று செகராசசேகரமாலை என்ற இவனியற்றிய சோதிட நூலில் காணப்படுகிறது. இம்மன்னனினால் பொறிக்கப்பட்டது தான் கோட்டைகாமம் கல்வெட்டு. இவ்வெற்றிகளுக்குப் பின் இவன் செகராசசேகரன் என்ற விருது பெற்றான். இம்மன்னன் இயற்றிய நூல் தான் செகராசசேகரம் என்ற மருத்துவ நூலாகும். அந்நூலில் உடற்கூறுபற்றிய பகுதியில் சிங்கை நாட்டின் மருத்துவர்கள் எவ்வாறு உடற்கூற்றியிலைக் கற்றார்கள் என்ற விபரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்பாடல்.

**"இயம்பிய வுடலுமூனு மென்பு நாடிகளு மற்றும்**
**செயம் பெறு சிங்கை நாடன் செகராச சேகரன்மா**
**லுயர்ந்தவாள் வடக்கராக முருட்டிய களத்தின் மீதே**
**அயஞ்சிறி துளதீர வளந்தளஞ் தறிந்த தாமே"**


செகராச சேகர மன்னனின் உயர்ந்த வாள் போர்க்களத்தில் வெட்டி வீழ்த்திய வடநாட்டு அரசர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களின் உடல்களை கீறி ஒவ்வொரு உறுப்பாக அளந்து ஆராய்ந்து ஐயம் சிறிதுமின்றி தீரும்படி சிங்கை நாட்டின் மருத்துவாகள் கற்றார்களாம்.



**சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி**
**செகராச சேகரன்**
**(கி.பி 1280:1414)**



**சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி**
**பரராஜ சேகரன்**
**(கி.பி 1414:1440)**



இராஜா இராசசிம்மன்
ஸ்ரீகி.பி 1911:1920



இராஜா குலசேகரம்
ஸ்ரீகி.பி 1854:1910



மருத்துவத்துறையை
தமிழில் கற்பித்த டாக்டர் கிரீன்

அமெரிக்கமிஷன்
அனுமதியுடன்
யாழ்ப்பாணத்தில் பணி
ஆரம்பம்
38 வருடங்கள்
மருத்துவத்துறையில்
மகத்தான சேவை

## வன்மவிதி சத்தகவிதி காப்பு

"சேவலங் கொடியோன் முன்னாட் சிந்தையிலிரக்க முற்றுப்
பூவுல கோர்களுய்யப் புகழ் கின்ற வன்ம மற்றும்
மூவுலகோரு மெச்சு முதிய சத்திரமும் பாடக்
காவல னொற்றைக் கோட்டுக் கணபதி காப்பதாமே."

என்று பரராசசேகரம் காப்புப் பாடல் தெரிவிக்கிறது. முற்காலத்தில் சேவல் கொடியோனாகிய முருகப் பெருமானால் சிந்தையிரங்கி பூவுலக மாந்தர்கள் உய்வு பெற வேண்டும் மென்பதற்காக கூறிய வன்மம் மற்றும், மூவுலகத்தவர்களும் மெச்சும் படியான நீண்ட

வரலாறு கொண்ட தமிழ் சத்தக விபரங்களையும் அறுவை மருத்துவத்தையும் நாம் பாடுவதற்கு காவலனாகிய ஒற்றைக் கொம்பன் கணபதி காப்பதாமே என்று பொருளாகும். முருகப் பெருமானால் வன்மக்கலை, சத்தக விதி அருளிச் செய்யப்பட்டதால் தான் தமிழர் முருகனுக்கு மட்டுமே செடில் குத்தி, அலகு பாய்ச்சி, தூண்டில் போட்டு, வேல் குத்தி காவடி எடுத்து ஆடுகிறார்கள். முருகனுக்கு நன்றி தெரிவிக்கிறார்கள். முருகப் பெருமான் முருகசாலம் (மருத்துவம்) முதலான நூல்களை அருளியது மூன்றாவது தமிழ்ப் பேரவையில் ஆகும். மூன்றாவது தமிழ் பேரவை இடம் பெற்றது பொதியில் (பொத்துவில்) என்ற இடமாகும். அங்கு அகத்தியர் முதற்புலவராக இருந்து முருகனிடம் தமிழ் மருத்துவம் முதலிய துறைகளைக் கற்றார் என கூறப்படுகிறது. குமரம் என்ற தமிழ் நூலை முருகன் அங்கு அருளினார். அகத்தியரும் அங்கு தான் அகத்தியம் என்ற நூலை அரங்கேற்றினார் என நூல்கள் தெரிவிக்கின்றன.

வன்மவிதியில் நூறு செய்யுள்களும், சத்தக விதியில் முப்பது விதிகளும், சிரைவிதியில் நூற்று ஐம்பது செய்யுள்களும், சத்தகசிகிச்சைவிதி, கண் சத்ததகவிதி, சல்லிய விதி ஏறக்குறைய 500 பாக்கள் காணப்படுகின்றன. இவை ஒரு முழுமையான, நிறைவானவை அல்ல. கிடைக்கப் பெற்ற பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பிறநாட்டவர் வருகையாலும், போர்களினாலும். இடப்பெயர்வுகளினாலும் அழிந்து போயிருக்கலாம். இயற்கையின் சீற்றத்தினாலும் அழிந்து போயிருக்கலாம் ஏனெனில் இவற்றை வைத்துக் கொண்டு இவைதான் பரராசசேகரம் கூறும் அறுவை மருத்துவம் என்று கருதுதல் தவறாகும்.

இன்னொரு பாடலில்,

**"எண்ணுங் கருவி இருபத்தா றென்றுலகில்**
**நண்ணிய வாகடத்தை நாட்டினான்"**

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கை நகரின் குலசேகரன், செகராசசேகரன், பரராசசேகரன் முதலியோரின் பெரும் புகழ் பற்றிய சில குறிப்புகள்:-

01. "**சிங்கையாரியச்சக்கரவர்த்தி, திரிபதகை குலசேகரன்**"

02. இவன் தந்தை விசயகாலிங்க சக்கரவர்த்தி, "**பல்லவத்தின் அரசனும் திரிபுவனச் சக்கரவர்த்தியும்**" என்று திருக்கோவில் கல்வெட்டு.

03. செயவீரன், "**மன்னர் மன்னு செகராசசேகரன்**"

i) "செகராச சேகரன் செவ்வேல் வென்றிகண்டு
திறைபுரிந்தவர் போல்"

ii) "கந்தமலையாரியர் கோன் செகராசசேகரமன்
கங்கைநாடன்"

iii) வென்றிசேரரிய வாரியர் குலாதிபன்"

iv) முத்தமிழ்தேர் செகராச சேகரன் கங்கை நாடன்
கருங்கடற் சேர்ப்பன்".

v) "கங்கை நாடன் கற்றவர் திலகன்"

vi) "செயம் பெறு சிங்கைநாடன் செகராச சேகரன்"

vii) "தென்ன நிகரான செகராசசேகரன் றென்னிலங்கை
மன்னவனாகுஞ் சிங்கையாரியர் மால்"

viii) "பத்மராக மிலங்கு மணிமுடி புனையு மிலங்கை வேந்தர்சீரிய பொன் திறையளக்கச் செங்கோலாச்சுஞ் செகராசசேகரமன் சிங்கை மேவு மாரியர்கோன்"

ix) "சிங்கையாரின் சேதுகாவலன்"

**04. பரராசசேகரன்**

i) "சீரிய செயற் பரராசசேகர வாரியன் தடம்புகழ்"

ii) தென்னிலங்கை மன்னர்களின் மணிமுடியில் சூடிய
மலர்களின் மகரந்தம் பரராசசேகரனை அவர்கள்
பணியும் போது இவனுடைய பாதத்தில் சிந்துகின்றன
என கோட்டை, கம்பளை அரசர்களைப் பரராசசேகரன்
1467ல் வெற்றி கொண்டதை பரராசசேகரன் உலா பாடுகின்றது.

கி.பி 1614ல் கண்டி மன்னன் சேனரதன் மனைவி (நல்லூர் புவிராச பண்டாரத்தின் மகள்), குன்ம நோயால் பாதிக்கப்பட்டு மோசமான நிலை அடைந்திருந்தார். கண்டி, இந்திய மருத்துவர்களால் சில வருடங்களாக அரசியின் நோயை குணமாக்க முடியவில்லை. அப்பொழுது சிங்கை நாட்டின் அரசனாக எதிர்மன்னசிங்கன், பரராசசேகரன் என்ற பட்டத்துடன் ஆட்சி நடத்தி வந்தான். சிங்கை அரசர்களின் மருத்துவ புலமைகளை அறிந்திருந்த மன்னன், பரராசசேகர சக்கரவர்த்தியை தன்மனைவியின் நோயை குணமாக்கி உதவுமாறு வேண்டினான்.

இதற்கு எல்லாம் நான் தேவையில்லை என் மருமகன் குலசேகரன் குணப்படுத்துவார் என தெரிவித்து குலசேகரனை கண்டிக்கு அனுப்பி வைத்தான். குலசேகரன் கண்டி அரசியின் குன்ம நோயைக் குணப்படுத்தினான். சேனரதனும் அரசியும் அகமிக மகிழ்ந்து வெகுவாகப் பராட்டி பொன்னும், மணியும், இரத்தினச் சிவிகையும் பரிசளித்தனர். இந்த நட்பினால் சக்கரவர்த்தி பரராசசேகரனின் தூதுவராக நமசிவாயம் கண்டி அரசில் இடம் பெற்றிருந்தாராம். பின்னர் சேனரதனின் மகன்கள் விஜயபாலனும், குமாரசிங்கனும் பரராசசேகரனின் புதல்விகள் இருவரை மணந்து கொண்டனர். 1619ல் குலசேகரன் முடிசூட்டு விழாவில் (சிங்கை நகரில்) சேனரதன், விஜயபாலன், குமாரசிங்கன் இதன் நன்றிக் கடனாகவே கலந்து கொண்டார்கள்.

கி.பி 1865ல் அமெரிக்க மிசனரி டாக்டர்களினால் அறுவை சிகிச்சை மூலம் பிள்ளையைப் பிறப்பிப்பதற்கு சிரமமாக இருந்த கர்ப்பிணியை இராஜா குலசேகரன் ஊசிகளையும், ஆயுதங்களையும் பாவித்து சிறுஅறுவையினால் குழந்தையை வெளியே எடுத்தார். மானிப்பாயைச் சேர்ந்த அக்கர்ப்பிணியின் கணவன் தன் மகிழ்ச்சியையும்

நன்றியையும் தெரிவிக்கும் முகமாக இரு அரபுக்குதிரைகளையும், ஒரு மேனாட்டுக் குதிரை வண்டியையும் இராஜா குலசேகரனுக்குப் பரிசாக வழங்கினார். நாட்டு மருத்துவ முறையை கேலி பண்ணிய அமெரிக்க டாக்டர்களுக்கு ஆயுதப் பிரசவம் வெற்றியாக நிகழ்த்தியது வியப்பாக இருந்தது.

கி.பி 1872ல் மானிப்பாய் அலோபதி மருத்துவக் கல்லூரியின் அதிபராக பணியாற்றியவர் அமெரிக்க மிசனரி டாக்டர் கிறீன், நவாலியில் ஒரு பெண்ணுக்கு மகப்பேற்றினை பார்த்தார். குழந்தை பெற்ற பின் கர்ப்பப்பை தலைகீழாக புரண்டு விட்டது. அங்கு தங்கி ஒரு வாரகாலம் பலமுறை கர்ப்பப்பையை சரியான முறைக்கு கொண்டு வந்தும் மீண்டும் மீண்டும் கர்ப்பப்பை புரண்டு விட்டது. தன்னாலான எல்லா முயற்சிகைளையும் டாக்டர்.சாமுவேல் கிறீன் செய்தும் எதுவித பலனும் இல்லை. இந்நிலையில் இராஜா குலசேகரன் அழைத்து வரப்பட்டார். டாக்டர் கிறீன் முன்பும் குலசேகரன் மருத்துவப் புலமைபற்றி அறிந்திருந்ததால் தானும் இருந்து பார்க்க விரும்பினார். இராஜா குலசேகரன் வந்த பொழுது எழுந்து நின்று மரியாதை செய்து தானும் கூட இருந்து சிகிச்சையைப் பார்க்க அனுமதி கேட்டார். இராஜாவும் அனுமதித்தார். குலசேகரன் சென்று கர்ப்பிணியின் கர்ப்பப்பையை பார்வையிட்ட பின் ஒரு சிறு போத்தலை அதன் மூடியைத் திறந்து கர்ப்பிணியின் மூக்கில் வைத்து நன்றாக உறிஞ்சி இழுக்கச் சொன்னார். கர்ப்பப்பை கிறீன் பார்த்துக் கொண்டிருக்க, தானாகவே சரியான நிலைக்கு மாறியது. இது என்ன மருந்து, இது என்ன சிகிச்சை முறை? கிறீன் தமிழ் மருத்துவத்தின் சிறப்பை எண்ணி வியந்து இராஜாகுலசேகரனை "Great Physicion Of Ceylon" என்று பாராட்டினார். அதுவே மக்களும் அவரை "பெரிய பரிகாரியார்" என்று தமிழில் அழைக்க காரணமாகியது. கிறீன், குலசேகரனிடம் (ஆறுமுகம்) தாமும் தமிழ் மருத்துவம் கற்க விரும்புவதாகவும் இதை குலசேகரன் கற்றுக் கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். 1873ல் அவர் அமெரிக்கா திரும்பிச் செல்லும் வரை ஒருவருட காலம் டாக்டர் கிறீன் இராஜா குலசேகரனின் மாளிகைக்கு சுழிபுரம் சென்று கற்று வந்தார்.

கிறீன் பற்றி எழுதுபவர்கள் இவ்வுண்மையை எழுதுவதில்லை, மறைத்து விடுவார்கள். இதனை வெளியிட்டவர் பண்டிதரத்தினம் C.S நவரத்தினம் (நவாலி).

சிங்கை ஆரியசக்கரவர்த்தி செகராசசேகரன் இயற்றிய தட்சிணகைலாச புராணம் என்ற வரலாற்று நூலில் அரசகேசரி பாயிரத்தில் நூலாசிரியன் பற்றிக் குறிப்பிடுகையில்:-

**பொருவரு புவியை யொருகுடைப் புரபோன்**
**றென்னி லங்காபுரி திசைதொறு மருவு**
**மின்னிலங்கிய வேல் மேலாம் புயந்து**
**பரவா முடித்த பார் முழுதாண்ட**
**விடலாண் வயமா விளங்கிய கொடியோன்**
**சிங்கை யாரின் சேதுகாவலன்**
**கங்கை நாடன் கற்றவர் திலகன்**
**ஆயும் மறையுடனரிய சோதிடம்**
**பாய்திரை கடலுட் பலவு முணர்ந்தோன்**
**ஒப்பிலா முத்தமிழோர்ந்த**
**செப்பருஞ் செகராச சேகரனே'**

என்று புகழ்ந்துரைக்கிறது.

## அசுர மருத்துவம்

பரராச சேகரம் என்னும் மருத்துவ நூலில் அசுர மருத்துவம் என்ற தலையங்கத்தின் கீழ் காணப்படும் சிகிச்சை முறைகள். இராக்கத மருத்துவமே இங்கு அசுர மருத்துவம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவையாவன:-

01. மலவாசலினூடாக குழாயை செலுத்தி வாய்வை உறிஞ்சி வாங்குதல். குழாய் வாயுவை உறிஞ்சத்தக்க தக்கை அமைப்புடன் வடிவமைக்கப்பட்டவை. மூங்கிற் குழாயினால் காணப்பட்டது.

02. வயிற்றில் நீரூசி (குழாய் போன்ற ஊசி) யால் குத்தி நீர் வாங்குதல். இதுவும் குழாய்தக்கையைப் பயன்படுத்திச் செய்யப்படும் வெள்ளியினாலான கருவி.

03. கழலை, கட்டி முதலியவற்றை அரிந்து (வாளால், சத்தகத்தினால்) களைந்திடுதல்.

04. கோலாற் (சுட்டிகைக் கோல்கள் 9 வகை) சுடுதல்.

அ) அரையாப்புக்கட்டிகள், பெருவலி
இடமணிபந்தம், இருகுதிநாடி, சிரசு ஆகிய
இடங்களில் சூடு போட்டு வலியை நிறுத்துதல்.

ஆ) உண்ணாக்கு வளர்ச்சியில் அனாமிகாவிரலில்,
மூளை நரம்பினில் ஆண்களுக்கு வலப்பக்கமும்,
பெண்களுக்கு இடப்பக்கமும் சூடு போடுதல்.

இ) கண்கரிப்பு நீர்வடிதல் நோயில் புருவகடை நரம்பு கபாலம் ஆகிய இடங்களில் சூடு போடுதல்.

ஈ) பிறவீச்சு, வலி, சன்னி நோய்களில் உடலில் சூடு போட்டுக் குணப்படுத்தும் முறை கையாளப்பட்டுள்ளதை பரராசசேகரம் தெரிவிக்கிறது. உச்சியில் புள்ளடியாலும், பிடரியில் பிறைக்கால் கொண்டும், மற்றும் இடங்களில் மற்ற சுட்டிகைகளைப் பயன்படுத்தியும் கை, கால், நடுமுதுகு, பரண்டையின் மேற்கணைக் கால், கண்ணிமை, நெற்றி, மேல்மார்பு, தொப்பூழ், பரண்டையின் மேல் உள்வளம் 4 விரல் மேலாக கதிர் வளர்த்து விளக்கினிலே காய்ச்சி 2 அங்குல நிளமாக சுட்டு எருமைப்பால் சீரகம் சேர்த்து மத்தித்து பூச குத்து மாறிவிடும்.

**"கலி என்னும் வலிதான் வந்து கடினமாய் வலித்துவாங்கில்**
**நலியவே யெண்ணெய் சூடு நசியங்கள் செய்து பாரே"**

என பரராசசேகரம் வலி நோயில் சூடு சிகிச்சை செய்யுமாறு தெரிவித்துள்ளது.

05. கண்ணுரித்தல் - காசநீர் படலமாக படிந்து கண்பார்வையை மறைக்கும் போது கண்பசாடு உரித்தல் என்னும், கண் உரித்தல் என்றும் சிகிச்சையைச் செய்தனர். இதற்காக முப்படையாக தயாரிக்கப்பட்ட ஊசியையும், முன் பகுதி தட்டையான சலாகையும் பயன்படுத்தி வந்தனர்.

06. இரத்தம் வாங்குதல் - விலாவின், முன்கைவிரல் நரம்பினில் ஆய்ந்து அதில் நீருசியால் குத்தி நடுநரம்புக்குள் ஒரு எள்ளளவு உட்செலுத்தி இரத்தம் வாங்குதல். வயிற்றில் ஒரு அங்குலம் மிஞ்சினால் கடினமாகும். செய்முறை மாத்திரை (அளவு) தப்பினால் மரணம் ஏற்படலாம். திடமறிந்து மருத்துவம் செய்க. “சதை அறிந்து கத்தி நாடுக” சதை அளவுக்கு மீறி கத்தி போகக் கூடாது, போனால் உள்ளுறுப்புக்கள் வெட்டப்பட்டுவிடும் என்பதாகும். வாதநீர் குத்தி வாங்கல் - பாதம், முழந்தாள் கீழ் பறள் கெண்டை நரம்பினில் நீருசியால் குத்தி நீரை வடியவிடுதல் அல்லது வாங்குதல்.

07. கீறல், அறுத்தல், வெட்டுதல், பிளத்தல், தைத்தல் முதலியன அவற்றிற்குரிய சத்தகம் எனப்படும் சிறிய தகடு போன்ற கத்திகளைக் கொண்டு இவற்றை செய்தனர். பின்னர் ஊசி நூல் கொண்டு தைத்துக் கட்டினர். அறுவை சிகிச்சையின் போது தைத்த பின்னர் கொதி உப்பு நீரில் சுத்தமான பஞ்சினை அல்லது வெள்ளை பருத்தி துணியை நனைத்துப் பிழிந்து வைத்துக்கட்டி வந்தனர்.

08. தொக்கணம் என்பது உடலைப் பிடித்தல், தேய்த்தல்,அமர்த்தல்,தட்டுதல், உருவுதல்,நீவுதல்,முறித்தல் முதலிய செயல்களைச் செய்தல் ஆகும். எண்ணெய் பூசியும் செய்வர். எண்ணெய் பூசாமலும் செய்வதுண்டு. வசையாத உடலுறுப்புக்களை வசைப்படுத்துவதற்கும், இயங்காத கை,கால்களை இயங்க வைப்பதற்கும், சூம்பிய அவயங்களை பருக்கச் செய்வதற்கும், விறைப்பு, பிடிப்பு, சோர்வு முதலியவற்றைப் போக்குவதற்கும் தொக்கணம் செய்யப்படுகின்றது.

09. சலாகையிடல் என்று பிற பொருட்களை உடலுள் தேடுவதற்கும், குழாய்களின் அடைப்பினை நீக்குவதற்கும், புரையோடிய புண்களை அளப்பதற்கும், காது, மூக்கு குழல் பகுதிகளில் உள்ள பிற பொருட்களை எடுப்பதற்கும் உதவுகின்ற சலாகையினை பயன்படுத்தல் என்பதாகும்.

10. இரத்தம் வாங்குதல், கொம்பு விடல் முனை கடுகளவுக்கு கூராக்கப்பட்ட வளைந்த மிருகக் கொம்பினை அடிப்பகுதி மூன்றங்குல அகலமுடையதாகவும் தோற்பையில் காற்று புகாதவாறு இறுக்கமாக கட்டியதாகவும் இருத்தல் வேண்டும். ஊசியால் குத்தப்பட்டோ, சத்தகத்தால் கீறப்பட்டோ உள்ள இரத்தக்குழாயில் கொம்பின் முனையை வைத்து, தோற்பையை இழுக்க இரத்தம் உறிஞ்சி வாங்கும். இதனை கொம்பு விடல் என்றும் அழைப்பர்.

11. கலிக்கம் என்பது மயக்க நிலையில், சன்னியில் விடக்கடியின் போது சில சாறுகளை அல்லது மருந்துகளை சில துளிகள் கண்ணில் விடுதல். மயக்கம், விடம் தீர்ந்த பின் மாற்று மருந்துகள் கண்ணில் இட வேண்டும்.

12. நசியம் சில சாறுகளை அல்லது சில மருந்துகளை சில சொட்டுக்கள் மூக்கில் விடுதல். தலை நோய்களில், சன்னியில், விடங்களில், நாசி சம்பந்தப்பட்ட நோய்களில் செய்யப்பட்டு வருகிறது.

13. புகையுண்ணல் என்பது தணலில் சில மருந்துகளையிட்டுப் புகைக்கச் செய்து அப்புகையை நேராக நோயுற்ற அவயங்களில் படச்செய்தல். சூலை, புற்று, தொய்வு, நீரேற்றல், நீர்ப்பாய்ச்சல், பவுந்தரம், தொண்டை நோய்களில் புகையுண்ணல் செய்யப்பட்டு வருகிறது.

### உட்புகுந்த பிற பொருட்கள் எடுத்தல்

பிறபொருட்கள் உடலில் உட்புகுந்தால் அவ்விடத்தில் வலி, வீக்கம், வேதனை, அடிக்கடி இரத்தம் பொசிவு, நிறமாற்றம், அழற்சி, புண் எளிதில் ஆறாது. புண்ணிலிருந்த நீர் வெளி வருதல், காயத்தின் வடிவும் இவற்றைக் கொண்டு பிறபொருட்கள் உட்புகுந்ததை அறியலாம்.

கையினால் தொட்டு சூடு காணப்படுவதால் அறியலாம். அவ்விடத்தை தடவி நீவிவிடும் போது தோன்றும் வலியைக் கொண்டு பிறபொருள் இருக்குமிடத்தை அறியலாம்.

சில ஆயுதங்கள் அல்லது பிற பொருட்கள் உடைந்து உள்ளே தங்கிவிடும். உலோக துண்டுகளை காந்தக்கல்லைப் பயன்படுத்தி எடுக்கலாம். வெளியே தெரிகின்ற பெரிய ஆயுதங்களையோ அல்லது குச்சிகளையோ எந்த வழியினால் உட்புகுந்ததோ அதற்கு எதிர் திசையான வழியில் பலமாக இழுத்து எடுத்தல் வேண்டும். கையினால் வெளியே இழுத்து எடுக்க கூடியவற்றை கையினால் எடுத்தல் வேண்டும். கையினால் எடுக்க முடியாவிடில் கருவிகளைப் பயன்படுத்தி பிடித்து இழுத்து எடுக்க வேண்டும். அதுவும் சரிவராவிட்டால் சிறுகத்தியினால் அல்லது சிறு சத்தகத்தினால் கீறி எடுத்தல் வேண்டும். எடுக்கும் போது நோயாளியை பரிசாரகர்கள் மூலம் ஆடாது அசையாது பிடித்திருக்கச் செய்தல் வேண்டும். கீறி எடுக்கும் போது வன்மவிதிகளை கடைப்பிடித்து உணர்விழக்கச் செய்தல் வேண்டும். இழுத்து எடுக்கச் சிரமமானவற்றை விசைப்பொறியில் அல்லது விற்பொறியில் கயிற்றினால் தொடுத்துக் கட்டி வெளியேற்றினார்கள். விசைப்பொறியும் விற்பொறியும் கோட்டைஅரணில் அரசர்களினால் அரண்மனைப் பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்படும் பொறிகளாகும். குடலினுட் சென்ற நாணயக்குற்றிகளை, பிறபொருட்களை மலம் கழிக்கச் செய்து வெளியேற்றினார்கள் தொண்டைக்குழாயில் சிக்கி உள்ள மீன்முள்ளு, முதலியவற்றை விண்டகண்ணியை அங்குலியை பாவித்து வீணை, வளைவு சலாகைகளை அல்லது, சாவணங்களை பாவித்து வெளியே எடுத்தல் வேண்டும்.

# 5. சத்தகவிதி

மெல்லிய தகடு போன்ற மிகவும் கூரான ஆயுதங்கள் சத்தகம் எனப்பட்டன. இவை பல வடிவங்களில் பல அளவுகளில் தேவைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு கீறல், கிழித்தல், பிளத்தல், வெட்டுதல், இறுத்தல், அரிதல், சீவுதல் போன்றவற்றைச் செய்தனர். இவ்வகையான சத்தகங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற விதிகளே சத்தக விதிகளாகும். வடமொழியில் இது சத்திரம் எனப்பட்டது. இவற்றின் தோற்ற அமைப்புக்களுக்கு ஏற்ப இவற்றிற்கு பெயரிடப்பட்டது. விதி என்னும் போது ஒழுங்குகள், முறைகள் செய்யப்பட வேண்டியவை என்று பொருளாகும். பாவிக்கும் இடங்கள், பாவிக்கும் முறைகள், பாவிக்க வேண்டிய நோய்கள், அதற்குரிய நேரங்கள் பற்றித் தெரிவிப்பவை விதிகள் ஆகும். உயிராபத்தான வேளைகளிலும், விபத்துக்களின் போதும் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அறுவை சிகிச்சை மிகவும் அவசியமான இன்றியமையாத ஒன்றாகும். அகத்தியரே இன்றும் மேனாட்டு அறுவைச்சிகிச்சை நிபுணர்களால் முதலாவது அறுவை நிபுணராக போற்றப்பட்டு வருகிறார். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அவர் அறுவை சிகிச்சை செய்துள்ள வரலாறு காணப்படுகிறது. காலஞ்செல்லச் செல்ல அறுவை மருத்துவம் நன்கு வளர்ச்சியடைந்து பரிணாமங்களினால் பல பரிமாணங்களைப் பெற்றுள்ளது.

**சத்தகம் முதலியவை**

01. கைவாள் (கரபத்திரம்)
02. விண்ட கண்ணி (குழாய்க் கருவி)
03. சாரி ( நீண்ட அலகுபோன்ற கருவி)
04. துவமுகம் (இருவாய் பகுதிகளைக் கொண்டது)
05. விரிகி (விரிந்த கூரான ஆயுதம்)
06. சிறுவாள் (மண்டலாக்கரம்)
07. உற்பலம் (நீலோற்பவ மலரின் வடிவ ஆயுதம்)
08. ஊசி (பல வடிவங்களையும், செயற்பாடுகளையும் கொண்ட ஊசிகள்)
09. விருத்தி ( அகலமான சத்தகம்)
10. கோடரி (குடோரி)
11. முத்தரி (மும்முனைகளை உடைய அரியும் கருவி)
12. கத்தரி (பல வடிவங்களைக் கொண்ட கத்தரிக்கும் கருவி)
13. சிறு சத்தகம் (கபத்திரம்)
14. பாம்பு சத்தகம் (பாம்பு வடிவ சத்தகம், பண பத்திரம்)

15. தூண்டில் (சிறிய தூண்டில்முள்)
16. அங்குசம் (குத்தும் ஊசி)
17. தத்தரி (பற்களை அரிய, சுரண்ட பாவிக்கும் சத்தகம்)
18. கூர்ச்சரம் (ஊசி, பலஊசி)
19. சத்தகம் (சிறுகத்தி, சத்திரம்)
20. அந்தர்முகம் (வெட்டுக்குறடு)
21. வஞ்சியிலை சத்தகம் (வேதசபத்திரம்)
22. படிசம் (பிடிகருவிகள்)
23. அங்குலி (விரல்வடிவ கருவி)
24. தாரை (துளையுள்ள குழாய்போன்ற சலாகை)
25. வீணை (வீணை தந்தி போன்ற கம்பி மாதிரி சலாகை)
26. குறும்பி வாங்கி ( காதின் குறும்பியை வெளியேற்றுவது)
27. கொம்பு
28. பீச்சுகுழல் (பை)

பரராசசேகரத்தில் தனித்துக் காணப்படும் கருவிகள் சில, அங்குசம், கூர்ச்சம், விண்ட கண்ணி, வீணை, தாரை, முத்தரி, தத்தரி, சத்திரம், குறும்பி வாங்கி அவையாகும். மேலும் பல ஆயுதங்கள், கருவிகள் இருந்திருத்தல் வேண்டும். அவை அழிந்த போன ஏடுகளுடன் சேர்ந்து மறைந்துவிட்டன. செகராசசேகரம் பெரும்பாலும் அறுவை சிகிச்சை முதலிய இராக்கத சிகிச்சை, வெளிமருந்துகள் பற்றியே இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இருந்தாலும் இரண்டாயிரம் பாடல்களில் இருநூறு பாடல்கள் மட்டுமே தற்பொழுது காணப்படுகின்றன.

வன்மவிதி, சத்தகவிதி, சிரைவிதி, சுட்டிகைவிதி போன்றவற்றை கையாளும் போது கவனிக்க வேண்டிய வியழம் அமுதநிலை எங்கு உள்ளது. அமுதம் உடல் முழுவதும் சுற்றி வருகிறது என்று சித்தர்கள் தெரிவித்துள்ளனர். மனித உடலின் உறுப்புக்களை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நுண்ணிய முறையில் விவரித்து அவற்றின் எடைகளையும் தந்தள்ளனர். வேண்டியவாறு உடலை அறுத்து தனித்தனியே எடுத்து கணணாரக் கண்டும் நிறுத்தும் ஆய்ந்துள்ளனர். 72000 நரம்புகளையும் சரியான முறையில் சரியாக கணக்கிட்டுள்ளனர். நரம்புகளின் முடிச்சுக்கள், வன்மங்களையும் ஐயமின்றி தெரிவித்துள்ளனர்.

அறுவைச் சிகிச்சை, குடோரியிடல், சுட்டிகை, அட்டைவிடல் முதலிய சிகிச்சைகளையும் செய்யும் போது அமுதநிலைகளை நன்கு கவனிக்க வேண்டும் வன்மங்களை அவதானமாகக் கணித்து செய்தல் வேண்டும். தவறினால் அறுவை சிகிச்சையினால் மரணம் சம்பவிக்கலாம். பரிச்சயத்தில் நாம் கண்டிருக்கிறோம். சாதாரண மக்களே அறுவை சிகிச்சையில் அமுதநிலையில் கத்திபட்டதால், வன்மம் அறுபட்டதால் செத்துப் போனார் என்று கூறுவர். Dr.சிற்பை, கி.பி 1543 ம் ஆண்டுதான் முதன்முதலில் வெசாலியஸ் என்னும் (Vesalius) பெல்ஜிய மகனார் உடலை அறுத்து உள்ளுறுப்புக்களை பரீட்சித்துக் காட்டினார் என்று குறிப்பிடுகிறார். ஆனால் யாழ் சிங்கை அரசர்கள், சிங்கை நாட்டின் மருத்துவர்கள் கி.பி1300ம் ஆண்டளவில் உடலை அறுத்து எலும்பு, தோல், நாடி, நரம்பு உறுப்புக்களை தனித்தனியாக அளந்து அளந்து கற்றார்களாம் என்று செகராசசேகரம் என்ற நூல் தெரிவிக்கின்றது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அளந்து அறிந்த விபரங்கள் அகத்தியர் பாடல்களில் காணப்படுகிறது.

சாதாரணமாக சிங்கை அரசர் மாளிகையில் பேணப்பட்டு வந்துள்ள ஆயுதங்கள்.

**01.கைவாள் :-** சிறிய கைவாள் (கரபத்திரம்) ஒருசாண் நீளம் இருவிரற்கிடை அகலமும் கொண்டது. ஒருபக்கம் சிறுசிறு பற்களை உடையது. கூர்மையான முனைகளும், மரத்தாலான கைபிடியும் கொண்டது. எலும்புகளை அறுப்பதற்கு பயன்படுகிறது.

**02.விண்ட கண்ணி :-** குழாய் போன்ற கருவி, இவற்றின் பக்கங்களில் துவாரங்கள் அமைந்திருக்கும். தொண்டையின் நோய்களைப் பார்ப்பதற்கும், அண்ணாக்கு வளர்ச்சிக்கு தொண்டைக்கிரந்தி வளர்ச்சி போன்றவற்றை பரிசோதனை செய்யவும் சிகிச்சை அளிக்கவும் பயன்படுகின்றன. பெண்குறியை சோதனை செய்யவும், புண்முதலியவற்றுக்குச் சிகிச்சை அளிக்கவும் உதவும். நடுவில் துவாரமுள்ள குழாய் போன்ற கருவியாகும். குறிப்புண்களை கழுவ, மருந்து போடுவதற்கும் உதவுகிறது. ஆசனவாயில் விரணம், மூலம், முளை, பகந்தரம் போன்ற நோய்களை சோதனை செய்யவும் சிகிச்சை அளிக்கவும் இக்குழாய்கள் உதவுகின்றன. இவை ஐந்து அங்குல நீளமுள்ளதாகவும் ஐந்து அங்குல சுற்றளவுள்ளதாகவும் இருக்கும்.

மூன்று தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் விண்ட கண்ணிகளில் துவாரங்கள் வெவ்வேறு இடத்தில் வெவ்வேறு அளவுகளில் அமைந்திருக்கும்.

**03. சாரி :-** நாரை அலகு போன்ற கூரான ஆயுதம். இவை சிரையிலிருந்த இரத்தம் வடியப் பண்ணப் பயன்படுத்தப்படுகிறது.

**04. துவமுகம் :-** சலாகையின் இரு பக்கங்களிலும் இரு முகங்களைக் கொண்ட ஆயுதம். முன்முனை மலரின் மொட்டு போன்று அமைந்திருக்கும். கண்ணில் பசாடு உரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. மறுமுனை வழவழப்பாகவிருக்கும். இது கண்ணுக்கு மருந்து இடப் பயன்படுத்தப்படுகிறது. இச்சலாகை வெள்ளி, செம்பினால் செய்யப்படுகிறது.

**05. விரிகி :-** அகன்ற ஊசி போன்றுள்ளது. நெல் வடிவமானது. ஒரு அங்குல கருக்குள்ளது. கட்டிகளைக் கீறவும், சீழ்க்கட்டிகளை பிளப்பதற்கும், தசையின் கீழுள்ள குழாயை கீறவும் பயன்படுத்தப்படுகிறது.

**06. சிறுவாள் :-** வாள்வடிவில் அமைந்த சிறியகத்தி. புறப்பக்கம் கூர்மையான கருக்குடன் கூடியது. மாமிசவளர்ச்சிகளை அறுப்பதற்கு பயன்படுகிறது.

**07. உத்பலம் :-** நீலோத்பல மலர் வடிவுடைய சத்தகம், தசையை கீறுவதற்கும், பிளப்பதற்கும்பயன்படுத்தப்படுகிறது.

**08. ஊசி :-** இழைகள் நன்கு நுழையக்கூடிய துவாரங்களை கொண்ட ஊசிகள். உடையாமலும் பலமாகவும் இருத்தல் வேண்டும். சதை பிடிப்பான பகுதிகளைத் தைப்பதற்கு நேரான ஊசி மூன்று அங்குல நீளம் உடையது. உள்ளுறுப்புக்களைத் தைப்பதற்கு வளைந்த இரண்டரை அங்குல ஊசி பயன்படுகிறது. நூல் கோர்க்காத தனி ஊசிகளும் வலிப்பு, மயக்கம் முதலிய நேரங்களில் செடில் குத்துவது போல குத்தினர். குழாய் போன்ற ஊசிகளை வயிற்றில் குத்தி நீரை உறிஞ்சப் பயன்படுத்தியதாக பரராசசேகரம். சுடுவதற்கும் ஊசிகள் பயன்படுத்தப்பட்டன. காது, மூக்கு குத்துவதற்கு கைபிடியுடன் கூடிய ஊசி பயன்படுகிறது.

**09. வீருத்தி :-** அகலமான கூரான உளி போன்ற சத்தகம். வெட்டுதல், கிழித்தல், அறுத்தல் இவற்றைச் செய்வதற்கு பயன்படுகிறது.

**10. கோடரி :-** கைப்பிடியுடன் கூடிய மிகுந்த கூரான சிறிய கோடரி. அரை அங்குலம் கருக்கு முனையுள்ளது. குடோரி என்னும் சிகிச்சை முறையில் கோடரி பயன்படுகிறது. கோடரியைப் பயன்படுத்தி செய்வதினால் அச்சிகிச்சை முறை குடோரி எனப்படுகிறது. தோலை மட்டும் வெட்டும் அளவுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டது. கோடரியினால் அரை அங்குல நீளமான வெட்டுப் போட்டு அதில் மருந்துப் பொடியை நேரடியாக இரத்தத்துடன் கலக்கச் செய்வது. ஆபத்தான வேளைகளிலும், அவசரம் கருதியும் மருந்தினை குடிக்க முடியாத நிலையிலும் குடோரி சிகிச்சை செய்யப்படுகிறது.

**11. முத்தரி :-** மூன்று முனையுள்ள அரம் போன்ற கருவி நுனியில் உருண்டு வழ வழப்பபாகவும் உள்ள கருவி. கல்லடைப்பு, சதையடைப்பு சுத்தம் பண்ண பயன்படுகிறது. ஒரு பக்கம் சுத்தினால் மட்டும் சுரண்டும். மறுபக்கம் சுத்தினால் சுரண்டாது.

**12. கத்தரி** :- பல வடிவங்களைக் கொண்ட கத்தரிக்கும் கருவிகள். நேரானவை, நுனி கூரானவை, வளைந்தவை. தோல், தசைகள், மயிர், நூலிழைகளை துண்டிக்க உதவுகிறது.

**13. சிறுசத்தகம்** :- சாய்வான அதாவது தட்டையான சத்தகத்தின் ஒருமுனை நீளமாகவும் அதே பக்க மறுமுனை அதனின்றும் நீளம் குறைவாகவும் இருக்கும். காலில் புகுந்த முள், ஆணி, தடிகளின் நுனி, அழுக்குகள் போன்ற வெளிப் பொருட்களை வெளியேற்றப் பயன்படுகிறது. தோலை அரிவதற்கும் உதவுகிறது. அறுத்தல்,குத்தல்,கீறல் செயல்களுக்கும் பயன்படுகிறது.

**14. பாம்புச்சத்தகம்** :- பாம்பு வடிவமும் தலையில் கருக்கும் கொண்ட சத்தகம், பண பத்திரம் எனவும் அழைக்கப்படும். சலதாரை, குறி முதலியவற்றைச் சுத்தம் பண்ணவும், அடைப்பினை நீக்கவும் பயன்படுகிறது. சத்தகங்கள் பல வடிவங்களில் காணப்படுகின்றன. செவி, மூக்கின் முளைகளை களைவதற்கும் பயன்படுகிறது.

**15. தூண்டில்** :- தூண்டில் முள், மிகவும் கூர்மையான நுனியுடையது. முகப் பகுதி வளைந்திருக்கும். நாடி, நரம்புகளையோ, அண்ணாக்கு பிற பொருட்களையோ கொழுவி இழுக்க உதவுகிறது. தொண்டையில் சிக்கிய மீன்முள்ளு, தலைமயிர் முதலியவற்றை வெளியேற்ற உதவுகிறது.

**16. அங்குசம்** :- குத்தும் ஊசியும் இடையில் வளைந்த தடையும் உள்ள ஆயுதம். உடலின் செயற்பாடுகளை நிறுத்தவும், உடலை நமது விருப்பத்திற்கு ஏற்ப இயங்கச் செய்யவும், உடலை விறைக்கச் செய்யவும், உடலில் மயக்கத்தை உண்டாக்கவும் பயன்படுகிறது. பிள்ளையாருடைய கையில் அங்குசம் உண்டு. யானைப் பாகனும் யானையைக் கட்டுப்படுத்த அங்குசம் வைத்திருக்கிறான்.

**17. தத்தரி** :- பற்களை அரிய பயன்படுகிறது. ஒழுங்கில்லாத பற்களை அரிந்து சீர்செய்யவும், பற்களில் படிந்த காரை, அழுக்குகளை சுரண்டவும் பயன்படுகிறது.

**18. கூர்ச்சரம்** :- ஊசி, பல ஊசி ஒன்றாகச் சேர்த்துக் கட்டியதாகவிருக்கும். கூர்ச்சம் எனவும் அழைக்கப்படுகிறது. மூன்று, ஐந்து, ஏழு என்று ஒன்றாகச் சேர்த்துக் கட்டி குத்துவது. குட்டம், விறைப்பு, சொரசொரப்பான தடித்த தோல் நோய், வெண்புள்ளி நோய்களில் இரத்தத்தைக் கசியச் செய்யவும், நோயைக் குணப்படுத்தவும் பயன்படுகிறது. பச்சை குத்தும் போது இவ்வூசி பயன்படுகிறது.

**19. சத்தகம் (சிறுகத்தி)** :- சத்தகம் என்பது தட்டையான மெல்லிய தகடு போன்ற மிகவும் கூரான சிறிய ஆயுதம். சாதாரணமாக தமிழர் வீடுகளில் நாளாந்தம் பல சத்தகங்களைப் பயன்படுத்துகின்றனர். அறுவை சிகிச்சையில் சத்தகம் அவசியமானது. அவற்றின் வடிவத்தைக் கொண்டு இவை பல பெயர்களில் காணப்படுகின்றன. அகல சத்தகம், வளைவு சத்தகம், சிறு சத்தகம், சத்தகம், உத்பல சத்தகம், வஞ்சியிலை சத்தகம் (வேதசபத்திரம்) என அறுவை சிகிச்சையில் பல சத்தகங்கள் பயன்படுகின்றன. இவை வடமொழியில் சஸ்திரங்கள், சத்திரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. தினமும் வீடுகளில் புல்லுச் சத்தகம், காம்புச் சத்தகம், கொக்கைச் கத்தகம், சத்தகம் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன.

**20. அந்தர்முகம்** :- வெட்டுக்குறடு, அரை அங்குலம் கருக்கு மணையுள்ளது. தசை நாரின் வலிமையான பகுதிகளில் சிக்கியுள்ள வெளிப் பொருட்களை அகற்றும் போது வெட்டுவதற்கு பயன்படுகிறது.

**21. வஞ்சியிலை சத்தகம்** :- வேதச பத்திரம் எனவும் அழைக்கப்டுகிறது. வஞ்சியிலை (நொச்சியிலை) வடிவான கூரான சத்தகம். குத்துவதற்கும் கீறுவதற்கும் பயன்படுகிறது.

**22. படிசம்** :- கவ்விப்பிடிக்கும் கருவிகள். சற்றுப் பெரியவை உடலில் புகுந்த பிற பொருட்களைப் பிடித்து இழுத்து வெளியே எடுக்கப் பயன்படுகிறது. அறுவைச் சிகிச்சையின் போது வசதியாக உடலின் உறுப்புக்களைப் பிடிப்பதற்கும் இவை உதவுகின்றன.
கெட்டியாகப் பிடிப்பதற்கு இடுக்கி எனப்படும் சாவணம் உதவுகின்றன. குறடுகள் அதன் வடிவத்தைக் கொண்டு சாதாரண குறடு, காக குறடு, சிங்க முக குறடு, நண்டுக்கால் குறடு, கரடி வாய்குறடு, பருந்து குறடு என்று பலவித அமைப்புக்களில் தேவைக்கு ஏற்பச் செய்துள்ளார்கள். நேரான, கட்டையான, வளைந்த, சிறிய, பெரிய, சாவணங்கள் பல அளவுகளில் உள்ளன. இந்தச் சாவணங்கள், குறடுகள் இன்றும் கொல் கம்மாலையில் தயாரித்துப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சிங்கை நகர் கொல்லர்களே இவற்றை உற்பத்தி செய்து வழங்கினர். நடுவில் வளைவுள்ள பெரிய கர்ப்ப சாவணம் கர்ப்பத்தை வெளியேற்றப் பயன்படுத்தப்படுகிறது. நுனியில் வளைந்த சாவணம், புண்களில் அழுக்குகளை வெளியேற்ற பயன்படுகிறது. குறடு, சாவணங்களில் பூட்டுள்ள குறடு சாவணங்களும் உண்டு. படியவைக்கப் பயன்படுபவை படிசம் எனப்பட்டன.

**23. அங்குலி** :- விரல் போன்ற முன்பகுதி தட்டையான கருவி தொண்டையை சோதனை செய்யவும், தொண்டை நோய்களுக்கு சிகிச்சையளிக்கவும், மருந்திடவும் பயன்படுகிறது. முற்காலத்தில் மருத்துவன் தன் ஒரு விரலால் நாக்கை அழுத்திப் பிடித்துக் கொண்டே சிகிச்சை செய்தான்.

**24. தாரை** :- உட்பக்கம் துளையுள்ள குழாய் போன்ற சலாகை வடிவான கருவி. செம்பினால் அல்லது வெள்ளியினால் செய்யப்படுவது. நீராமை, சல அடைப்பு போன்ற நோய்களில் தடைபட்டு, தேங்கியுள்ள நீரினை வெளியேற்றப் பயனபடுகிறது. உடம்பிலுள்ள சிறு வெளிப் பொருட்களை பார்ப்பதற்கும், உறிஞ்சுவதற்கும் பயன்படுகின்றன.

**25. வீணை** :- வீணையின் தந்தி போன்ற அமைப்பில் உள்ள சலாகைகள் மெல்லிய அழுத்தமான வழவழப்பான கம்பி போன்ற தடவு சலாகைகள். நேரான சலாகை, வளைவான சலாகை, முகப்பகுதி சற்று அகன்ற சலாகை உட்செலுத்தி நாலா பக்கமும் தேடுவதற்கு பயன்படுபவை. காது, மூக்கு,விரணம் முதலியவற்றை தடவிப்பார்க்கவும் உள்ளிருக்கும் பிற பொருட்களை அகற்றவும் பயன்படுகின்றன. இவை ஆறு, ஒன்பது அங்குலங்களில் காணப் படுகின்றன. இவ்வாறு பல விதமான வடிவங்களில் பலவிதமான அளவுகளில் பலவித சலாகைகள் காணப்படுகின்றன.

**26. குறும்பி வாங்கி** :- காதில் சேரும் கழிவுப் பொருட்களான குறும்பியை வெளியே எடுக்கும் கருவி. காதினுட் சேரும் பிற பொருட்களை, பூச்சி, வண்டு முதலியவற்றை வெளியே எடுக்கும் கருவியாகும்.

**27. கொம்பு** :- கூரான முனையாகச் செய்யப்பட்ட கொம்புகள், இரத்தம் உறிஞ்சப் பயன்படுகிறது. கெட்டுப்போன முலைப்பாலை உறிஞசப் பயன்படுகிறது. சிலவற்றில் அடிப்பாகம் மூன்று அங்குல அகலத்தில் தோலால் இறுக்கமாக கட்டப்பட்டு பை போன்று காணப்படும்.


**28. பீச்சுகுழல்** :- மருந்துக் கலவைகளை, கியாழங்களை, எண்ணெய்களை உடலுள் பீச்சுவதற்கு குழாயுடன் கூடிய பை கொண்ட கருவியாகும். காயங்களில் குறிப்பான இடத்தில் மருந்தினை இடவும் பயன்படுகிறது. தேவையைப் பொறுத்து பலவித வடிவங்களில் காணப்படுகிறது.

அறுவை மருத்துவம் என்று கூறுகையில் கீறுதல், அறுத்தல், வெட்டுதல், வெளியே இழுத்து எடுத்தல், பிளத்தல், குத்துதல், கொத்துதல், சுரண்டுதல், தைத்தல், துழாவுதல், கடைதல், சுடுதல் ஆகிய செயற்பாடுகள் காணப்படுகின்றன. அட்டைவிடல், காரம் வைத்துச் சுடுதல் ஆகியவையும் அறுவை மருத்துவம் சார்ந்த சிகிச்சைகளாகவே உள்ளன.

கத்தி முதலான சத்தகங்கள், ஆயுதங்கள் எப்பொழுதும் கூர்மையுள்ளதாகவும், கூரான பாகம் மெல்லியதாகவும், உடைவு, சிதைவு இல்லாமலும் சரியான அளவுகளிலும் இருத்தல் வேண்டும். கைப்பிடிகள் சரியாகவும் பலமாகவும் இருத்தல் வேண்டும். அவற்றினைக் கையாளும் போது கூரான பாகத்திற்கும் பொருத்துக்கும் இடையில் பெருவிரல், ஆட்காட்டி விரல், நடுவிரலால் பலமாக பிடித்து (மயிர் சிரைக்கும் போது கத்தியை பிடிப்பது போல) கீறல், அறுத்தல், பிளத்தல் செய்தல் வேண்டும். பிடுங்கி எடுக்கும், இழுத்து எடுக்கும் வேலைகளில் அடிப்பாகத்தில் பிடியில் பிடிக்க வேண்டும். இரத்தம் வாங்கும் பொழுது இருவிரல்களால் பிடித்து இலாவகமாக கையாள வேண்டும்.

கத்தி, சத்தகம், முதலியவை திறமை வாய்ந்த பரிச்சயமுள்ள (கொல்லரால்) கம்மியரால் செய்யப்படுதல் வேண்டும்.


பரராசசேகரம் 12000 என்ற நூலில் கூறப்படும் ஆயுதங்கள் ஒரு கைப்பிடி(6அங்குலம்), ஒரு சாண்(9அங்குலம்) நீளம் கொண்டவையாகும். அழுத்தமாகவும், கைக்குள் அடங்கத்தக்க கைப்பிடியுள்ளவையாகவும் செய்தல் வேண்டும். நல்ல உருக்கினால் செய்து நன்கு சாணை பிடிக்கப்பட்டு இருத்தல் வேண்டும். எந்தெந்த இடங்களில் எந்தெந்த கத்தி பயன்படுத்த வேண்டுமோ அதற்கு தகுந்தபடி ஒவ்வொரு ஆயுதத்திலும் 2,3 இருத்தல் வேண்டும்.



சாரா



அங்குசம்


கத்தரி



ஊசி





கூர்ச்சரம்



தரி




சிறு சததகம



ரி


அந்தர்முகம்


விரிகி


வஞ்சியிலை சத்தகம்



கோடரி


தூண்டில்


படிசம்


வீணை


காப்ப சாவணம்


பாம்பு சலாகை



சாவணம்


சிறுவாள்


சாவணம்




விருத்தி



துவமுகம்




சத்தகம்




பாம்பு சத்தகம்




உத்பலம்




குறடு



கரடிமுக குறடு



சிங்கவாய் குறடு



தாரை




சாவணம்



குறும்பி வாங்கி




அங்குலி




கைவாள்



முந்தரி



நண்டுவாய் குறடு



காக குறடு



பருந்துமுக குறடு




பீச்சுக் குழல்



கொம்பு



விண்ட கண்ணி



விண்ட கண்ணி



பீச்சுக் குழல்

பரராசசேகரம் 12000 என்ற நூலில் கூறப்படும் ஆயுதங்கள் ஒரு கைப்பிடி(6அங்குலம்), ஒரு சாண்(9அங்குலம்) நீளம் கொண்டவையாகும். அழுத்தமாகவும், கைக்குள் அடங்கத்தக்க கைப்பிடியுள்ளவையாகவும் செய்தல் வேண்டும். நல்ல உருக்கினால் செய்து நன்கு சாணை பிடிக்கப்பட்டு இருத்தல் வேண்டும். எந்தெந்த இடங்களில் எந்தெந்த கத்தி பயன்படுத்த வேண்டுமோ அதற்கு தகுந்தபடி ஒவ்வொரு ஆயுதத்திலும் 2,3 இருத்தல் வேண்டும்.

## அமுத நிலை

| தேய் பிறை-வலப்பக்கம் | | உறுப்பு | வளர்பிறை இடப்பக்கம் |
|---|---|---|---|
| 01 | முதல் திதி | உச்சி | முழுநிலா |
| 02 | இரண்டாம் திதி | நெற்றி | பதினான்காம் திதி |
| 03 | மூன்றாம் திதி | கண் | பதின்மூன்றாம் திதி |
| 04 | நான்காம் திதி | வாய் | பன்னிரண்டாம் திதி |
| 05 | ஐந்தாம் திதி | காது | பதினோராம் திதி |
| 06 | ஆறாம் திதி | கழுத்து | பத்தாம் திதி |
| 07 | ஏழாம் திதி | கைமூலம் | தொட்டாம் திதி |
| 08 | எட்டாம் திதி | முலை | எட்டாம் திதி |
| 09 | தொட்டாம் திதி | மார்பு | ஏழாம் திதி |
| 10 | பத்தாம் திதி | நாபி | ஆறாம் திதி |
| 11 | பதினோராம் திதி | குறி | ஐந்தாம் திதி |
| 12 | பன்னிரண்டாம் திதி | முழந்தாள் | நான்காம் திதி |
| 13 | பதின்மூன்றாம் திதி | கால்பரடு | மூன்றாம் திதி |
| 14 | பதினான்காம் திதி | புறந்தாள் | இரண்டாம் திதி |
| 15 | இருள் நாள் | கால்பெருவிரல் | முதலாம் திதி |

அமுதம் நிற்கும் தானத்திற்கு ஏழாம் தானத்தில் விடம் நிற்கும். அமுத நிலையிலும், விட நிலையிலும் கத்தி வைத்தல் கூடாது. தன்னுடைய இராசி அட்டம ராசியில் சந்திரன் நிற்கும் காலத்தில் அறுவை செய்யக் கூடாது. பிறந்த நாள் (நட்சத்திரம்) ஆகாது.

## அறுவை மருத்துவம் செய்ய ஏற்ற காலம்

செவ்வாய்க் கிழமை, சனிக் கிழமைகளில், செவ்வாய் கோசாரத்தில் பலமாக இருக்கும் காலம். (செவ்வாய் இராசி, அம்சத்தில் ஆட்சி, உச்சம் பெறும் காலம்) அக்கால இலக்கினத்திற்கு 8ல் எந்தக் கிரகம் இல்லாத நேரத்தில், மேடம், கடகம், கன்னி, இடபம் இலக்கினமாகவும் நாலாம் திதி, பதினான்காம் திதி, தொண்டாம்(9) திதிகளில், கேட்டை, திருவாதிரை, மூலம், ஆயிலியம் நாட்களில் அறுவை சிகிச்சை செய்தால் முழுமையான சுகம் பெறலாம். அறுவை சிகிச்சை வெற்றி பெறும்.

## மருத்துவமனையில் சேர, அறுவைச்சிகிச்சை செய்ய மருந்துண்ண ஏற்ற நாட்கள்

பிறந்த நாள் ஆகாது (நட்சத்திரம்). ஞாயிறு, திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி ஏற்ற கிழமைகளாகும். இருள் நாள், முழுநிலா நாள் தவிர்த்து ஏனைய திதிகள் ஏற்றதாகும். அந்த நேரத்தில் உதயத்தில் சுப கோள்களான வெள்ளி, புதன், குரு, முழுமதி இருத்தல் வேண்டும். உதயத்திற்கு 7,8,12 ல் எந்தக் கோளும் இருப்பதும் கூடாது.

பழுக்காத கட்டிகள், வீக்கம் குறைவாகவும், சூடு, வேதனை குறைவாகவும் இருக்கும். கட்டிகள் பழுக்கும் போது வேதனை எரிவு, காய்ச்சல், தொடமுடியாமை தோன்றும். குத்துவது பிளப்பது, எரிச்சல், கடுப்பு தோன்றும். கட்டிகள் பழுத்து விட்டால் கருமை குறையும், வீக்கம் தளரும், விரலினால் அழுத்தினால் மீண்டும் புடைக்கும், தினவு தோன்றும். அதிகமாக பழுத்த கட்டி வீக்கங்கள் துளை ஏற்பட்டு புரையோடும். தோல் சுருக்கம் விழும்.

பழுத்த கட்டிகளை கத்தி, சத்தகம் கொண்டு கீறிப் பிளக்க வேண்டும். பழுக்காத வீக்கத்தைப் பிளப்பதனால் நரம்புகள், எலும்புகள், தசைகள் சேதமடையும். முதியவர், பயந்தவர், சிறுவர், வலிமையற்றவர், கருத்தரித்தவள், கத்தியால் கீறுவதை தாங்கிக் கொள்ளும் சக்தியற்றவர்

என்பவருக்கு காரம் வைத்து கட்டிகளை திறக்க வேண்டும். பழுத்த வீக்கத்தைக் கீறா விட்டால் உள்ளே சீழ் அதிமாகித் தங்குவதால் நரம்புகள், எலும்புகள், தசை, இரத்தம் அவற்றைச் சேதப்படுத்தி விடும். அறுவை சிகிச்சையில் திறமையில்லாத மருத்துவன் பழுக்காத கட்டிகளை அறுத்தும், பழுத்த கட்டிகளை அறுக்காமலும் நோயாளிக்கு ஆபத்தை ஏற்படுத்துவான்.

அறுவை சிகிச்சை செய்வதற்கு முன் வன்மவிதிகளை கையாள வேண்டும். அப்போது நோயாளி அறுவை சிகிச்சையின் வேதனையை உணரமாட்டான்.

வேறு சில மருத்துவ முறைகளில் மது அருந்தக் கொடுக்கப்படுகிறது. இன்னும் சிலர் அறுவையின் போது பலசாலிகள் பலரைக் கொண்டு நோயாளிகளை அமுக்கி கட்டிலுடன் பலமாகக் கட்டிவிடுவார்கள். நோயாளியையும் சுத்தம் பண்ணி அறுவைக் கூடத்திற்கு அனுமதித்தல் வேண்டும். சிகிச்சையை ஆரம்பிக்க முன்னர் கருவிகள், கத்திகள், காரங்கள், பஞ்சு, துணி, நூல், கியாழம், பூச்சு மருந்து, சேர்வை காயத்தில் ஊற்று மருந்து, விசிறி இவை எல்லாம் அறுவைக் கூடத்தில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். தூசி, அழுக்கில்லாமல் கூடம் சுத்தப்படுத்தி மஞ்சள்நீர் தெளித்திருக்க வேண்டும். கிழக்கு நோக்கி இருக்க வைத்தோ படுக்க வைத்தோ, நான்கு உதவியாளர்களைக் கொண்டு கவனிக்க வேண்டும். கருவிகளை எடுத்துக் கொடுக்க இருவர் பரிசாரகர் இருத்தல் வேண்டும். மருத்துவர் நோயாளிக்கு எதிர்முகமாக இருந்து கொண்டு, பரிசாரகன் ஆயுதங்களைக் கொடுக்க மேலிருந்து கீழாக ஒரே முறையில் கீற வேண்டும். சீழ், பிற பொருள் இருக்குமிடத்தை சரியாகப் பார்த்து கீற வேண்டும். சதையின் மட்டத்திற்கு கீழ் கத்தி தாளக் கூடாது. மேலும் வன்மங்கள், நரம்புகள், முட்டுக்கள் எலும்புகள், இரத்தக்குழாய்கள் வெட்டுப்படாது தவிர்த்து கீறுதல் வேண்டும். கீறிய பின் வழவழப்பான சலாகையை விட்டு துழாவி சீழ் பரவியுள்ள இடங்களை சரியாக அறிந்து கொள்ள வேண்டும். முழு அழுக்கும் வெளியாகக் கூடியதாக கீறல் வேண்டும். சீழ் உள்ளே தங்காமல் இருக்க வேண்டும். அதற்காக சீழ் இடம் வரை வகுத்துக் கீறுதல் வேண்டும். வெளித்தாக்குதல்களினால் ஏற்படும் 600 வகையான காயங்களையும் அறுவை மருந்துவம் செய்து குணப்படுத்தினர்.

புருவம், நெற்றி, கண்அருகில், உதடு, கழுத்தின் பகுதி, அக்குள், தொடை இடுக்குகள், வயிறு இப்பகுதி பக்கவாட்டில் கீறலாம். அறுவை செய்த பின் நோயாளிகளின் புண்ணை சுற்றி விரல்களால் மெதுவாக அழுத்தி, கியாழத்தினால் கழுவி. சுத்தமான பஞ்சினால் புண்ணை நன்றாக துடைக்க வேண்டும், மருந்து சேர்வையை சீலையில் ஊட்டி உள்ளே வைத்து எண்ணெய் நனைத்த பஞ்சினை மேலே வைத்து கட்ட வேண்டும். கட்டு இறுக்கமில்லாமலும், இளக்கமில்லாமலும் இருத்தல் வேண்டும். சுற்றும் போது துணி சுருக்கமில்லாமல் சுற்றுதல் வேண்டும். புண்ணை ஆற்றக்கூடிய வலி வேதனையை நீக்கக் கூடிய எண்ணெயில் பஞ்சினை நனைக்க வேண்டும்.

ஒதியம் பட்டை எண்ணெய், புங்கம் பட்டை எண்ணெய் பயன்படுத்தப்பட்டன. அறையில் வேப்பெண்ணெய் விளக்கு ஏற்றி வைப்பது வழக்கம். பகல் நேரத்தில் அகில், குங்கிலியம், வசம்பு, வெண்கடுகு, வேப்பிலை பொடித்துப் புகைப் போடுவர்.

புண்ணுக்கு ஏற்றபடி ஆகாரம் கொடுத்தல் வேண்டும். பழைய நெல்லரிசி, காரரிசி, கருங்குருவை அரிசி, பயறு, துவரை, பத்தியக் கறியாக வரட்டலாக வைத்துக் கொடுப்பர். சிறுகீரை, கத்தரி சேர்ப்பர். வெந்நீர் பருக கொடுத்தல் வேண்டும். புதிய தானியங்கள், அரிசி சேர்த்தல் ஆகாது. உழுந்து, கடலை, மொச்சை, கொள்ளு, சுணையுள்ளவை, குளிர் நீர், கள், பால், புளிப்பு, எண்ணெய், மாவுப் பொருட்களை உண்ணக் கூடாது.

புண்ணைச் சொறிதல், குத்துதல், உராய்தல் கூடாது. அளைதல் கூடாது. மனதிற்கு மகிழ்ச்சியை தென்பைக் கொடுக்கும் உரையாடல் நன்று. மூன்றாம் நாள் புண்ணைச் சுத்தப்படுத்தி மீண்டும் புண் ஆறும் வரை கட்டவும். புண்ணில் சிறு திட்டுக்களாக வளர்ச்சி ஏற்பட்டு நிரவும்.

கண் பூ, கண் முளை, கண் காசம், கண் சதை வளர்ச்சி, கண்கட்டி போன்ற கண் நோய்களில் துவிமுகம், சத்தகம், சலாகை, விரிகி முதலான கருவிகளினால் அறுவை முதலான சிகிச்சைகளைச் செய்தனர். கபாலத்தைத் திறந்து அறுவை செய்த வரலாறும் காணப்படுகிறது.

எலும்பு உடைதல், உடைந்த எலும்பு தசையைப் பிய்த்துக் கொண்டு வெளிவருதல், எலும்புகள் பொருத்துக்களிலிருந்து விலகி இடம் மாறுதல் ஏற்படும் காலங்களிலும் அறுவைச் சிகிச்சை செய்து

குணமாக்கினார். எலும்புகளைச் சரியாக பொருத்தினார். பிள்ளைப் பேற்றில் குறுக்கே இருக்கும் குழந்தைகளையும், குழந்தை கீழ் இறங்காத நிலையிலும் சிறு அறுவைகளைச் செய்தும், ஊசியினால் குத்தியும், கருவிகளைப் பாவித்தும் குழந்தையை வெளியே எடுத்துள்ளனர். குழந்தை பெறுவதற்கு முடியாத நிலையிலும் உள்மருந்து கொடுத்தும் ஆயதங்களைப் பயன்படுத்தியும் பெறுவித்தனர். வயிற்றினுள் மரித்துப் போன குழந்தையையும் அறுவை சிகிச்சைகள் மூலம் பெறுவித்தனர். தாய்மரித்து குழந்தை உயிருடன் இருக்கும் போது வயிற்றைக் கீறி குழந்தையை எடுத்துள்ளனர் என அறியமுடிகிறது,

**தையல் போடுதல்.**

பெரும்பாலும், காயங்களிலும், பிற பொருட்களை அகற்றுவதற்காக கீறும் போதும், பிள்ளைப் பேற்றின் போதும், கழலைக் கட்டிகளை அகற்றும் போது அறுவைச் சிகிச்சையின் பின் தையல் போடுவார்கள். போரில் ஏற்படும் காயங்கள், தவறுதலாக ஏற்படும் காயங்கள், விபத்துகளினாலும், விழுவதனாலும் ஏற்படும் காயங்கள் எனவும் ஆயுத முதலிய பொறிகளின் தாக்குதல்களினாலும் 800 விதமான காயங்கள் ஏற்படுவதாக மருத்துவ நூல்கள் தெரிவிக்கின்றன. காயங்கள் எவ்வாறு ஏற்பட்டன? எவற்றினால் ஏற்பட்டன? என்பதை கண்டறிவதற்கு தேவையான விபரங்கள் அகாலமரண நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தைப்பதற்கு முன் நன்கு சுத்தம் செய்தல் வேண்டும். தூசி,தும்பு,மண்,காய்ந்து போன இரத்தம், மயிர் இவற்றினை நீக்க வேண்டும். எலும்புகளையும், கிழிபட்ட தசைகளையும், சந்துகளையும் சரியாகப் பொருத்தி, அறுபட்ட நரம்புகளையும் இணைத்து வைத்து தையல் போட வேண்டும். பழுதடைந்த சதையை நீக்க வேண்டும். காயங்களில் பெருமளவு தசைகள் சேதமடைந்திருந்தால் உடும்பு இறைச்சியை அல்லது உடும்புத் தூளை அடைத்து வைத்து தையல் போடுவர். விறாண்டப்பட்டும், கொந்தப்பட்டு தசையின் மேற்பகுதி அதிகம் சேதமடைந்து அல்லது இழுக்கப்பட்டு இருந்தால் வெள்ளாட்டுப் பிழுக்கையை வறுத்துப் பொடி பண்ணி வைத்துக் கட்டிவந்தனர். தையல் போடுவதற்கு நூல்கள்,மயிர் பயன்படுத்தப்பட்டு வந்தன. தைப்பதற்குரிய ஊசிகளைக் கொண்டு தையல் போடுவார்கள்.

தையல் பல வடிவங்களில் போடப்படும். தோலைத் தைப்பது ஒருவடிவம், குறுகலான இடங்களில் ஒரு வடிவம், வசதியாக தைக்கக் கூடிய

தசைப்பிடிப்பான இடங்களில் வேறு வடிவம் என்பன சிலவாகும். தைக்கப்பட்ட இடங்கள் வரட்சியாக இருந்தால் ஒடுவெண்ணெயை பஞ்சில் நனைத்து மேல் வைத்துக் கட்டுவர். நீரத்தன்மையாக காணப்பட்டால் உப்பு கரைத்த கொதி நீரில் பஞ்சை நனைத்துப்பிழிந்து வைத்துக் கட்டுவது வழக்கமாகும்.

காரத்தினால் ஏற்பட்ட இரணம், நெருப்பு, நஞ்சு, பிற பொருட்கள், அழுக்கு உள்ளே தங்கியுள்ள இரணங்களும் தையல் போடக் கூடாது. தசை குறைந்த இடங்களிலும் தைப்பதை தவிர்ப்பது நல்லது. நன்கு கீறப்பட்டு சுத்தம் பண்ணப்பட்ட இரணத்தினை தைக்கலாம்.

**கட்டுதல்**

வெளிமருந்துகள் முப்பத்திரண்டில் முதலாவதாக கூறப்பட்டுள்ளது கட்டுதல். உறுப்புக்களின் அமைப்புளுக்கு ஏற்ப கட்டுகளின் வடிவம் மாறும். இடங்களுக்கு தக்கவாறு கட்டுக்களை அமைத்துக் கொள்ளலாம். இரணங்களுக்கு நோவு ஏற்படாதவாறு முடிச்சுக்கள் மறுபக்கத்தில் இருத்தல் வேண்டும். கட்டுக்கள் இறுக்கமாகவோ, இளகலாகவோ, சமமாகவோ இருக்கும். மூன்று வகையாகும். பின் பக்கம், அக்குகள், தொடை இடுக்கு, தொடை இவ்விடங்களில் இறுக்கமாக கட்டுப் போட வேண்டும். கை, கால், முகம், கழுத்து, காது, ஆண்குறி, கோசம், வயிறு, மார்பு இவ்விடங்களில் நடுநிலையாகக் கட்ட வேண்டும். கண்களில் தளர்ச்சியாகக் கட்ட வேண்டும்.

இரணங்களிலும், விரணங்களிலும் கட்டுப் போடாது விட்டால் அழுக்குச் சேரும். கொசுக்கள், பூச்சிகள், ஈக்கள் மொய்க்கும். தூசி, நீர், காற்றினால் அழுகல் தன்மை ஏற்படலாம். எலும்புகள் உடைந்தாலும், நழுவியும், தசை பிளந்தும், தசை நார்கள் நரம்பு அறுந்தும் உள்ள விரணங்கள் கட்டுக்கள் போடுவதால் விரைவில் ஆறிவிடும். நாம் நடக்கும் போது, இருக்கும் போதும், உறங்கும் போதும் தாங்காமல், தாக்கம் ஏற்படாமல் கட்டு பாதுகாக்கிறது. ஆறாத இரணங்களில் பூவரசு இலையும், ஒடுவடக்கிஇலையும், வரம்பு மாதிரி வளர்ந்த புண்களில் சதை கரைச்சான் இலையையும் வைத்துக் கட்டுவர்.

**கட்டுக்கள் பலவிதம்**

01. முடிக்கட்டுதல்
02. புள்ளடிக்கட்டு
03. தூக்கிகட்டுதல்
04. முடிச்சுக்கள்
05. பிரித்துக்கட்டுதல்
06. நேர்கட்டு
07. தலைக்கட்டு
08. கோணகட்டு
09. சுற்றிக்கட்டுதல்
10. தாடைக்கட்டு
11. மட்டைகட்டுதல்
12. சேர்த்துக்கட்டுதல்

இந்த வகையான கட்டுக்களை இன்றும் தமிழ் மருத்துவர்கள் இரணங்களில், முறிவு நோவு சிகிச்சையில் கட்டி வருகிறார்கள். புக்கை கட்டும் போதும், நோவுக்கு பற்றுப்போடும் போதும், எலும்பு முறிவுக்கு கொம்பு (மரச்சட்டம், மட்டை) வைத்துக் கட்டும் போதும், இடத்துக்கு ஏற்ற விதமாகவும் கட்டுக்களை கட்டி வருகிறார்கள்.

அறுவை மருத்துவம் செய்யும் போது ஏற்பு நோய் ஏற்படாது எல்லா விதிகளும் பேணப்படும். ஏற்பு ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்குமானால் ஏற்பு மருந்தான உருத்திரம் ஐந்து அல்லது மூன்று நாட்கள் கொடுப்பது வழக்கம்.

**நோய் குணமாகி வீட்டுக்கு வர ஏற்ற காலம்.**

ரேவதி, புனர்பூசம், உத்திரம், உத்தராடம், உத்திரட்டாதி, ரோகிணி, ஆயிலியம் இந்த நாட்களில் நாலாம் திதி, தொண்டாந்திதி(9), பதினான்காம் திதிகளில் சர உதயங்களில் (மேடம், கடகம், துலாம், மகரம்) வெள்ளிக் கிழமைகளில் சந்திரன் 4, 8, 12 லிருந்து பாவிகள் கேந்திர, திரிகோணங்களில் 11ல் இருக்கும் காலம் மருத்துவமனையிலிருந்து குணமாகி வீட்டுக்கு வர ஏற்ற காலம் என்று சோதிட நூல்கள் தெரிவிக்கின்றன.

## அறுவை மருத்துவன்

அறுவைச் சிகிச்சையினை முறையாகக் கற்று பின் 5 வருடம் நன்கு பயிற்சி பெற்றுக் கைதேர்ந்தவனாகவும், அறுவை சிகிச்சை செய்வதில் திறமை யுள்ளவனாகவும், விரைவாக அறுவை செய்யும் கைவன்மை உள்ளவனாகவும் இருத்தல் வேண்டும். கை நடுக்கம், பதட்டம், அதிவியர்வை இருத்தல் கூடாது. நல்ல அறிவு, புத்தி, விவேகம் உள்ளவனாகவும், கிலேசமற்று மனம் தெளிந்தவனாகவும் இருத்தல் வேண்டும். அறுவைக் கருவிகளில் நன்கு பழக்கமுள்ளவனாகவும் கையாள்வதில் திறமையுள்ளவனாகவும், சத்தகம் முதலியவற்றின் பாவனைக்கு ஏற்ற தன்மையை சோதித்து அறியக் கூடியவனாகவும் இருத்தல் வேண்டும். அறுவைக் கூடம் நன்கு சுத்தமாக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். நாள் நிலை, கோள் நிலை தெரிந்து சோதிட அறிவு உள்ளவனாக இருத்தல் வேண்டும். விவேகமும் புத்திசாதுரியமும் உள்ள பரிசாரகர்களை உதவிக்கு வைத்துக் கொள்ள வேண்டும். இவர்கள் அறுவை சிகிச்சை செய்யும் போது தலையை மூடித் துண்டு கட்டியும், உடலை மூடி உடையணிந்தும் இருத்தல் வேண்டும்.

அவை தோய்த்து உலர்ந்து சுத்தமமானதாக இருத்தல் அவசியமாகும். அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்வதற்கு வசதியாக, வன்மவிதியை அறிந்து அதனைக் கையாளும் திறமை, தேர்ச்சி உள்ளவனாகவும் இருத்தல் வேண்டும்.

சிரமமான அறுவைச் சிகிச்சை செய்யும் போது, அறுவைச் சிகிச்சை செய்யக் கூடிய இன்னுமொரு மருத்துவர் அருகில் இருப்பது நன்று. வன்ம விதியை செய்த பின்னரே அறுவையை ஆரம்பித்தல் வழக்கமாகும். பெரிய அறுவைச் சிகிச்சைகளில் வர்மானி ஒருவரை தனியாக அமர்த்தி வன்மவிதிகளை செய்வர். வன்மங்களை, வன்ம விதிகளை கையாளுவதில் தேர்ச்சி பெற்ற மருத்துவர், வர்மானி எனப்பட்டார். அசுர மருத்துவம் செய்பவர் ஆசுரி (Surgeon) என அழைக்கப்பட்டார்.

பல சிகிச்சைகளில் மாற்று மருந்துகளை அவசியம் மருத்துவன் அறிந்திருத்தல் வேண்டும். காரமான, தீவிரமான மருந்துகளை பயன்படுத்திய பின் மாற்று மருந்துகளை இட வேண்டும். இடாது போனால் நோயாளிக்கு பாதிப்பு ஏற்படுவதை தவிர்க்க முடியாது. முறைப்படி தமிழ் மருத்துவம் பயிலாது அயலூரில் மருத்துவம் பார்த்து வந்த குடும்பத்தின் மருத்துவருக்கு இளவயதில் சன்னிகண்ட போது காரமான கலிக்கம் முதலியவற்றைப் பயன்படுத்தினர். மாற்று மருந்து இடத்தெரியவில்லை. சன்னி குணமாகியது ஆனால் இரண்டு கண் பார்வையும் போய்விட்டது.

தமிழ் முறைப்படி தமிழ் மருத்துவம் கல்லாதவர் மருத்துவம் செய்தால் தீமையே ஏற்படும். எப்போதும் மருத்துவன் உயிர் காப்பவனாக இருத்தல் வேண்டும். அறுவை மருத்துவத்தில் செப்புப் பெற்று சிறந்த அறுவை மருத்துவருடன் சேர்ந்து அறுவையை நன்கு பழகி பரிச்சயம் பெற்ற மருத்துவரே அறுவைச் சிகிச்சையை செய்தல் வேண்டும்.

சிங்கை நாட்டில் மருத்துவகல்வி, அறுவை பயிற்சி முறையாகக் கற்றுக்கொள்ளாதவர்கள், மருத்துவம் செய்வதற்கோ அல்லது அறுவைச் சிகிச்சை செய்யவோ அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. தகைமையுள்ளவர்களிடம் சரியான முறையில் முறையாகக் கற்று, செப்புப் பெற்றிருத்தல் வேண்டும். செப்பு பெற்ற ஒருவராலே தான் இன்னொருவருக்குச் செப்பு வழங்க முடியும். செம்பினால் அல்லது வெள்ளியினால் செய்த பெட்டியே செப்பு ஆகும். முறையாக மருத்துவம் கற்றவர்களுக்கு, கற்பித்தவர் அவசியமான மருந்துகளை செப்பில் வைத்து வழங்குவார். அந்த செப்பில் கற்பித்தவர் பெயர், கற்றவர் பெயர், செப்பு வழங்கிய தமிழ்த் திகதி பொறிக்கப்பட்டிருக்கும்.

மருத்துவர் இச்செப்பினை தாம் செல்லும் போது எடுத்துச் செல்வர். அது போல அறுவை மருத்துவம் கற்றவர்களுக்கு வெள்ளிச் செப்பில் அவசியமான ஆயுதங்களை வைத்து, கற்பித்தவர் பெயர், கற்றவர் பெயர், வழங்கிய தமிழத் திகதி பொறிக்கப்பட்டிருக்கும். சிங்கை நாட்டில் மருத்துவத்தில் சிறப்புபெற்ற அரசர்களும், அரண்மனை மருத்துவர்களும், மருத்தர் குழுவினரும், அவர்களிடம் செப்பு பெற்றவர்களும் செப்பு வழங்கி வந்தனர். இவ்வாறு தனித்தனியாக செப்புக்கள் வழங்கப்பட்டு வந்தன. அந்தச் செப்பு பட்டயங்கள் அரசர்களாலும், குடிமக்களாலும், தகைமை பெற்றதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் இருந்து வந்தது. இரு செப்புகளிலும் வெவ்வேறு விதமான பல அறைகள் தேவைக்கேற்ப வசதியாக அமைக்கப்பட்டிருந்தது.

செப்பு பெறாதவர் மருத்துவம் செய்வது சிங்கை நாட்டில் தண்டனைக்குரிய குற்றமாக கருதப்பட்டுள்ளது. கி.பி இருபதாம் நூற்றாண்டிலும் கோமகன் தம்பிப்பிள்ளையிடம் பெத்தார், இராசா, (பொன்னாலை) வைத்தியாசன் வைரமுத்து ("யாழ்ப்பாணம், இலங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி' முதுநிலை விரிவுரையாளர்) ஆகியோர் செப்புப் பெற்று மருத்துவத்தில் சிறந்து விளங்கியவர்களாவர். இதிலிருந்து

சிங்கை அரசர்களின் ஆட்சியில் சிங்கை நாட்டில் மருத்துவம் அடைந்திருந்த வளர்ச்சியையும், பெற்றிருந்த சிறப்பையும், வகித்த இடத்தையும் இலகுவாக எவரும் புரிந்து கொள்ளலாம். மருத்துவக் குழு என்பது (Medical Council ) ஆகும். அரண்மனை மருத்துவர்கள் (Royal Physicians) ஆவர். செப்பு பட்டயம் மருத்துவருக்கு (Nations Recognition and Licence) அரசினதும் நாட்டினதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமம் ஆகம்.

அறுவை மருத்துவன் பற்றி சிவஞான சித்தியார் பாடல்:-

**"மண்ணுளே சிலவியாதி மருத்துவனருத்தி யோடுஞ்**
**திண்ணமா யறுத்துக் கீறித் தீர்த்திடுஞ் சில நோயெல்லாங்**
**கண்ணிய கட்டி பாலுங் கலந்துடன் கொடுத்துத் தீர்ப்பன்**
**அண்ணலு மின்பதுன்ப மருத்தியே வினை யறுப்பான்."**

**ஆதுரசாலை**

சிங்கை அரசர்கள், கோயிற் பற்றுக்கள் தோறும் ஆதுரசாலை (மருத்துவமனை) களை அமைத்திருந்தனர். அவற்றுக்கு வருடந்தோறும் மானியம் வழங்கி வந்தனர். ஒவ்வொரு ஆதுரசாலையிலும் பொதுமருத்துவர் ஒருவர், அறுவை மருத்துவர் ஒருவர், மூலிகை கொணர்வார் இருவர், உழையர்(பரிசாரகர்) இருவர் இருந்தனர்.

# 6. சுட்டிகை விதி

உலோகங்களினால் ஆன பல வடிவங்களை கொண்ட கோல்களை தீயில் காய்ச்சி நோயாளியின் உடலில் சூடு போடுதல் சுட்டிகை என்ற மருத்துவ முறையாகும். சூடு போடுமிடம் சுத்தம் செய்யப்பட்டு உதவியாளர்கள் நோயாளியை ஆடாமல், அசையாமல் பிடித்துக் கொண்டிருக்கச் செய்து விரைவில் குறிப்பிட்ட இடத்தில் ஒரேமுறையில் காய்ச்சிய கோலால் சூடு போட வேண்டும். நோயாளியை விசிறியும், இனிய வார்த்தைகளைக் கூறியும், களைப்பாற்றுதல் வேண்டும். பெரும்பாலும் வலி, இசிவு, வலிப்பு போன்ற நரம்பு சம்பந்தமான நோய்களில் சூடு போடப்படுகிறது. சூடு போடும் கருவிகளின் பெயர்களும் வடிவங்களும் : -

| | |
|---|---|
| **01. உடுக்கு** | **- உடுக்கு இசைக்கருவியின் வடிவம்** |
| **02. முக்கவர்** | **- பறவைக்கால் போன்று மூன்றுகவர்களை உடையது.** |
| **03. இருகவர்** | **- இரு கவர்களையுடையது** |
| **04. பிறை** | **- சந்திரப் பிறையின் மூன்றாம் நாள் வடிவை ஒத்தது.** |
| **05. கலப்பைக்கால்** | **- படவாள் வடிவுடையது** |
| **06. சங்கிலிக்கால்** | **- சங்கிலிக் கொழுவல் அமைப்பு** |
| **07. புள்ளடி** | **- தர அடையாளம் கொண்டது.** |
| **08. ஆழி** | **- மோதிர வட்ட வடிவம்** |
| **09. பொட்டு** | **- நெற்றியில் இடும் பொட்டுப் போன்று வட்டவடிவமானது.** |

இவற்றிற்கு மேலாக சலாகைகளையும், பொன்னூசிகளையும் பயன்படுத்தினர். இரும்பு,வெள்ளி,பொன் உலோகங்களினால் இதற்காக ஒழுங்காக வடிவமைக்கப்பட்ட சுடுகருவிகளை பயன்படுத்தி வந்தார்கள். மருந்துகள், அறுவையினால் தீர்க்க முடியாத பிணிகளையும் தீயினால் சுடும் சிகிச்சையினால் போக்கி விடலாம்.

சுட்டிகையினால் நீங்கிய நோய் மறுபடியும் திரும்பி வருவதில்லை. அதனால் வேதனை தருவதானாலும் நன்மையே. தோலில் காணப்படும் முளைகள், கருநிற பருக்கள், மறு, வலி, உணர்ச்சியற்ற சூம்பிய உறுப்புக்கள், ஒற்றைத் தலைவலி, கண்வலி நோய்களில், தலை, புருவம், பொட்டு, இடங்களில் பிறை சுடப்படும். நரம்பு வலிப்பு, மூலமூளை, பவுந்தரம், கண்டமாலை, யானைக்கால், நீர்வடியும் புண்களில் பொட்டு

ஆழி சுட்டிகையால் சுடப்படும். துளையற்ற ஊசிகளை நெருப்புச் சுடரில் வாட்டி வலிப்பு ரோகத்தில் காதின் சோணையில் சூடு போடுவர்.

நோயாளியை கிழக்கு முகமாக இருக்கச் செய்து அல்லது படுக்கச் செய்து சூடு போடவும். வேம்பு, பூவரசு, இலந்தை காய்ந்த குச்சிகளினால் தீயுண்டாக்கி அல்லது வேப்பநெய் பந்தத்தில் காய்ச்சியும் சூடு போடலாம். சூடு போட்டபின் தேன் அல்லது நெய்யை நன்றாக இட வேண்டும். பின் குளிச்சியான எண்ணெய்களை பூச வேண்டும்.

போரில் கைகால்களை சிதைவடைந்து போனால் அந்த அளவில் சிதைவடைந்த பாகத்தை துண்டித்து விட்டு நல்லெண்ணெயை சூடு காட்டி வெட்டப்பட்ட முனையைச் சுடுவார்கள். விபத்துக்களினால் கீழே விழுந்து வாகனங்கள் ஏறுவதாலும் சிதைவு உண்டாகிறது. இச்சிகிச்சையை வெட்டிப் பொரித்தல் என்று அழைத்தார்கள். சுட்ட இடங்களில் காவியை நெய்யிற்குழைத்துப் பூசினர். குளிர்ந்த எண்ணெய்களைப் பயன்படுத்தினர். தீ, கத்திகளினால் சிகிச்சை அளிக்கும் போது மிகுந்த கவனத்துடன் இருத்தல் வேண்டும். வன்மத்தானங்களில் சூடு போடக் கூடாது.

**சுட்டிகைகளின் வடிவங்களும் பெயர்களும்**

**01. உடுக்கு** - 

**02. முக்கவர்** - 

**03. இருகவர்** - 

**04. பிறை** - 

**05. ஏர்க்கால்** - 

**06. சங்கிலிக்கால்** - 

**07. புள்ளடி** - 

**08. ஆழி** - 

**09. பொட்டு** - 

**காரம் வைத்தல்**

காரம் கடுமையானது, காரமானது, சூட்டினை ஏற்படுத்தக் கூடியது, அரித்து, துளைத்து, கரைத்து உட்செல்லக் கூடியது. பெரும்பாலும் காரசாரங்கள், பாசாணங்கள் பயன்படுத்தப்பட்டன. உள்ளே சுத்தப்படுத்தி புரையோடிய, சவ்வுள்ள விரணங்களையும் விரைவில் குணமாக்கக்கூடியவை. கத்தியைப் பயன்படுத்த சிரமமான இடங்களிலும், கத்தி வைத்தும் ஆறாத விரணங்களையும் காரம் வைத்தல் நீக்கும். காரம் வைத்தல், காரத்தினால் சுடுதல் சிகிச்சை முறை என்றும் அழைக்கப்படும்.

மூலமுளை, பவுந்தரம், புரையோடியரணம், தோலில் காணப்படும் கருமுளைகள், மூக்கில் காணப்படும் முளை, மூலபீனசம், கண்கட்டி, முகத்தில் தோன்றும் பருக்கள் காரம் வைத்துச் சிகிச்சை செய்யப்படுகிறது. பயந்தவர்கள், மெலிந்தவர்கள், இதயநோய், நீரிழிவு, காய்ச்சல், பேதி உள்ளவர்கள், மாதாவிடாயிலும், கர்ப்பிணிக்கும் காரம் வைத்தல் தகாது. வன்மத்தானங்கள், நரம்புகள், குருத்தெலும்புகள். இரத்தக்குழாய்கள், தொப்பூழ், விதை, ஆண்குறி இவற்றில் காரம் வைத்தல் கூடாது. காரத்தை வைத்துக்கட்டி எரிவு தோன்றியவுடன் அவிழ்த்து விடவும். தேன் அல்லது நெய் தடவலாம். வேப்பம் பட்டைக் கியாழத்தினால் புண்ணைக் கழுவ வேண்டும். சந்தனம் சிறுநாகம்பூ, மஞ்சிட்டியை நெய்விட்டரைத்துப் புண்ணில் பூசுக.

மூலமுளைக்கு எருக்கலம் பால், சதுரக்கள்ளிப்பால் இவற்றில் மஞ்சள்தூளைக் கரைத்து காரம் செய்யப்படுகிறது. அதை எருக்கலை நாரில் 7 முறை நனைத்து காய வைத்து கட்டப்படுகிறது. அல்லது அவ்விடத்தில் விண்ட கண்ணியை பயன்படுத்தி காரம் வைக்கப்படுகிறது. நன்றாக எரிவு ஏற்பட்டதும் துடைத்து விட்டு தயிரும் சோறும் பிசைந்து மூன்று நாட்கள் கடட் வேண்டும்.

லவிதமான காரங்கள் சொல்லப்பட்டுள்ளன.
அவற்றில் ஒன்று,

01.காரம் - வெள்ளைபாடாணம்
சீனக்காரம்
துரிசு
வகைசமன்

வெண்ணெயில் அரைத்து சீலையில் தடவி கட்டிகளின் மேற்போட உடைக்கும், கரையும். 3 நாள் போடலாம். மாற்று தயிரும் சோறும் பிசைந்து 3 நாள் கட்டி பின் எண்ணெய் போடவும்.

02. காரம் - எருக்கலம்பால்
மஞ்சள் மா
துரிசு

சேர்த்து அரைத்து நூலில் நனைத்து காயவைத்து பயன்படுத்துக.

# 7. சிரை விதி (குருதி வாங்கல்)

இரத்தம் கெட்டுவிடுவதால் நோய்கள் ஏற்படுகின்றன. நோய் உள்ள இடத்திலிருந்து கெட்ட இரத்தம் உடலின் மற்ற பகுதிகளுக்கு செல்கின்றது. இரத்தத்தைக் கீறி வெளிப்படுத்துவதால் அழுக்குகள் வெளியேறுவதால் நோய்கள் குணமாகின்றன. சுத்தமான இரத்தம் உடலுக்கு பலம், நிறம், தேக ஒளி, சுகவாழ்வு, நீண்ட வாழ்நாள் கொடுக்கிறது. கெட்டுப் போன இரத்தம் கண்வலி, தலைவலி, காசம், கண்கலங்கி நீர்வடிதல், தலைக்குத்து என்ற கடுமையான நோவு, எரிவு, காது நோய், மண்டைச்சளி, தோல் நோய், வாயில் நீருறல், அக்கி, சிறுகட்டிகள், கழலை, யானைக்கால், ஆண்குறிநோய், வீக்கம், புளியேப்பம், வியர்வை, மயக்கம், உணர்விழத்தல், சோம்பல் ஏற்படுத்தும். கெட்டுப் போன இரத்தத்தை வெளிப்படுத்த காரிரத்தக் குழாயைக் கீற வேண்டும்.

வன்மங்களில் கீறக் கூடாது. கருப்பவதி, பிள்ளை பெற்றவள், காமாலை நோயாளி, சிறுவர், முதியோர், பாண்டுரோகி, உடல் வீக்கம், வாந்திபேதி உள்ளவர் சிரை கீறக் கூடாது. இரத்தக் குழாய் மேலே கட்டுப் போட்டு, நேராக கீற வேண்டும். குறுக்கே கீறக்கூடாது.நெற்றி,

கண்களின் ஓரம், காதினைச் சுற்றி, கழுத்து, தொடை, கட்டிகளுக்கு அருகில், முழங்கால்களுக்கு மேல், கணுக்காலுக்கு மேல் கீறலாம்.

வன்மத் தானங்களில் கீறல் கூடாது. கீறுவதற்கு முன் கத்திகள், விரிகி முதலிய ஆயுதங்கள், கட்டுவதற்கான துணி, இரத்தம் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் முதலியவற்றைத் தயாராக வைத்துக் கொள்ள வேண்டும். காவி, மாயாக்காய், ஆல், மருது, அத்தி, கருவேல் பட்டைத்தூள்கள் இரத்தத்தைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும். நோயாளிக்கு இரத்தப் பெருக்கு ஏற்படுவதா? என்பதையும் தெரிந்து கொளள் வேண்டும். இரத்தப் போக்கு அதிகமானால் ஆபத்து ஏற்படலாம். நல்ல ஆகாரம் கொடுத்து தைரியமாகிய பின் காலையில் செய்வது நல்லது. இரத்தக் குழாயை கட்டி சுண்டிப் பார்க்க நரம்பு வெளிப்படையாக தெரியும். குழாயில் இரத்தம் புடைத்து தோன்றிய பின் நெல் போன்ற சிறிய கூரான விரிகையினால் கீற வேண்டும். கீற வேண்டிய இடத்தில் நாலு அங்குலம் மேல் கட்ட வேண்டும். இடத்துக்கு ஏற்றவாறு சிந்தித்து செயற்பட வேண்டும். ஒரு அரிசியளவு அல்லது பாதிஅரிசி அளவு கீற வேண்டும். ஒரே முறையில் கீற வேண்டும். இரத்தம் வெளிப்படுத்தும் போது நோயாளிக்கு மயக்கம் ஏற்பட்டால் சிகிச்சையை

உடனே நிறுத்தி விட வேண்டும். குளிர் நீரை, விசிறியை பயன்படுத்தி மயக்கத்தைப் போக்க வேண்டும். இரத்தம் எடுக்கப்பட்ட இடத்தை கட்டை விரலால் அழுத்திக்கொண்டு கருவியை வெளியேற்றி ஆறுதல் கூறவேண்டும். எண்ணெய் தோய்த்த பஞ்சினை வைத்துக் கட்டி ஆறுதலாகப் படுக்க வைக்க வேண்டும். சாதாரண, இலேசான பசியை தூண்டக்கூடிய உடலுக்கு ஏற்ற உணவை உட்கொள்ளச் செய்ய வேண்டும்.

# 8. அட்டை விதி

பயந்தவர்கள், பலவீனமானவர்கள், மென்மையான உடலமைப்பைக் கொண்டவர்களுக்கும், சிறுவர், கிழவர், சொகுசு வாழ்க்கை வாழ்பவர்களுக்கும் அசுத்த இரத்தத்தை உறிஞ்ச அட்டைகள் பயன்படுத்தப்படுகின்றன. நல்லதும், சுத்தமான இடத்தில் வளர்வதும், நச்சுத்தன்மையில்லாததுமான அட்டைகளை பயன்படுத்த வேண்டும். சிறிய, பெரிய அட்டைகள் நல்லதல்ல. ஆறு அங்குல நீளமான அட்டைகள் உகந்தவை. கடினமான நோய்களில் ஆண் அட்டைகளையும், சிறிய நோய்களில் பெண் அட்டைகளையும் பயன்படுத்த வேண்டும்.

கடித்த இடத்தில் வலி, குத்து, அரிப்பு, உண்டானால் இரத்தத்தைக் குடித் விட்டதாக அறிந்து அட்டையை எடுத்து விட வேண்டும். எடுக்க முடியாவிட்டால் உப்பைத் தூவ விட்டு விடும். அவ்விடத்தை நீரினால் கழுவி எண்ணெய் பூசி கட்ட வேண்டும். வீக்கம், செந்நிறம், எரிச்சல் இல்லையானால் அட்டை நன்கு இரத்தத்தை உறிஞ்சிவிட்டது. உறைந்து போன கெட்டஇரத்தத்தை உறிஞ்சுவதற்கு அட்டைகளே சிறந்தவை. உணர்ச்சியற்ற இடத்திலுள்ள கெட்டுப் போன இரத்தத்தை நீக்க கொம்பு விட்டு உறிஞ்சி எடுத்தல் வேண்டும்.

ஒரே இடத்தில் தங்கியுள்ள கெட்ட இரத்த்ததை கீறி வெளிப்படுத்த வேண்டும். ஒரு முறை கடிக்க விட்ட அட்டையை ஒரு வாரத்தின் பின்னரே மறுமுறை பயன்படுத்த வேண்டும். கடித்த பின் அட்டையை வாலில் பிடித்து தூக்கி தலைகீழாக குலுக்கி தொங்க விட்டு வயிற்றில் அழுத்தி மெதுவாக குடித்த இரத்தத்தை கக்கச் செய்ய வேண்டும். மோரில் போட்டு இடையில் அட்டைகளை சுத்தப்படுத்த வேண்டும். கடிக்க ஆரம்பிக்கா விட்டால் அவ்விடத்தில் பால் ஒரு சொட்டு விடவும் அப்பொழுதும் கடிக்கா விட்டால் சிறிது இரத்தம் வரும்படி ஊசியால் குத்தவும். அட்டை வாலை உயர்த்திக் கொண்டு கழுத்தைக் தூக்கிக் கொண்டிருந்தால் இரத்தம் உறிஞ்ச ஆரம்பித்து விட்டது, நூல்களில் படித்தாலும் கண்கூடாகப் பார்த்தும் பயிற்சி பெற்றுச் செய்தல் வேண்டும். வன்மங்களில் அட்டையை கடிக்க விடுதல் கூடாது.

# 9. காயகற்பம்

உடல் அழியாது பாதுகாக்கும் முறை காயகற்ப சிகிச்சை எனப்படும். இந்த உடலை சேதமுறாவண்ணம் நல்ல நிலையில் பாதுகாப்பதற்கே மருத்துவம் செய்கிறோம். "உடம்பார் அழியில் உயிரார் அழிவர்" என்பது திருமூலர் வாக்கு . உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே என்றும் உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே என்றும் திருமூலர் மேலும் தெரிவித்துள்ளார். உடலில் பிணிகள் ஏற்பட்டு காயம் அழியாதிருக்க வேண்டி உண்பது காயகற்பம். இயற்கையான ஐந்து பருப்பொருட்களினாலும் உண்டான பொருட்களே அவை சேதமடையாமலும், மாற்றமுறாமலும் தன்னுருவில் மாறாமலும் இருப்பதற்காக மாற்றி அமைப்பதே வேதை. உழுத்துப் போகாமலும், கரையாமலும், கசியாமலும், உருகி புகையாமலும், உரைபடாமலும், வெடிக்காமலும், பொருட்களை கட்டுவதே கட்டு எனப்படும். இதனை செய்யும் முறை வேதித்தல் ஆகும். காயகற்பம் உண்டவர் உடலில் கத்தியால் கீறல் அறுத்தல் இயலாது.

இவ்வாறான வேதித்தல் முறைகளை செய்யும் மருத்துவர் வேதியர் எனவும் அழைக்கப்பட்டனர். இதுவே பிற்காலத்தில் ஆயுள் வேதியர் என மருத்துவர் அழைக்கப்படக் காரணமாயிற்று. ஆயுள் கெட்டு அழிந்து போகாமல் வேதிப்பதால் ஆயுள் வேதியர் என்றனர். இதுவே வடமொழியில் ஆயுர்வேதம் எனப்படுகிறது. ஆனால் இவ்வேதைகள் வடமொழி ஆயுர்வேதத்தில் இல்லை. வடமொழி ஆயுர் வேதம் காரணமாக தமிழ் மருத்துவர் ஆயும் வேதியர் என் அழைக்கப்படவில்லை.

**"அஞ்சி யுதி அழியாமல் காயந்தான்**
**மஞ்சிய கற்பம் வழங்கினோம் நூற்றெட்டு**
**தஞ்சமுறவே தான் தின்ன வல்லாக்கு**
**பஞ்ச நரை போய் பதின்கோடி வாழ்வரே"**

திருமூலா- ஞானம் 500

**"வேதையாலு லகமெலாம வேதிக்க பரிசவேதி**
**ஓதைநீருல குவப்ப உண்ணின் மாமேருவன்ன**
**பூதலத்தவர்க்குப் பஞ்சபூத தேகம் பொன்னாகும்**
**காதையதல்ல கற்பங் காய சித்திக்குமாமே."**

திருமூலர்-

கற்பமூலிகை 108 ஆகும். அவற்றைத் தேடி முறைப்படி உண்டால் காயம் கற்பகாலம் அழியாமல் இருக்கும். உலகமக்கள் நலத்தோடு வாழ இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை நல்ல நோக்கங்களுக்காக பயன்படுத்தி எல்லோரும் இன்பமாக வாழ வேண்டும்.

# நூலாசிரியரின் ஏனைய நூல்களின் விபரங்கள்

01. இராசசேகரம் (மூலிகை மருத்துவம்)- 1984

02. குலசேகரம் (விட மருத்துவம்)- 1985

03. தமிழர் சுகாதாரம் - 1986

04. பறாளை விநாயகர் தலவரலாறு - 1994

05. முத்தூர் அகத்தியர்- 2002

06. இராவணேசுவரன் இந்திர உலா - 2004

07. பல்லவராச்சியம் - 2007

# இனி வெளிவர இருப்பவை

01. காமத்துபால்

02. நால் வேதம்

03. மருத்துவ சோதிடம்

மருந்து, மருத்துவமலர் ஆகிய இதழ்களின் ஆசிரியர்

## சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகத்தினால் வெளியிடப்பட்ட புத்தகங்களின் விபரங்கள்

01. **உடப்பூர் வட பத்ரகாளி பனுவல்**
திருமதி செல்வம் கல்யாணசுந்தரம் - 1995

02. **திருகோணமலைத் தவக்கொழுந்து உயர்திரு மாதாஜி சதகம்** - 'MATHAJI' THE SPIRITUAL LIGHT FROM TRINCOMALEE – 1998

*– Author: Srimathy Selvam Kalyanasunderam Barrister-at-law*

03. **எமது ஞானகுரு பரம்பரை** – The Lineage of our Preceptors - 1998

*– Author: Srimathy Selvam Kalyanasunderam Barrister-at-law*

04. **திருமந்திரம் அடிப்படையில் யோகர் சுவாமிகள் அறிவுரைகள்** - சி. இராமநாதன் - 2000

05. **திருமூலர் திருமந்திரம்** (தேர்ந்தெடுத்த பாடல்கள்)
– Specially Selected Verses from *Thirumanthiram the Book of Knowledge that reveals the Super Power within Man* - WITH ENGLISH TRANSLATION -
– சி. இராமநாதன் - 2001

06. **எமது இவ்வுலக வாழ்வு திருமந்திர விளக்கம்**
- சி. இராமநாதன் - 2002

07. **Hindu Gems** – *Vyasa Kalyanasunderam* – 2003

08. **Sanganatham** - Monthly Magazine – *Members*

# பிழை திருத்தம்

| பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 01. | நலனனில் | நலனில் |
| 07. | இராக்தம் | இராக்கதம் |
| 09. | குருதிவாங்கள் கட்டிக் | குருதிவாங்கல் கட்டித் |
| 15. | ஒளுங்காக | ஒழுங்காக |
| 31. | சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி செகராச சேகரன் (கி.பி. 1280-1414) | இராஜா இராஜசிம்மன் (கி.பி. 1911 – 1920) |
| 32. | இராஜா இராஜசிம்மன் (கி.பி. 1911 – 1920) | சிங்கை ஆரியசக்கரவர்த்தி செகராசசேகரன் (கி.பி. 1380-1414) |
| 36. | முயற்சிகைகளையும் | முயற்சிகளையும் |
| | physicion | physician |
| 55. | முட்டுக்கள் | மூட்டுக்கள் |
| 66. | லவிதமான | பலவிதமான |
| 70. | ஆயும் வேதியர் | ஆயுள்வேதியர் |
| | என் | என |
| | திருமூலா | திருமூலர் |
| | **முன் அட்டை** | |
| | ஆராய்ச்சிப் | ஆராய்ச்சி |
| IV. | பல்லவராசசியம் | பல்லவராச்சியம் |
| | சுனாதன | சனாதன |
| V. | விழிப்புனர்ச்சி | விழிப்புணர்ச்சி |
| | ஊக்கமய் | ஊக்கமாய் |
| VI. | சுதிர்தரன் | சுகிர்தரன் |
| | பாராள மன்ற | பாராளுமன்ற |
| VII. | காப்பற்ற | காப்பாற்ற |
| IX. | ~~புசயவந~~ Grate | ~~புசநயவ~~ Great |
| | இராவா | இராசா |
| | குலசேகரள் | குலசேகரன் |
| | சேர்த்தவின் | சேர்த்த இன் |
| | **பின் அட்டை உட்பக்கம்** | |
| | இந்நுலாசிரியர் | இந்நூலாசிரியர் |
| | பாலநுல்களை | பலநூல்களை |
| | சுகிதரன் | சுகிர்தரன் |
| | **பின் அட்டை** | |
| | வலம் | மூலம் |
| | பா | ரூபா |
| | சட்டுறவு | கூட்டுறவு |
| | சட்டுறவு | கூட்டுறவு |
| | பா | ரூபா |
| | சட்டுறவு | கூட்டுறவு |
| | இனை | இணை |

DR P. RAMANATHAN
021 222 3538

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

இந்நுலாசிரியர் இதேபோல் எமது நாட்டிற்கும் எம் இனத்திற்கும் பயன் தரக்கூடிய இன்னும் பாலநுல்களை வெளியிட உடல், உள ஆரோக்கியத்துடனும், ஆக்க பூர்வமான சிந்தனையுடனும் குறையின்றி வாழவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

சுந்தரலிங்கம் சுகிதரன்
உப தலைவர்

சிறீஸ்கந்தராஜா தினேஸ்குமார்
பொதுச் செயளாளர்

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்



இலங்கை தமிழ் மருத்துவ ஆராய்ச்சி மன்றத்தின் தவிசாளரும், ஆராய்ச்சியாளருமான இவர் நூற்றுக்கு மேற்பட்ட புது மருந்துகளை உருவாக்கி அல்லற்படும் மக்களைக் காப்பாற்றுவதற்கு தமிழ் மருத்துவமுறையை பயன்படுத்தினார். இலங்கையில் தமிழர் பகுதிகளில் 1986லிருந்து சுகாதார சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தது. 'சுகவாழ்வே சிறந்த செல்வம்' என்ற நோக்கில் சித்தா சுகாதார சேவையை 1987ல் ஆரம்பித்து 1996 வரை நடாத்தினார். சிங்கை மன்னர் பரம்பரையில் தோன்றி வெள்ளைக்காரருக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய வீரவேந்தன் இராசசிம்மனின் பேரனாகிய இளவரசர் இராசசேகரம் துன்பப்படும் மக்களின் துயர் துடைக்க துணிவுடன் செயற்பட்டு தமிழ் மக்களின் வேதனையை தீர்ப்பதில் வெற்றிகண்டார். நெருக்கடியான 1988ல் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தின் வலம் பல்லாயிரக்கணக்கான பா பெறுமதியான தமிழ் மருந்துகளை இந்தியாவிலிருந்து தருவித்து நோயாளருக்கு இலவசமாக வழங்கினார். போர் காரணமாக 1990ல் தமிழ் மண்ணில் சுகாதார சேவைகள் செயலிழந்தன. இவருடைய சேவைகள் வேதனைப்படும் எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று, அரச அதிகாரிகளு் இவருக்கு உதவியும் ஒத்தாசையும் வழங்கினர். பனைதென்னை வள சட்டுறவு அமைப்புக்கள் 1992லிருந்து இச்சேவைக்கு ஆதரவு நல்கியதால் வட மாகாணத்தில் ஐம்பத்தொரு நிலையங்களில் இலவச மருத்துவ சேவை நடைபெற்றது. சட்டுறவு மருந்துச்சாலையை ஏற்படுத்தி, 150 வகை மருந்துகளை உற்பத்தி செய்து, 60 இலவச வைத்தியசாலைகளுக்கும் அரச, தனியார் வைத்தியசாலைகளுக்கும் விநியோகிக்கச் செய்தார். எதுவித வருமானமும் பெறாமல் கௌரவ சிறப்பு ஆலோசகராக இருந்து மாதாந்தம் வட மாகாணத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு இலட்ச பா பெறுமதியான மருந்துகளை பனைதென்னை சட்டுறவுச் சங்கங்கள் ஐந்து வருடங்களாக இலவசமாக வழங்கிவர ஆவன செய்தார். தமிழ் கலைகளை வாழ வைப்பதற்காக நாகசின்ன கலைஞர் சிதம்பரநாதனுக்கு 'கலைமாமணி' விருதும், திருகோணமலை அமரசிங்கத்திற்கு .'முத்தமிழ் மாமணி' விருதும், ஓவியர் ஞானகுருபரனுக்கு 'ஓவியமணி' விருதும் வழங்கியவர். தமிழின் 64 துறைகளிலும் தேர்ச்சிமிக்க பேரறிஞர் ஆவார்.

திரு. வியாசா கல்யாணசுந்தரம்
இணை செயலாளர்,
சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக்கழகம்.

250/=

ISBN 978 - 955 - 0547 - 00 - 5